# புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்

பேராசிரியர் நா. வானமாமலை

மக்கள் வெளியீடு

பேராசிரியர்
நா. வானமாமலை

# புதுக்கவிதை
# முற்போக்கும் பிற்போக்கும்

மக்கள் வெளியீடு 7
முதற்பதிப்பு மார்ச்சு 1975
இரண்டாம் பதிப்பு டிசம்பர் 1978
மூன்றாம் அச்சு அக்டோபர் 1999
உரிமை பதிவு
பொதுப்பதிப்பாசிரியர் **மே. து. ராசுகுமார்**

**விலை ரூபாய் முப்பது**

**மக்கள் வெளியீடு**
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை 600 002
தொலைபேசி 8545532

மக்கள் அச்சகம் சென்னை 600 002

# உள்ளடக்கம்


பதிப்புரை 4

மூன்றாம் அச்சின் பதிப்புரை 5

முன்னுரை 7

இலக்கியப் படைப்பின் பின்னணி
ஃபிராய்டிசம், சர்ரியலிசம்,
எக்சிஸ்டென்ஷியலிசம் முதலிய கொள்கைகள் 9

தற்கால இலக்கியப்படைப்புக் கொள்கைகள்
சிலவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் 19

புதுக்கவிதையின் உள்ளடக்கம்
தொடக்கக் காலம் 30

புதுக்கவிதையின் உள்ளடக்கம்
முற்போக்கும் பிற்போக்கும் 52

புதுக்கவிதையில் புதிய போக்கு
மீராவின் கனவுகள் 65

கம்யூனிஸ்டும் கவிதையும் 77

புதுக்கவிதை—பழமையும் புதுமையும் 89

# பதிப்புரை

தற்போது புதுக்கவிதை ஒரு இலக்கிய வடிவமாக உருவெடுத்துள்ளது. ஆயினும் புதுக்கவிதை 'கவிதைதான்' என்று ஒரு சாராரும் 'கவிதையல்ல' என்று மற்றொரு சாராரும் தொடங்கியிருக்கின்ற விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இது வாதத்தில் முடிவு செய்யப்பட முடியாததொன்றா கும். குறிப்பிட்டதொரு வடிவம் காலத்தினால் அங்கீகரிக்கப் பட்டால்தான் அது அந்தக் குறிப்பிட்ட காலத்தின் வெளிப் பாடாக இருக்க முடியும்.

ஆனாலும், புதுக்கவிதை ஓர் இயக்கமாக உருவாகி இன்றைய இளைய தலைமுறையினரின் உணர்வு வெளிப் பாட்டு வடிவமாக அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. தற்போது தோன்றுகின்ற புதுக்கவிதைகளின் கவித்துவம் குறித்துப் பலரும் எழுப்புகின்ற ஐயத்தில் இருக் கின்ற நியாயத்தைப் புரிந்துகொள்கின்ற நாம், அதே புதுக் கவிதைகள் கையாளுகின்ற கருப்பொருள்களையும் அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுக்கவிதையின் சாதனை என்ன, அதன் போக்குகள் எந்தெந்த வழிகளில் வாய்க்கால் அமைத்துக்கொண்டிருக்கின்றன என்பதைப் பகுத் தாராயும் நூல்கள் தமிழில் இதுவரை வரவில்லை. அந்த வழி யில் இது முதல் நூல் என்று பெருமை கொள்ளலாம்.

'ஆராய்ச்சி' ஆசிரியரும் ஆய்வுப் பேரறிஞருமான பேராசிரி யர் நா. வானமாமலை அவர்கள் தமிழகத்தில் தோன்றியிருக் கும் ஆராய்ச்சி உணர்வுக்கு அடித்தளமிட்ட பெருமைக் குரியவர். ஆய்வு முறையில் புதிய அணுகுமுறைகளை உரு வாக்கியவர்.

அவர் புதுக்கவிதையின் இரண்டு வகைப் போக்குகளையும் ஆய்ந்து தமக்கே உரிய பார்வையில் பகுத்து எழுதியுள்ள இந் நூல் 'புதுக்கவிதை'க்குப் புது விளக்காக அமைந்து வழிகாட்டு மென நம்புகின்றோம்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள முதலிரண்டு கட்டுரைகளும் 'தாமரை'யில் வெளியானவை. ஐந்தாவது கட்டுரை 'ஆராய்ச்சி' யில் வெளியிடப்பட்டது. ஏனைய கட்டுரைகள் இந்த நூலுக் காக எழுதப்பட்டன.

**மே. து. ராசு குமார்**

# மூன்றாம் அச்சுக்கான பதிப்புரை

ஆய்வுப்பேரறிஞர் நா. வானமாமலை அவர்களுடைய புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும் என்ற இந்த நூலின் முதல் இரண்டு பதிப்புகள் வெளியிடப்பட்டவுடனே விற்று விட்டன. இருப்பினும் இந்த மூன்றாவது அச்சு வெளிவர 21 ஆண்டுகள் இடைவெளி என்பது மிகுதிதான். நாவா அவர்களின் படைப்புகளைத் தொகுப்பு நூல்களாகக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது.

பொதுவான இலக்கியப் படைப்புகளின் அடிப்படைகளை விரிவாக வெளிப்படுத்தி, அதன் பின்னணியில் புதுக்கவிதைகளின் தன்மைகளை இந்நூலில் நாவா ஆராய்கிறார். முதல் பதிப்புக்கும் இரண்டாம் பதிப்புக்குமிடையிலான மூன்று ஆண்டுகளில் புதுக்கவிதையில் ஏற்பட்ட மாற்றங்களை நுணுக்கமாகக் கண்டு 'முன்னுரை'யில் குறிப்பிட்டதுடன், அடுத்து இதன் போக்குகளை மதிப்பிடவும் எண்ணியிருந்தார். ஆனால், அந்த வாய்ப்புக் கிடைக்காமல்போய்விட்டது.

பலவகைப்பட்ட பயிலுமுறைகளுக்குட்பட்ட பின், இன்று புதுக்கவிதை ஓர் இலக்கிய வடிவமாக உருவாகியுள்ளது. மரபுக் கவிதைகள் என்ற யாப்பிலக்கண வரம்புகளுக்கடங்கிய பழைய வடிவங்கள் பெரும்பாலும் இப்பொழுது எழுதப்படுவதில்லை. விரைவும் மாறுதல்களும் கொண்ட இன்றைய காலகட்டத்தைய மனித உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தக்கூடிய ஓர் இலக்கிய வடிவம் தோன்றுவதென்பது இயற்கையானதே. அதேபோன்று, பாட்டு வடிவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட, உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டு முறையிலும் வேறுபட்ட நாவல், சிறுகதை என உரைநடை இலக்கிய வகைகள் தோன்றியதைப் போன்று, பாட்டு அமைப்பிலும் வளர்ச்சி ஏற்படுவதைக் காலம் கட்டாயமாக்கியது.

ஆனால், இது எப்படியிருக்கவேண்டும் என்பதிலான தொடக்கக் காலக் குழப்பங்கள், பல ஐயங்களைத் தோற்றுவித்தன. பாட்டின் புதிய வளர்ச்சி என்பதற்கு மாறாக, உரைநடையின் வேறு வடிவம் எனத்தக்க வகையில் பல முயற்சிகள்—முளைகள் வெளிப்பட்டன. வரி பிரித்து எழுதுவதன்றி, உரைநடையினின்றும் பிரித்து இனங்காணக்கூடியவாறான தனித்தன்மைகள் எதுவும் காணப்படாத வகையில், இந்த முனைப்பு

களின் முதல் கவிஞர்கள் சிலரது படைப்புகள் அமைந்தன. பழைமை அழிப்பு என்ற புதிய விரைவில், மரபு மறுப்பு என்ற நெடிய நோக்கில், கவிதை வெறுப்பு என்ற கடிய போக்கில் சென்று இவர்கள் நின்றார்கள்.

இந்நூலில் விரிவாகவும் விளக்கமாகவும் அழுத்தமாகவும் கூறியிருப்பதைப்போன்று வேறுபாடான கொள்கைகளைக் கொண்டவர்கள் தங்கள் உளப்பாங்குக்கேற்றவாறு உள்ள டக்கத்தை முன்னிறுத்துகிறார்கள். உத்தியும் வெளிப்பாட்டு முறையும் அவரவர்களது இயல்புகளுக்கேற்ப இயைந்துவரு கின்றன. இதில் ஒருமைப்பாட்டைக் காண்பதென்பது இய லாதுதான். ஆனால், தொடக்க கால முயற்சிகளைக்கொண்டு, கற்பனை வறட்சியும் கொள்கைக் குழப்பங்களும் சிந்தனைத் தொடர்புமற்றதாகப் புதுக்கவிதை தனிவழியமைத்துக் கொள் ளுமோ என்ற எண்ணமும், இப்படியெழுதுவதுதான் புதுமை என்ற போக்கு இயற்கையான கவிஞர்களையும் ஒட்டிக் கொண்டு, அவர்களும் அவ்வழியிலேயே அடியொற்றிச் சென்று விடுவார்களோ என்ற அச்சமும் நேர்ந்தபோது, களமும் தளமும் வளமும் கொண்ட புலமையாளர்கள் புதுக்கவிதைக்குப் புத்துயிர் தந்தார்கள். ஆக்கப் படைப்புகளுக்கும் புதுக்கவிதை யைப் பயன்படுத்த முடியும் என்று காட்டினார்கள். பேரா. நாவா அவர்கள் முன்னுரை எழுதிய 1978ஆம் ஆண்டிலேயே முகிழ்ந்துவிட்ட இந்த முன்னேற்றம் இன்று முழுமை பெற்று வருகிறது என்றே கூறவேண்டும்.

அகவல், வெண்பா, கலி, வஞ்சி என்று தனித்தும், பின் பாவினங்களாகப் பல்கியும் காலத்துக்கேற்ற வடிவங்களைப் பெற்ற செய்யுள்—பாட்டு—கவிதை இன்று புதுக்கவிதையாக மலர்ந்துள்ளது. உரைநடையினின்றும் பிரிதான பாடலின் தனித்தன்மைகள் வாய்ந்த சிறப்புக் கூறுகள் கொண்டதாகவும் இது அமைந்திருக்கிறது. எந்த எழுத்தும் அழகியல் தன்மை களைப் புறக்கணிக்காமல், கற்பனை வளத்தில் கரைந்து போகாமல், சொல்லவந்த பொருளை மறைக்காமல் மனத்தை—கருத்தை ஈர்க்கும்போதுதான் இலக்கியமாகின்றது.

இந்த வகையில் புதுக்கவிதை செழுமை பெற்று, செம்மை யுற்று மேலும் வளரும்—வளம் பெறும் என்ற பேரா. நாவா அவர்களின் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறி வருகிறது என்றே கொள்ளலாம்.

06-10-1999 மே.து.ரா.

# முன்னுரை

புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும் என்னும் நூலின் இரண்டாவது பதிப்பை இப்பொழுது மக்கள் வெளியீடு வெளிக்கொண்டு வருகிறது. இப்பதிப்புக்கெனப் 'புதுக் கவிதை—பழமையும் புதுமையும்' என்ற புதிய கட்டுரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

1975இல் நூல் வெளிவந்த பிறகு புதுக்கவிதைப் போக்கு களில் சில முக்கிய மாறுபாடுகள் தோன்றியுள்ளன. அவற்றை நான் உணருகிறேன். ஆனால் புதுக்கவிதைத் தொகுப்புகள் பலவற்றையும் பத்திரிகைகளில் வெளிவந்த பிற கவிதைகளை யும் உடனடியாகத் தொகுத்து விரிவான மதிப்பீடு செய்து இந் நூலில் சேர்க்க எனக்குப் போதுமான நேரம் கிடைக்க வில்லை.

ஒரு கவிதையை ஒரு முறை படித்தவுடனே அதனைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் அதிமேதாவி நானல்ல. ஒரு கவிஞனது கவிதையைப் பலமுறை ஆழ்ந்து படித்த பின்னரே, முன்னர் அவன் எழுதிய கவிதைகளோடு ஒப்பிட்டு, அவனது இலக்கியப் போக்கை வகைப்படுத்த நான் முயலுவேன். நான் அவசர விமர்சனங்கள் எழுதுகிறவனல்ல. ஆழ்ந்த இலக்கிய ஆய்வின் முடிவுகளையே நான் வெளியிட விரும்புகிறேன். பொதுவாக இன்றைய புதுக்கவிதைகளில்,

1 புதிர்கள் குறைந்துள்ளன.
2 இரு வர்க்கங்களின் கருத்து மோதல்களிடையே நசுங்கி ஓலமிடும் 'நடுநிலைக்கவிஞ'னது ஓலங்கள் மிகக் குறைவாகவே கேட்கின்றன.
3 சமூக விமர்சனங்கள், பிரச்சினைகளுக்கு விடை தேடும் முயற்சிகளாக உருமாறியுள்ளன.
4 மனிதநேசம், உலக முன்னேற்றத்தில் நம்பிக்கை, உலக மக்களின் நல்வாழ்வில் நம்பிக்கை ஆகியன அதிகமாகி யுள்ளன. இக்குறிக்கோள்களுக்காகப் போராடுகிற மக்களின் போர்ப்பரணியாகக் கவிதை ஒலிக்கவேண் டும் என்ற நன்னோக்குத் தோன்றி வளருகின்ற போக்காக உள்ளது.

5 பிற்போக்குத் தத்துவங்களின் தாக்கம் (சர்ரியலிசம், எக்சிஸ்டென்ஷியலிசம், ஃபிராய்டிசம், நியோ ஃபிராய்டிசம்) குறைந்து, பொதுவான மார்க்சீயக் கொள்கையின் தாக்கம் மிகுந்துள்ளது.

இவை மேற்போக்காகப் புதுக்கவிதை இயக்கப் போக்குகளைக் கவனித்து வருபவர்களுக்குப் புலப்படாமல் போகாது. உலகமளாவிய மக்கள் இயக்கங்கள் கொடுமைகளையும் அடிமைத்தனத்தையும் நொறுக்கி வீழ்த்த முனைகின்றன. இவ்வியக்கங்களின் தாக்கம் இலக்கியத்தில் ஓர் எழுச்சியை ஏற்படுத்துகின்றது. சிந்தனைக் குழப்பங்கள், உணர்ச்சிக் குழப்பங்கள் குறைந்து, தெளிவான நீரோடைபோலப் புதுக்கவிதை செல்லுகிறது. சமூக ஆய்வின் அடிப்படையில் சமூக வர்க்கப் பிரிவுகளின்—உறவுகளின் மாற்றங்களால் சமூகத்தையே மாற்றுகிற மானுட சக்தியின் பெருமையைப் புதுக்கவிதை பறைசாற்றுகிறது. இது ஒரு பெரிய மாற்றம். இந்த வகையான மாற்றம்தான் வளருகிற மாற்றம். மற்றைய மாற்றங்கள் நிலையானதும் அல்ல; வளர்வனவும் அல்ல.

இப்போக்கில் முன்னேறிச் செல்லுகிற புதுக்கவிதையோட்டத்தை—புதிய புதிய உத்திகளாலும் கற்பனைகளாலும் நீரோட்டத்தை அழகுபடுத்தும் கவிஞர்களை நாம் நுணுகி ஆராய்ந்து மதிப்பிடுவோம். இப்பொழுது அதற்குரிய நேரமும் அவகாசமும் எனக்குக் கிடைக்கவில்லை. எனவே மீண்டுமொரு முறை இப்பணியை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன்.

நா. வானமாமலை

# இலக்கியப் படைப்பின் பின்னணி

## ஃபிராய்டிசம், சர்ரியலிசம், எக்சிஸ்டென்ஷியலிசம் முதலிய கொள்கைகள்

ஃபிராய்டிசம், நரம்பு நோய் வியாதிகளுக்கும் சித்தங்களுக்கும் ஆய்வு முறையாகவும் சிகிச்சை முறையாகவும் தொடங்கியது. பிற்காலத்தில் அது உலகக் கண்ணோட்டமாகவே மாற்றப்பட்டுவிட்டது. முதலாளித்துவ உலகில் கலை இலக்கியம், சமூகவியல், வரலாறு, மானிடவியல் முதலிய துறைகளனைத்திலும் இக்கொள்கை செல்வாக்குப் பெற்றுள்ளது. மேனாட்டு அறிஞர்களைப் பின்பற்றும் தமிழ்நாட்டுக் கலை இலக்கியவாதிகளும் இக்கொள்கையின் அடிப்படையில் கலையையும் இலக்கியத்தையும் படைத்து வருகிறார்கள். இலக்கிய விமரிசனங்களும் செய்து வருகிறார்கள். ஃபிராய்டிசத்தின் தோற்றம், வளர்ச்சி, அதனடிப்படையில் எழுந்த கலை இலக்கியக் கொள்கைகளின் சமூக வர்க்கத்தன்மை ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

ஃபிராய்டிசம் என்பது ஓர் உளவியல் கொள்கை. இதனையே சில மேனாட்டு ஆசிரியர்கள் உலகக் கண்ணோட்டமாகக் காண்கிறார்கள். இக்கொள்கையின் முதலாசிரியர் ஸிக்மண்ட் ஃபிராய்டு. இவர் நரம்பு நோய்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவ நிபுணராக விளங்கினார். சித்தப்பிரமை, மூளைக் கோளாறு, உறக்கமின்மை, ஹிஸ்டீரியா போன்ற மனநோய் உடையவர்களைப் பரிசோதித்து அவற்றிற்குக் காரணம் எவை என்பது குறித்து ஒரு பொதுக் கொள்கையை இவர் உருவாக்கினார். இக்கொள்கையில் மனித நடத்தையின் மூல காரணம் எது என்பதையும் மனித நடத்தையை ஆராய்ந்து அறிய வழிமுறைகள் எவை என்பனவற்றையும் அவர் விளக்கினார்.

ஃபிராய்டு தமது கொள்கையை உருவாக்க உடலுறுப்புகளின் செயலால், உள்ள நிகழ்ச்சிகளை விளக்கும் விஞ்ஞான முறையைக் கைவிட்டு அகவயமுறை ஆராய்ச்சிகளைக் கையாண்டார். அம்முறையில் மனித நடத்தைக்குரிய காரணங்களை ஆராய்ந்தார். இவ்வாறாக ஓர் அகவயமான ஆய்வு முறையையும் அதன் அடிப்படையில் அகவயமான பொதுக்

கொள்கையையும் உருவாக்கினார். மனித நடத்தை குறித்து அவரது கருத்தோட்டத்தை அறிந்துகொள்ளக் கீழ்வரும் இரண்டு வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடையாக அவரது கொள்கையின் அடிப்படையில் விளக்கம் கூறுவோம்:

1 மனித நடத்தையின் இயக்கு சக்தி எது?
2 அவ்வியக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதிகள் எவை?

இவ்வினாக்களுக்கு ஃபிராய்டு கூறும் விடை வருமாறு: மனிதன் இன்பம் நாடுகிறான். இன்பம் நாடும் உணர்ச்சி Id என்றும் Libido என்றும் கூறப்படும். இது இணை விழைச்சுத் தன்மையுடையது (sexual). இதுவே மனிதனது பிரதானமான உணர்ச்சி. இதுவே அவனது அக இயக்கத்திற்கும் புற இயக்கத்திற்கும் அடிப்படையான இயக்கு சக்தியாகும்.

அவனது இன்ப நாட்டத்திற்குத் தடையாக உள்ளது சமூகக் கட்டுப்பாடுகள். இக்கட்டுப்பாடுகள் விலங்குகளுக்கு இல்லை. மனித சமுதாயத்தால் தடுக்கப்பட்டவைகள், மனிதனது இன்ப நாட்டத்திற்குத் தடைச் சுவர்களாக இருக்கின்றன. அவனது இன்ப ஆசை தடுக்கப்படும்பொழுது அது மறைந்துவிடுவதில்லை. அது உணர்விலிருந்து (conscious), ஆழ்ந்த (sub conscious) மட்டத்திற்குச் சென்று விடுகிறது. இவ்வாறு பல தடைப்பட்ட ஆசைகளால் உருவானது ஆழ் உணர்வு (sub conscious). சில ஆசைகள் தவறானவையென்று உணர்வு கருதி அவை நிறைவேறாமற் போனால், அவை ஆழ்ந்த உணர்விற்குச் சென்றுவிடும். இவை சமயம் நேரும் பொழுது உணர்விற்குத் தெரியாமல் மாறுவேடத்தில் வெளிப்படும். இவ்வாறு உணர்வுலகத்திற்கும் ஆழ் உணர்வுலகத்திற்கும் போராட்டம் நடைபெறும்.

உதாரணமாக, ஒரு மனிதன் ஒரு துணிக்கடைக்குப் போகிறான். பல நிறத் துணிகளைக் கடைக்காரன் எடுத்தெறிகிறான். பச்சை நிறத்தில் கரும்புள்ளிகளுள்ள ஒரு துணியை அவன் தடவிப் பார்க்கிறான். பலமுறை தடவிப் பார்க்கிறான். கடைக்காரன் அதைப் பார்த்து "இது வேண்டுமா?" என்று கேட்கிறான். அவன் உணர்ச்சியோடு "வேண்டாம் வேண்டாம்" என்று சொல்லிவிட்டு எதனையும் வாங்காமல் போய் விடுகிறான். பச்சையும் கருப்புமான நிறங்களைக் கண்டபோதெல்லாம் அவன் சமநிலையிழக்கிறான். பதற்றம் ஏற்படுகிறது. இவன் ஃபிராய்டிடம் உறக்கம் வரவில்லை என்று சிகிச்சைக்குப் போகிறான்.

தமது கொள்கையின்படி ஃபிராய்ட் இவனது செய்கையை விளக்குகிறார். பச்சை, கருப்புக்கும் இவனது பதற்றத்திற்கும் தொடர்பு இருக்கிறது என்று ஃபிராய்டு கருதி பல கேள்விகள் கேட்டு இவனது நடத்தைக்குக் காரணம் கண்டுபிடித்தார். கருப்பு நிறமான செருப்பும் பச்சை நிறமான உடையும் அணிந்த ஒருத்தியைப் பார்த்து அவன் ஆசை கொண்டான். அவளைப் பின் தொடர்ந்தான். அவள் வீடு சென்றதும் மணமானவள் என்று அறிந்துகொண்டான். ஆசை நிறைவேறச் சமூகம் தடைபோட்டது. உணர்வு நிலையில் அதனை ஒப்புக்கொண்டான். ஆனால் தடைப்பட்ட இவ்வாசை உணர்வு மட்டத்திற்குக் கீழே சென்று (Sub Conscious) அதன் பகுதியாகிவிடுகிறது. இப்பொழுது வெளிவரும் வாய்ப்பு நோக்கி அங்கேயே பதுங்கியிருக்கிறது. பச்சையும் கருப்பும் சேர்ந்த பொருள்களைக் காணும்போதெல்லாம் உணர்ச்சி வெளிப்படுகிறது. ஆனால் அவனது உணர்விற்கு இதன் காரணம் தெரியவில்லை. அடிக்கடி 'பச்சை கருப்பு' நிறக் கூட்டின்மீது ஆசையும், ஆனால் தடை செய்தால், "வேண்டாம் வேண்டாம்" என்ற எதிர்ப்புணர்ச்சியும் தோன்றுகின்றன.

இவ்வாறு காரணமறியாமல் நாம் செயல் புரிவது போலவே, கனவிலும் காரணமறியாமல் பல நிகழ்ச்சிகளைக் காணலாம். இதற்குக் காரணம் விழித்திருக்கும் நிலையில் ஆழ் உணர்விலிருந்து அடக்கப்பட்ட உணர்ச்சி வெளியாவது போலவே, உறக்க நிலையில் கனவில் வெளிப்படலாம். உதாரணமாக மேற்கூறிய மனிதன் பச்சைக் கொடியிலுள்ள கருப்புத் திராட்சைப்பழம் தன் வாயில் விழுவது போலக் கனவு கண்டான்.

'இட்' உணர்ச்சி ஒரு இடையறாத வெள்ளம். அது தடைப்படுவதுதான் 'ஆழ் உணர்வு' ஏற்படக் காரணம். ஆழ் உணர்வுக்கும் உணர்வுக்கும் இடையில் ஒரு தடை அதிகாரி போன்ற உணர்வு இருக்கிறது. இது தடை செய்வதால்தான் தடைப்பட்ட உணர்ச்சிகள் உணர்வு நிலைக்கு வருவதில்லை. அது சற்றே ஓய்ந்திருக்கும்பொழுது, அடக்கப்பட்ட உணர்ச்சி வெளியாகிறது.

அடக்கப்பட்ட உணர்ச்சிக்கும் உணர்வு நிலைக்குமுள்ள முரண்பாட்டிற்குச் 'சிக்கல்' (Complex) என்று பெயர். அவற்றைப் பலவகைகளாக ஃபிராய்டு பிரித்துக் கூறுகிறார். அவற்றுள் சில:

**நார்ஸிஸஸ் சிக்கல்:** தன்னைத் தானே மிதமிஞ்சி நேசிக்கும் சிக்கல். இது அடக்கப்பட்ட ஆசையால் வருவது.

தன்னைத்தானே விரும்புபவன் பிறரோடு பழகவும் கூடவும் விரும்பமாட்டான்.

**ஓடிபஸ் சிக்கல்:** தாய் மீது அளவு மீறிய அன்பு. இதுவும் அடக்கப்படும் ஆசையால் வருவது.

**ஹெர்குலீஸ் சிக்கல்:** எல்லோரையும் அடக்கியாளும் ஆசை.

இவையெல்லாம் முரண்பாடுகளின் விளைவுகள்.

மனிதனுடைய மிக உயர்ந்த ஆர்வங்களெல்லாம் 'இட்' என்னும் உணர்ச்சி அடக்கப்படும்பொழுது வேறு வழிகளில் வெளியாவதே அடக்கப்பட்ட Id. கடவுள் பக்தியாகவோ, தேசபக்தியாகவோ, மனிதாபிமானமாகவோ வெளிப்படலாம். இதனை Sub limation என்று ஃபிராய்டு கூறுவார்.

தான் விரும்பும் பெண் தன்னைத் தகுதியில்லாதவனென்று கருதினால் அடக்கப்பட்ட ஆசை 'தாழ்வுச் சிக்கலாக' ஆழ் உணர்வில் சென்று ஒளிந்துகொள்கிறது. இவர்கள் முயன்றால் பல துறைகளில் முன் வந்து தங்கள் தகுதியை வெளிப்படுத்து வார்கள். அப்பொழுது உயர்வுச் சிக்கல் (Superiority Complex) ஏற்படும்.

சிக்கல்கள் திர அவற்றை உணர்வுநிலைக்குக் கொண்டுவர வேண்டும். இம்முயற்சியே ஃபிராய்டின் சிகிச்சை முறை. இதனை ஸைக்கோ அனலிஸிஸ் என்று ஃபிராய்டு அழைக் கிறார்.

ஆழ் உணர்விலுள்ள 'சிக்கல்களை' அறிந்து அவற்றை உணர்வுநிலைக்குக் கொண்டுவர, கனவுகள், பேச்சில் தவறு கள், பதற்றங்கள் முதலியவற்றைக் கேள்விகள் கேட்டு அறிய வேண்டும். காரணம் அது தடைப்பட்ட உணர்ச்சியாக இருக் கும். அதனை அறிந்தால் அதை மாற்றுருவமாக்க (Sub limate) வழி கூறவேண்டும்.

நரம்பு நோயாளிகள், ஹிஸ்டீரியா நோயாளிகள், உள்ளத் திரிபுடையவர்களுக்கு இவ்விதிகள் பொருந்துமென ஃபிராய்டு முதலில் கருதினார். ஆனால் கடைசிக் காலத்தில், இக்கொள் கையை எல்லா மனிதர்களுக்கும் சமூக நிகழ்ச்சிகளுக்கும் சமூக வரலாற்றிற்கும் பொருத்தி விளக்கம் கூறத் தொடங்கினார். இதனைப் பின்பற்றிப் பல எழுத்தாளர்கள் மனிதனது நடத்தை யையும் அக இயக்கத்தையும் விளக்கத் தொடங்கினர். இக் கொள்கையின் தோற்றத்திற்குச் சமூகச் சூழல் எது?

ஃபிராய்டு ஏகபோகங்கள் வளர்ச்சியுற்ற காலத்தில் வாழ்ந் தார். ஏகபோக வளர்ச்சிப் போக்கில், சிறு முதலாளிகள் அழிந்தனர். நடுத்தர வர்க்கம் சீர்குலைந்தது. இவர்கள் அழிவு அபாயத்தை எண்ணி நடுங்கினர். இவர்கள் யாவரும் தனிமனித

சுதந்திரம் பற்றி முழங்கியவர்கள். இச்சுதந்திரம் போலி யானது. உண்மையில் ஏகபோகத்தின் அடிமைகளாக இருத்தலே தங்களுக்கு விதித்த விதியோ என்று எண்ணினர். அந்நிலையை யும் ஒப்புக்கொள்ள முடியாமல், சுதந்திரத்தையும் விட்டுவிட விருப்பமில்லாமல் சிக்கித் தவித்தனர். ஏகபோக வளர்ச்சியின் போது, வர்க்கபோதம் கொண்ட தொழிலாளி வர்க்கம் அதனை எதிர்த்துச் சமூக மாறுதலுக்காக, சோசலிசத்தைத் தனது குறிக்கோளாகக் கொண்டு போராடியது. அது கூட்டு அமைப்பு. கூட்டு அமைப்பான சோசலிசத்திற்குப் போராடி யது. தங்கள் தனி உணர்வை, அக்கூட்டு உணர்வோடு இணைத் துக்கொள்ள 'தனி மனிதச் சுதந்திரப் பற்று' இடந்தரவில்லை. இவ்வாறு ஊசலாடிய சிறு முதலாளியும் நடுத்தர வர்க்கத் தினரும், வருங்கால நம்பிக்கையிழந்து, சோர்வுற்றுச் சோகக் குரலில் சமூகக் கொள்கைத் தத்துவங்களையும் இலக்கியங் களையும் உருவாக்கினர்.

அக்காலத்தைப் பற்றி மாக்சிம் கார்க்கி கீழ்வருமாறு கூறு கிறார்:

> ஒரு நீதி நெறிக்கொள்கையை உருவாக்க, ஒருவரை யொருவர் கடித்துத் தின்பதற்கு வெறிகொண்ட இவர்கள் முயன்றனர். கூர்மையான தன்னுணர்வும் தன்னோக்கு முடையவர்கள் தங்களைப் போன்றே அடுத்தவர்கள் இருந் தால் பொறாமையும் பகைமையும் கொண்டனர். மனித உறவுகளில் ஒருவர் மற்றொருவர் மீது பொறாமையும் சந்தேகமும் கொள்வது சாதாரண நிலைமையாயிற்று. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் கால வழக்க மாயிற்று. நல்ல உடல் நலமுள்ளவர்கள் இரண்டு மாதத் தில் பித்துக்குளிகளாகவும் சித்த விகாரமுள்ளவர்களாக வும் ஆயினர். நேற்று வரை நண்பர்களாக இருந்தவர் களை, அலட்சியத்தோடு அற்பமாக நினைக்கும் மன நிலைக்கு மாறினர்.
>
> நமது அறிவாளிகளின் 'தனி மனித சுதந்திர உணர்வு' சித்தப்பிரமைக்கும் முழுப் பைத்தியத்திற்கும் அவர்களை ஆளாக்கியது. இவ்வாறு 'தனிமனிதம்' என்ற கொள்கையுடையவர்களது உள்ளங்கள் ஒடிந்து, மனம் குழம்பி, உயர்வு எண்ணங்கள் குன்றி பள்ளத்தில் வீழ்ந்து விட்டனர். இவர்கள் மனநோயால் பீடிக்கப்பட்டு உளறு கிறார்கள். தங்கள்மீது கழிவிரக்கம் கொண்டு கதறுகிறார் கள். தங்கள்மீது பிறரும் இரக்கம் காட்டவேண்டும் என்று உரக்கக் கூவுகிறார்கள்.

ஆம்! இவர்கள்தான் தங்களைத் தாங்களே காதலித்தவர்கள். பிறரைக் காதலிக்கத் தெரியாதவர்கள். இன்று இவர்களுக்குப் பிறர் அனுதாபம் தேவையாம். மனிதர் கூட்டத்தை மந்தையென்று கேலி செய்தவர்களுக்கு இம்மந்தையின் இரக்கம் வேண்டுமாம்!

சிறு முதலாளிகள், நடுத்தர வர்க்கத்தினர், அறிவாளிகள் நிலை இதுவாக, பெருமுதலாளிகள், தமக்கெதிராகத் திரண்டு வரும் மக்கள் கூட்டத்தையும் அதன் தலைமையில் நிற்கும் தொழிலாளி வர்க்கத்தையும் கண்டு அஞ்சி நடுங்கிப் புலம்பினர். தைரியமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காகப் போலி வீரவாசகங்கள் பேசினர். அதனோடு தம்மைப் பாதுகாத்துக் கொள்பவர்களையும் திரட்டிக்கொண்டனர்.

ஏகபோகங்கள் வளர்ச்சியுற்று, மேல்தர வர்க்கங்களின் மக்கள் உள்ளத்தில் பயமும் உறுதித் தளர்ச்சியும் ஏற்பட்ட காலத்தில், நரம்பு வியாதிகளும் சித்தக் கோளாறுகளும் அதிகப்பட்டன.

தனிமனிதம் (Individualism) என்ற கொள்கையில் ஊறிய ஃபிராய்டு, சமூகத்திலிருந்தும், உற்பத்தி வளர்ச்சிப் போக்குகள் தோற்றுவித்த மனித உறவு நிலைகளினின்றும் மனிதனைப் பிரித்து, மனிதனுடைய உள்ளத்தைத் தோண்டிப் பார்த்தது இயற்கைதான்.

விஞ்ஞானத்திற்குப் பொதுவான விதிகளையும் ஆய்வு முறைகளையும் கைவிட்டு, அகவயமான கற்பனை முறைகளைக் கையாண்டு தமது கொள்கைகளை உருவாக்கினார்.

சமூக இயலுக்கும் வரலாற்றிற்கும் இக்கொள்கையை அடிப்படையாகக் கொள்ளும்பொழுது, சமூகத்தை ஒதுக்கி, தனி மனித நடத்தையை 'காம்ப்ளெக்ஸ்' அடிப்படையில் ஆராய்வதாகச் சுருங்கிவிடும். இக்கொள்கையின்படி மனித இயக்கமும் சமூக இயக்கமும் அடக்கப்பட்ட ஆசைகளின் தொகுப்பான 'ஆழ் உணர்வின்' லீலைகளே.

இக்கொள்கையில் மனித நடத்தைக்கெல்லாம் காரணம் 'ஆழ் உணர்வு' அல்லது Sexual energy என்பதற்குப் பெரும் எதிர்ப்புத் தோன்றிய பின் ஃபிராய்டின் சீடர்கள் அடிப்படை அதுவாயினும், அவ்வுணர்ச்சிக்குப் பல வாய்க்கால்கள் உண்டென்றும், 'அறிவு ஆசை, ஆதிக்க ஆசை' முதலியன அதில் சேர்க்கப்படவேண்டுமெனவும் கூறினர். இவருடைய முக்கிய சீடர்கள் ஆட்லர், ஜங் முதலியவர்கள் நவீன ஃபிராய்டிசத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒப்புக்கொண்டே இன்ப நுகர்வு ஆசை, இணைவிழைச்சு (Sex) மட்டுமல்ல வென்றும் பிற ஆசை

களும் அதனுள் அடங்குமெனவும் கூறுவர். இவர்கள் ஆய்வு முறையிலும் அதீதக் கற்பனைகளை நீக்கி மட்டுப்படுத்தினர்.

ஆயினும், சமூக நிகழ்ச்சிகளுக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் Sub conscious தான் காரணம் என்பதை இவர்கள் ஏற்றுக்கொள்வர்.

நரம்புமண்டல ஆராய்ச்சி, உள நோய் சிகிச்சை என்ற துறைகளிலிருந்து தோன்றிய இக்கொள்கை தனது பிறப்பிடத்திலேயே தோற்றுப்போய் விட்டது; உடலியல் இயக்க விதிகளின்படியே நரம்புமண்டலம், சிறுமூளை இவற்றின் செயல் முறையை ஆராய்ந்து மன இயக்கத்தின் நிகழ்ச்சிகளை இவான் பாவ்லாவும் அவரது சீடர்களும் விளக்கினர். எனவே, உள்ள நிகழ்ச்சிகளைக் கற்பனைக் கதைகள் கொண்டு விளக்கவேண்டிய அவசியம் இன்றில்லை. இயற்கை விஞ்ஞானச் சோதனை முறைகளாலும், அனுமானம், பொதுமைப்படுத்தி விதிகளை வகுத்தல் முதலிய விஞ்ஞான வழிகளாலும் இவற்றை அறியலாம்.

ஆயினும் கலையிலும் இலக்கியத்திலும் இதன் செல்வாக்கு பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளில் பெரிதும் காணப்படுகிறது.

இக்கொள்கையின் அடிப்படையில்தான் சர்ரியலிசம் எக்சிஸ்டென்ஷியலிசம் என்ற கலை-இலக்கியக்கொள்கைகள் தோன்றின. இவற்றின் தத்துவ அடிப்படைகள் 'காண்டி'ன் உலகக் கண்ணோட்டமாகும்.

சர்ரியலிசம் முதல் உலகப் போருக்குப் பின் பிரான்ஸில் தோன்றியது. போருக்குப் பின் முதிர்ந்துவிட்ட முதலாளித்துவ முரண்பாடுகளின் விளைவான கருத்துக்களே இக்கொள்கையின் அடிப்படை. அதன் தத்துவ அடிப்படைகள் ஃபிராய்டின் அகவயக் கொள்கையின் மீது அமைந்தவை. ஃபிராய்டிச வாதிகள் இணைவிழைச்சு உணர்ச்சியின் படைப்பும் விளைவும் தான் கலையும் இலக்கியமும் என்று கருதுகின்றனர். சர்ரியலிசம் இதன் அடிப்படையில்தான் இணைவிழைச்சுத் துடிப்புகளும் (Sexual impulses) வாழ்க்கை அச்சமும் இறப்பு அச்சமும் தான் கலையின் உள்ளடக்கமாக இருத்தல்வேண்டுமெனக் கூறுகிறது.

போருக்குப் பின் முதிர்ச்சியடைந்த முதலாளித்துவ முரண்பாடுகள் சமுதாயத்தை வறண்ட பாலைவனமாக்கிவிடும்; அதனை மனிதனால் தடுக்க முடியாதென்ற சோக ஓலம் சர்ரியலிஸ்டுகள் படைப்புகளில் காணப்படுகின்றன. சிலர் வாழ்க்கையின்மீது அருவருப்பும் அச்சமும் ஏற்படும்படி வாழ்க்கையைக் கோரமாகச் சித்தரித்துக்காட்டி, மனிதனது வாழ்க்கைப்பற்றை

யும் வருங்காலத்தில் நம்பிக்கையையும் வறண்டுபோகச் செய்கின்றனர். இவர்களுக்கு மிகவும் பிடித்த இலக்கியக் கருக்கள் பயங்கரக் கனவுகள், உருவெளித்தோற்றங்கள், பயங்கர மனோ விகாரங்கள் முதலியன. நாவல்களிலும் கதைகளிலும் அமெரிக்க முதலாளித்துவ எழுத்தாளர்களில் பலர் இவ்விலக்கிய வழியில் செல்கின்றனர். அவர்கள் எஸ்ராபௌண்ட், ஜேம்ஸ் ஜாய்ஸ், ஃபிரான்ஸ் காப்ஃகா முதலியோர் ஆவர். கவிதையில் இப்போக்கின் முதல்வர் டி. எஸ். எலியட். இரண்டாம் உலகப் போரின் பின் உலக நிலையைப் பயங்கர முட்செடிகளும் வனவிலங்குகளும் நிறைந்த பாலைவனமாக, 'வேஸ்ட்லேண்ட்' என்ற கவிதையில் இவர் சித்தரிக்கிறார். மனிதன் உருப்படமுடியாத பிராணி. இவன் விலங்கிலும் தாழ்ந்த வாழ்க்கையை நோக்கிச் செல்கிறான் என்பது இவரது கொள்கை.

இவர்களது செல்வாக்கு, தற்காலத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்களில் பெரிதும் காணப்படுகிறது. எந்த அளவுக்கு இவர்களது கொள்கையின் பாதிப்பு தமிழ் நாவல்களிலும் புதுக்கவிதையிலும் சிறுகதைகளிலும் உள்ளன வென்று நாம் ஆராய்தல் வேண்டும்.

முன்னர் கூறியபடி ஜீன்பால் சார்த்ரே என்ற புகழ்பெற்ற பிரெஞ்சுக் கவிஞர் எக்சிஸ்டென்ஷியலிசம் என்ற தத்துவத்திலிருந்தும், ஃபிராய்டின் கொள்கைகளிலிருந்தும் தமது கலை இலக்கியக் கொள்கையை உருவாக்கினார். அவரைப் பின்பற்றுவோர் ஐரோப்பிய இலக்கிய உலகத்தில் மிகப்பலர். இவர்களில் ஒரு பிரிவினர் சமயத்திற்கு அழுத்தம் கொடுப்பவர்கள். இவர்கள் மார்ஸல், ஜாஸ்பர்ஸ், ஸர்டியேவ் முதலியோர். சார்த்ரே இப்பிரிவைச் சேர்ந்தவரல்லர். அவர் நாத்திக எக்சிஸ்டென்ஷியலிசம் (Atheistic Existentialism) என்ற பிரிவைச் சேர்ந்தவர். இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் சார்த்ரே, ஹைடக்கர், காமஸ் முதலியோர். ஐரோப்பியத் தத்துவங்கள், அறிபவன், அறியப்படுவது (Subject-Object) என்ற கருத்துக்களை விளக்குகின்றன. இவற்றிடையே முரண்நிலை இருப்பதாகக் கருதுகின்றன. ஆனால், எக்சிஸ்டென்ஷியலிஸ்டுகள் இதனை மறுத்து, (Subject-Object) அறிபவனும் அறியப்படுவதும் ஐக்கிய நிலையில் இருப்பதாகக் கருதுவர். இவ்வொற்றுமையை 'எக்சிஸ்டென்ஸ்' என்று கூறுவர். இவ்வொற்றுமையை அறிய மனிதன் 'எல்லை நிலையில்' (Border line Situation) இருத்தல்வேண்டும். அது சாவு போன்ற நிலை. உயிரோடிருப்பதும், அதனை நீக்குவதும் முரண்பட்டவை. அதன் எல்லைநிலை சாவு. இந்நிலையில் உலகம்

அறிபவனுக்கு மிக நெருக்கமாக வருகிறது. பிரபஞ்சத்தை அறிய இவர்கள் உள்ளுணர்வையே நம்புகிறார்கள். விஞ் ஞான முறைகளை உதறித் தள்ளிவிடுகிறார்கள்.

சுதந்திரம் இவர்களுக்கு மிக முக்கியமான கொள்கை. மனிதன் முன்னால் பல வாய்ப்புகள் இருப்பதில் அவனுக்கு இஷ்டமானதைத் தேர்ந்துகொள்ளும் உரிமையே சுதந்திரம் (Voluntary choice). இங்கு சூழ்நிலையை, மனிதனது தேர்ந் தெடுக்கும் உரிமையினின்று பிரித்து விடுகிறார்கள். சுதந் திரத்தை ஓர் ஒழுக்கப் பிரச்சினையாக்கி மிக மிஞ்சிய தனிமனி தத்தை (Extreme individualism) இவர்கள் குறிக்கோளாகக் கொண்டு வழிபாடு செய்கிறார்கள். சமூகத்திலிருந்து மனிதன் சுதந்திரமடையவேண்டும் என்ற கோரிக்கையும் இதனின்றும் எழுகின்றது. சமூகநிலைகளையும் முரண்பாடுகளையும் வரலாற்றுண்மைகளையும் மறுத்து, 'மனிதன் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்கிறான்' (Man is what he makes himself); இவ்வாறு உருவாக்குவது புறவய சமூக விஞ்ஞான விதிகளுக்கு உட்பட்டு அல்ல; மனித உள்ளத்தின் நிகழ்ச்சிகளும் சுதந்திர ஆர்வமும் சமூக நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டன என்று இவர் கள் கூறுகிறார்கள்.

சார்த்ரே இந்த அகவயமான, ஆன்மீகக் கொள்கைகளை, இதற்கு நேர்முரணான மார்க்சீயத் தத்துவங்களின் அடிப்படை யில் விளக்க முயன்றார். அதனால் விசித்திரமான பல முரண் பாடுகள் சர்ரியலிசக் கொள்கையில் தோன்றின.

இக்கொள்கையின் செல்வாக்கு ஐரோப்பிய இலக்கியத்தில் மிகுதியும் உண்டு. போராடும் வர்க்கங்களிடையே ஊசலாடும் அறிவாளி வர்க்கத்தின் முரண்பாட்டிற்கும் சிந்தனை வறட்சிக் கும் இது ஓர் உதாரணம். இதன் செல்வாக்கு எந்த அளவு தமிழ்ப் படைப்பிலக்கியங்களில் உள்ளன என்று ஆராய வேண்டும்.

இக்கொள்கைகள் யாவும் அகவயமானவை. சமுதாய வளர்ச்சியின் காரணங்களும், மனிதனுக்கு மனிதன் உற்பத்தி முறையில் உறவு ஏற்படும் போக்குகளும், வர்க்கப்பிரிவு, முரண் பாடுகள், போராட்டங்கள் இவை யாவும் அவர்கள் நோக்கில் படுவதில்லை. முதலாளித்துவச் சமுதாயத்தை ஒழிக்க முன் னணிப்படையாக நிற்கும் தொழிலாளி வர்க்கத்தையும் அதன் வெற்றிகளையும் அவ்வெற்றிகளால் மனிதன் உலகிலேயே இன்ப வாழ்வு பெறலாம் என்று நம்பிக்கை கொள்வதையும் அவர்கள் மறுக்கின்றனர். சுரண்டுவோருக்கும் சுரண்டப்படு வோருக்கும் இடையில் நடைபெறும் வர்க்கப் போராட்டத் தைக் கண்களை மூடிக்கொண்டு பார்க்க மறுக்கிறார்கள்.

மனிதனது எதிர்கால நம்பிக்கை, இச்சமுதாயத்தை மாற்ற நடைபெறும் மாபெரும் புரட்சிப்போராட்டமும், அதில் தனி மனிதன் இணைவதும்தான் என்பதை இவர்கள் மறுப்பதால் சமுதாயம் மறுக்கும் சுதந்திரம், தாங்கள் தேர்ந்தெடுக்கத் தக்கதாக இருக்கிறதென்று கூறுகிறார்கள். இச்சமுதாயத்தை அழித்துப் புதிய உலகை நிறுவ முன்னேற்றும் சக்திகளோடு ஒன்றி நிற்பது சகல மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடு வதாகும் என்பதை இவர்கள் காண்பதில்லை. முதலாளித்துவ அமைப்பில் முதலாளிக்குச் சுரண்டும் சுதந்திரம் தவிர, வேறெந்தச் சுதந்திரமும் மக்களுக்கு இல்லை என்பதை இவர்கள் உணர மறுக்கிறார்கள்.

சாவின் எல்லையில் உலகத்தை நெருக்கமாகக் காணலாம் என்று சொல்லுபவர்கள் ஒன்றையொன்று அழிக்க முயலும் இரு பிரதான வர்க்கங்களின் எல்லைக்கோட்டில் நின்று நெருக்க மாகப் பார்க்க விரும்புகிறார்கள். இப்போராட்டத்தில் மனித சுதந்திரத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். எல்லா மனிதர் களின் சுதந்திரத்திற்காகவும் நடைபெறும் போராட்டத்தில் இவர்கள் நடுநிலை வகிக்கிறார்கள். இவர்களுக்கு முதலாளித் துவம் முழு ஆதரவும் அளிக்கிறது.

இப்போக்குகள் ஏகபோக வளர்ச்சி ஏற்பட்டு வரும் நம் நாட்டிலும் பரவுகின்றன. வர்க்க உணர்வையும் புதிய உலகிற் காகப் போராடும் உணர்ச்சியையும் வருங்கால நம்பிக்கையை யும் தகர்த்து, உள்ளப் போராட்டத்திலும் சமூகத்திற்கும் தனி மனிதத்துவத்திற்கும் இடையே நடைபெறும் கற்பனையான போராட்டத்திலும் மனிதனைத் தள்ளி ஆழ்த்திவிட இத் தத்துவவாதிகள் முயலுகின்றனர்.

இவை எந்த வடிவங்களில் இலக்கியத்தில் தோன்றுகின்றன என அறிந்து அவற்றை முறியடிக்க முற்போக்கு எழுத்தாளர் கள் முன்வரவேண்டும்.

# தற்கால இலக்கியப் படைப்புக் கொள்கைகள்

## சிலவற்றின் தோற்றமும் வளர்ச்சியும்

'தாமரை சிறுகதை மலர்' மனிதனுக்கும் தற்காலச் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளை யதார்த்தபூர்வமாகச் சித்தரிக்கிற கதைகளை வாசகர்களுக்கு அளித்திருக்கிறது. இது முற்போக்கு எழுத்தாளர்களும் வாசகர்களும் வரவேற்க வேண்டியதோர் முயற்சி என்பதில் சந்தேகமில்லை. இம்மலரிலுள்ள பல கதைகள் முற்போக்கான இலக்கியப் படைப்புக் கொள்கைகளுக்குச் சிறந்த வெற்றியாகும்.

'தாமரை' செப்டம்பர் இதழில் இம்மலரைப் பற்றிய சில விமர்சனக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. அவ்விமர்சனங்களில் எழுத்தாளர்கள் மனிதநேசம், யதார்த்தவாதம், விமர்சன யதார்த்தவாதம், சோசலிஸ்டு யதார்த்தவாதம் என்ற கலைப் படைப்புக் கொள்கைகளை உரைகற்களாகக்கொண்டு கதைகளை மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆனால் இக்கொள்கைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் அவர்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். ஒரு நண்பர் எல்லாக் கதைகளும் மனிதநேச அடிப்படையில் எழுந்தவை என்று கூறுகிறார். மற்றொரு நண்பர், சில மனிதநேச உள்ளடக்கமும், வேறுசில போர்க்குணம் மிக்க மனிதநேச உள்ளடக்கமும், ஒரு கதை சோசலிச ரியலிஸ்டு உள்ளடக்கமும் கொண்டவை என்று வகைப்படுத்திக் காட்டுகிறார். மூன்றாமவர் எல்லாக் கதைகளும் சோசலிஸ்டு யதார்த்தவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று கூறி, அவற்றில் சில குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்விமர்சனங்களிலிருந்து, இவ்வெழுத்தாளர்களுக்குத் தாம் கையாளும் அளவுகோல்களைப் பற்றியே வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதை நாம் தெரிந்துகொள்ளுகிறோம்.

இப்படைப்புக் கொள்கைகள் திடீரென்று தோன்றியவையல்ல. யார் மூளையிலோ பளிச்சிட்டு வெளிபடுத்தப்பட்டவையல்ல. சமுதாய வரலாற்றுப்போக்கில், இலக்கியப் படைப்புக்களில் தர்க்க ரீதியாக, இயல்பாக எழுந்தவை. இக்கொள்கையை நிலையியல் ரீதியாக அறிந்துகொள்ளாமல், இயங்கியல்

முறையில், சமுதாய இயக்கங்களோடு பொருத்திப் பார்க்க வேண்டும். இவை ஒவ்வொன்றும் சமுதாய வரலாற்றில் எந் நிலையில் தோன்றியது, வரலாற்றை ஒட்டி எவ்வாறு வளர்ச்சி பெற்றது, வளர்ச்சி பெற்றபின் சமுதாய மாற்றப் போக்கு கள் இவற்றை எவ்வாறு பாதித்தன என்பதை நாம் அறிந் கொண்டால்தான் இக்கொள்கைகளைத் தவறில்லாமல் நாம் அளவுகோல்களாக இலக்கியப் படைப்புகளை மதிப்பிடப் பயன்படுத்தமுடியும்.

எனவே, மனிதநேசம் (Humanism), போர்க்குணம் மிக்க மனிதாபிமானம் (Revolutionary humanism), கற்பனாவாதம் (Romanticism), புரட்சிகரமான கற்பனாவாதம் (Revolutionary Romanticism), யதார்த்தவாதம் (Realism), விமர்சன யதார்த்த வாதம் (Critical realism), சோசலிஸ்டு யதார்த்தவாதம் (Socialist realism) ஆகிய கலைப்படைப்புக் கொள்கைகளின் வரலாற்று ரீதியான தோற்றத்தையும் வளர்ச்சியையும் மாறு தல்களையும் சுருக்கமாகச் சுட்டிக்காட்டுவது அவசியம் என்று தோன்றுகிறது.

இக்கொள்கைகளுள் மனிதநேசம் காலத்தால் முந்தியது. இது 13, 14ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தோன்றியது. அக்காலத்தில் சீர்குலைந்து வந்த நிலவுடைமைச் சமுதாயத்தை எதிர்த்துப் புதிதாக உருவாகி வந்த முதலாளி வர்க்கம் போராடத் தொடங்கியது. மனித நேசத்தின் அடிப்படை அம்சங்கள், நிலப்பிரபுத்துவத்தை ஆதரித்த சமய, சமூகக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்ப தாக இருந்தது. 'தனிமனித உரிமை' என்ற போர்வையில் நில வுடைமை முறையை ஆதரித்த கொள்கையையும், 'அரசுரிமை யின் தெய்வீகத் தன்மை' என்ற கொள்கையையும் மனிதநேசக் கொள்கையுடைய எழுத்தாளர்கள் எதிர்த்தனர். சமயவரம்பிற் குள்ளே மனிதநேசத்தை வலியுறுத்தியவர்கள் இக்கொள்கை யினரில் ஒரு பிரிவினர். சமயத்தையே எதிர்த்து உலகாயதத் தைப் பிரசாரம் செய்தவர்கள் இன்னொரு பிரிவினர். ஆயினும் அவர்களுக்குப் பொதுவான சில அம்சங்கள் இருந்தன. அவை உலக மறுப்பையும் துறவையும் எதிர்ப்பது, மனிதனது இன்பம் நாடும் உரிமையை ஆதரிப்பது, தெய்வீக ஆதிக்கத்திற்கும் மன்னனது அதிகாரத்திற்கும் எதிராகத் தனி மனிதனது உரிமைகளை வற்புறுத்துவது முதலியன. இக்கருத்துக்கள் சுரண் டலுக்கும் ஊழலுக்கும் எதிராக மக்கள் நடத்திய போராட் டங்களில் உருவாயின. மனிதன் மீது இரக்கம், அவனது வாழ்க்கையில் அக்கறை, அவன்மீது ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் மீது வெறுப்பு, அவனது சுதந்திரத்தில் பற்று

இவை முற்கூறிய இருபிரிவினருக்கும் பொதுவான கருத்துக்கள்.

இப்போக்குகளை இலக்கியத்திலும் கலையிலும் பிரதிபலித்தவர்கள் பெட்ரார்க் (கவிஞர்), தாந்தே (காவியக்கவிஞர்), பொக்காஸியோ (டெக்கமரான் என்ற நூலாசிரியர்), இராஸ்மஸ், புருனோ (தத்துவாசிரியர்கள்), லியனார்டோடா வினிச் (சகல கலாவல்லவர், விஞ்ஞானி), ஷேக்ஸ்பியர் (நாடக ஆசிரியர்), பிரான்ஸிஸ் பேக்கன் (லோயக தத்துவவாதி). இவர்களை அறிவொளி பரப்பியவர்கள் (Enlighteners) என்று இலக்கிய வரலாற்றாசிரியர்கள் அழைக்கிறார்கள். இவர்களில் பலர் உலகாயதக் கருத்துக்களுக்கும் உலக வாழ்க்கைக்கும் முதன்மையளித்தனர்.

இவர்களில் பலர் நிலவுடைமைக் குடும்பங்களில் பிறந்து, தங்கள் வர்க்கத்திற்கு எதிராகவே கலகம் செய்தனர். சிலர் மத்தியதர வியாபாரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இயல்பாகவே அவர்களுடைய வளர்ச்சிக்கு நிலவுடைமைச் சமுதாயத்தை எதிர்க்கவேண்டியிருந்தது.

அவர்கள் காலத்தில் விவசாயிகள் போராட்டங்கள் பல ஐரோப்பாவில் நடைபெற்றன. இவர்கள் தனித்து நின்று நிலவுடைமையை எதிர்த்தார்களே தவிர, அதனை எதிர்த்து நடைபெறும் போராட்டங்களிலிருந்து தனித்து நின்றார்கள். அதற்கு அவர்களது வர்க்கப் பிறப்பே (Class origin) காரணமாகும். இதனால் உழைப்பாளி மக்களுக்கு எதிர்ப்பான கருத்துக்களை இவர்களுள் சிலர் கொண்டிருந்தனர். ஷேக்ஸ்பியர் அவ்வாறல்ல. நிலவுடைமைச் சமுதாயத்தின் ஊழல்களை, சாதாரண மக்களுடைய பார்வையில் இவர் விளக்கினார். உதாரணமாக 'இரண்டாவது ரிச்சர்டு' என்ற நாடகத்தில் அவனது அழிவுக்கு என்ன காரணம் என்பதை இரண்டு தோட்டக்காரர்கள் பேச்சில் வைத்துத் தெளிவுபடுத்துகிறார். அவரது வரலாற்று நாடகங்களில் 'தெய்வீக அரசு உரிமை'க் கொள்கையைக் கேலி செய்கிறார். மதகுருமார்கள் தெய்வீகநெறி காட்டுவதைவிட அரசியல் சூழ்ச்சிகளிலும் ஆதிக்கப் போட்டிகளிலும் ஈடுபடுவதை வெளிப்படுத்துகிறார். இவரை அக்காலத்து மனிதநேசவாதிகளில் மிகச் சிறந்தவர் என்று கூறலாம். அதே போலத்தான் காவியக்கவிஞன் தாந்தேயையும் கருதலாம். 'நரகம்' (Inferno) என்ற அவருடைய காவியத்தில் இத்தகைய மனித நேசக் கருத்துக்கள் மிகுதியும் உள்ளன.

இக்கொள்கையின் வளர்ச்சிப் போக்கு 18ஆம் நூற்றாண்டில் உச்சநிலை எய்தியது. அதற்குக் காரணம் நிலவுடைமைச் சமுதாயத்தின் சீர்குலைவும், அதனை ஒழிக்க முன்வந்த முத

லாளித்துவ வர்க்கம், மக்களைத் தனது தத்துவக் கருத்துகளால் கவர்ந்துகொண்டதுமேயாகும். முதலாளித்துவப் புரட்சிச் சிந்தனையாளர்கள் 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற கோஷங்களை எழுப்பினர். ஆயினும் இந்தத் தத்துவவாதிகள் இக்கோஷங்களைப் பொதுப்படையாகக் கூறினரேயன்றி உழைக்கும் மக்களுக்கு இக்கோஷங்கள் பொருந்தும் என்று கருதவேயில்லை. அவர்களைக் கவர்ந்துகொள்ளும் முறையில் இக்கொள்கைகளைப் பிரச்சாரம் செய்தார்கள். அவர்களுடைய மனிதநேசத்திற்கு அடிப்படை, தங்கள் வர்க்கத்திற்குத் தனிச் சொத்துரிமை வேண்டும் என்ற ஆசையே. 'மக்கள் சுதந்திரம்' என்ற கருத்தை இவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் தனி மனித சுதந்திரத்தையே முதன்மையானதாகக் கருதினர்.

தமிழ்நாட்டிலும், மனிதநேசப்போக்கு சங்ககால முதலே தோன்றி வரலாற்று ரீதியாக வளர்ந்துள்ளது. இப்பொருள் பற்றி விரிவாக ஆராயவேண்டியது அவசியம். சமயவாதிகளில் சிலர் சமய வரம்பினுள், மனிதநேசத்தை வலியுறுத்தினர். உதாரணமாக மணிமேகலையாசிரியர் சாத்தனார், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று கூறி எல்லா மக்களுக்கும் உணவளித்தல் அவசியம் என்ற மனிதநேசக் கருத்தைக் கூறுகிறார். பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வைதிகக் கருத்துக்களை ஆபுத்திரனது கூற்றுகளின் மூலம் எதிர்க்கிறார். நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு அம்சங்கள் இக்கருத்துக்களில் உள்ளன. ஆனால், உலக மறுப்பும் துறவும் இக்காவியத்தின் அடிப்படைக் கருத்துக்கள். சமயக் கட்டுக்கோப்பினுள் நின்று மனிதநேசத்தைப் போற்றும் போக்கில் இம்முரண்பாடு தவிர்க்க முடியாதது. சமய வரம்புகளை மீறிச் சிலப்பதிகாரமும் குறளும் பல மனிதநேசக் கருத்துக்களைக் கூறுகின்றன. கம்பன் மனிதநேசக் கருத்துக்களைக் கூறும் கவிஞர்களுள் தலைசிறந்தவன். மனிதனது காம்பீரியத்தை அவன் தன் காப்பியப் பாத்திரங்களின் மூலம் படைத்துக்காட்டுகிறான். சிறந்த மனிதன் உருவாவதற்குத் தேவையான ஒரு கற்பனைச் சமுதாயத்தையும் அவன் உருவாக்கிக் காட்டுகிறான். நமது இலக்கியப் பாரம்பரியம் முழுவதிலும் இழையோடிக் கிடக்கும் மனிதநேசக் கருத்துக்களையும், அவை சமுதாய வளர்ச்சிப் போக்கில் வேர்விட்டு வளர்ச்சி பெற்ற முறைமையினையும் முற்போக்கு எழுத்தாளர்கள் ஆராய்ந்து போற்றி வளர்த்தல் வேண்டும்.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் நிலவுடைமையை எதிர்த்த முதலாளித்துவம் அரசியல் ஆதிக்கம்

பெற்றது. காலப் போக்கில் தனது சுரண்டல் முறைக்கு விரோதமான 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற மும்மணிக் கொள்கையைக் கைவிட்டது. 'லாபத்துக்காக உற்பத்தி' என்ற இரக்கமற்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. முதலாளித்துவ முறையின் கொடுமைகளும் அதன் கோரசொரூபமும் வெளிப்படையாகத் தோன்ற ஆரம்பித்தன. இந்நிலையில் மனிதநேசம் கொண்டிருந்த எழுத்தாளர்கள், மனிதநேச அடிப்படையில் நின்று முதலாளித்துவக் கொடுமைகளையும் அநீதிகளையும் எதிர்த்து எழுதினர். அநீதியற்ற சமுதாயத்தைத் தமது கற்பனையால் படைத்து, அது போன்றதொரு சமுதாயத்தை நடைமுறையில் படைக்க வேண்டுமென விரும்பினர். அச்சமுதாயத்தில் இன்பமுற வாழ வேண்டுமென விருப்பம் தெரிவித்தனர். இவர்கள் தனிச் சொத்துரிமையே கொடுமைகளுக்கும் துன்பத்திற்கும் காரணம் என்று கருதி, அதனை மாற்றிப் பொதுச் சொத்துரிமை அடிப்படையில் சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்றனர். ஆனால், சமுதாய மாறுதல்கள் குறித்த புறவயச் சமுதாய வளர்ச்சி விதிகளை ஆராய்ந்து அறியாததாலும் உலகாயத உலகக் கண்ணோட்டம் இல்லாததாலும் இவர்கள் கற்பனைக் கனவுகளிலே மூழ்கினர். இக்கொள்கைகளின் பிரதிநிதிகள் தாமஸ் மூர், காம்பனெல்லா, ராபர்ட் ஓவன், ஸெயன்ட் ஸைமன் முதலியோராவர்.

இவர்களுள் ஸெயன்ட் ஸைமன் சமுதாய வளர்ச்சிப் போக்கின் தன்மையை மிக நெருக்கமாகக் கண்டார். சமுதாய வளர்ச்சிப் போக்கில் சொத்துரிமை, வர்க்கங்கள் இவற்றின் பாத்திரத்தை அறிந்திருந்தார். ஆனால் விஞ்ஞான அறிவின் முன்னேற்றம், நல்லொழுக்கம், சமயம் ஆகியவை சமூக மாற்றங்களின் உந்து சக்தியென்று நம்பினார்.

ஐரோப்பியக் கவிதை வரலாற்றில் மேற்கூறிய சமுதாயச் சூழ்நிலையில் மனிதநேசவாதத்தில் ஒரு புதிய வளர்ச்சிப் போக்கு உருவாயிற்று. இது 1820-30க்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றியது; 1789இல் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் வீச்சு ஐரோப்பா முழுவதும் எதிரொலித்தது. பல நாடுகளில் மக்கள் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்கினர். பல நாடுகளை அடிமைப்படுத்தி ஆண்ட சக்கரவர்த்திகளை எதிர்த்துத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் எழுந்தன. அக்காலத்தில் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்கள் முனைப்பாகத் தோன்றவில்லை.

அதே சமயம் பிரெஞ்சுப் புரட்சியில் வெற்றிபெற்று ஆதிக்கத்தைக் கைப்பற்றிய முதலாளி வர்க்கம், மக்களை அடிமைப்

படுத்திச் சுரண்டலை முதலாளித்துவ முறையில் நடத்தியது. இதன் விளைவுகள் மக்களிடையே அவர்கள் மீது அவநம்பிக்கையை வளர்த்தது.

நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்துப் போராட மக்களைத் திரட்டப் பயன்பட்ட 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற கொள்கைகளைப் பொதுமக்களுக்காக அல்லாமல், தங்கள் வர்க்கத்திற்காக முதலாளிகள் செயல்படுத்திக் கொண்டனர். பேச்சுக்கும் செயலுக்குமுள்ள முரண்பாட்டை மனித நேசவாதிகள் கண்டனர்.

இச்சூழ்நிலையில்தான் இருவகையான கற்பனைவாதிகள் (Romanticists) இலக்கிய உலகில் தோன்றினர். இவர்களில் இரு பிரிவினரை இனம் காணமுடியும். இவர்கள் முதலாளித்துவச் சமுதாயத்தின் மீது வெறுப்புக்கொண்டு, அழிந்துவிட்ட நிலவுடைமைச் சமுதாயத்தின் சாயலில், கற்பனையில் பல சித்திரங்களைத் திட்டினர். இவர்கள் பழமையை உயிர்ப்பிக்க முயன்றவர்கள். இவர்களை (Romantic revivalists) பழமைக் கற்பனைவாதிகளென அழைக்கலாம். முதலாளித்துவப் புரட்சியில் நம்பிக்கை இழந்துவிட்ட இவர்கள், முதலாளித்துவத்தை எதிர்க்கத் திரண்ட மக்களைக் கண்டும் அஞ்சினர். எனவே புதிய சுடராக ஒளிவீசத் தொடங்கியிருக்கும் முதலாளித்துவ எதிர்ப்புணர்ச்சியில் இவர்கள் ஒன்றுபடவில்லை. பிரிந்தே நின்று பின்னோக்கிச் செல்ல முயன்றனர். எனவே அதிகக் கற்பனைப் படைப்புகளையும் பயங்கரக் கனவுச் சித்திரங்களையும் இவர்கள் திட்டினார்கள். இப்போக்கின் பிரதிநிதிகள் பிரான்ஸ் நாட்டில் நோவாலிஸ், ரஷ்ய நாட்டில் ஷுகாவ்ஸ்க், ஜெர்மனியில் கால்பாக் முதலியோர்.

இரண்டாவது பிரிவினரும் முதலாளித்துவத்தில் நம்பிக்கையிழந்தவர்களே. ஆனால் நிலப்பிரபுத்துவ முறையையும் இவர்கள் எதிர்த்தவர்கள். எனவே இவர்கள் பின்னோக்கிச் செல்ல முயலவில்லை. இவர்கள் முற்போக்கான நிலையில் நின்று, முதலாளித்துவத்திற்கு எதிராகப் பரந்த சமூக வர்க்கங்களின் எதிர்ப்பை வெளியிட்டார்கள். இவர்கள் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரித்தார்கள். விடுதலையை உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டு வழிபட்டார்கள். மனிதநேசத்தின் எல்லையை விரிவாக்கி, ஆழமுடையதாக்கினார்கள். மக்களின் நலன்களில் ஆர்வம் கொண்டிருந்தனர். வருங்காலத்தை நோக்கி முன்னேற முயன்றனர். இந்த இலக்கியப் போக்கிற்கு பைரன், ஷெல்லி, விக்தர் ஹியூகோ, ஜார்ஜ்ஸாண்டு, சோபின் முதலியோர் பிரதிநிதிகள். ஷெல்லி, அரசனையும் மதகுருமார்களையும் கடவுளையும் மனிதனது விரோதிகளெனக் கருதி

னான். இளமையிலேயே கடவுளை எதிர்த்து 'நாத்திகத்தின் இன்றியமையாத் தேவை' (The necessity of atheism) என்ற பிரசுரம் ஒன்றை வெளியிட்டதற்காக அவன் பல்கலைக்கழகத் தினின்று வெளியேற்றப்பட்டான். அடிமைகளாக வயல்களில் உழைப்பவர்களை நோக்கி, "கலப்பைக் கொழுவை உருக்கி வாளாக வார்த்து உங்களை அடக்கி ஆள்வோர்மீது போர் தொடுங்கள்" என்று முழங்கினான். ஆனால் அவனது லட்சிய சமுதாயம் பொற்காலம் (Golden age). இதில் நம்பிக்கை தளரும்போதெல்லாம் சோகக் கவியாக மாறுகிறான். பைரன் பழமையான விவாக பந்தங்களை முறித்தவன். இச்சமுதாயத் தின் கட்டுப்பாடுகளை எவ்வகையிலும் மீறவேண்டும் என்று நினைத்துக் கண்டவரைக் காதலிக்கும் டான்ஜுவானைப் பாத்திரமாகப் படைத்தான். கிரீஸில் நடைபெற்ற விடுதலைப் போரில் தனது நாட்டு அரசாங்கத்திற்கு எதிராகக் கிரேக்க மக்களோடு சேர்ந்து நின்று போராடினான். பல நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிப் பாடினான். மக்கள் மறந்துபோய்விட்ட அயல்நாட்டுத் தேசிய வீரர்களின் வரலாறு களை உயிர்ப்பித்து அவர்களுடைய பாத்திரங்களைக் கவிதை யில் படைத்தான். இத்தகைய பாத்திரங்களுள் ஒன்று 'சில்லான் கைதி' (Prisoner of Chillon). மக்களுக்காகவோ, அயல்நாட்டு ஆக்கிரமிப்பையோ, அடிமைத் தனத்தையோ எதிர்த்துப் போராடுபவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களை யெல்லாம் பைரன் போற்றிப் பாடினான்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை, தான் ஆங்கிலேயனாக இருந்த போதிலும் அவன் புகழ்ந்து பாடவில்லை. உலகத்தின் எதிரி யாகவே கண்டான். ஏகாதிபத்தியத்தைப் புகழ்ந்து பாடும் கூலிக் கவிஞர்கள் அவனைத் தேசத்துரோகி என்றனர். உலக மக்களை அடிமைத்தனத்தில் ஆழ்த்தும் தனது நாட்டு ஏகாதி பத்தியத்தின் விரோதியாக இருப்பதே தனது மனிதநேசக் கொள்கைக்குரிய தருமம் என்று அவன் பதில் கூறினான்.

விக்தர் ஹியூகோ சிறந்த மனிதாபிமானி. பல வர்க்கங் களின் பிரதிநிதிகளையும் கற்பனை ரீதியான மனிதாபிமானத் தோடு சித்தரிக்கிறான். 'லாமிஸரபிளா,' 'சிரிக்கும் மனிதன்,' 'நோட்டர்டேம்' முதலியவை அவனது பெயர் பெற்ற நாவல் கள். அரசியல் புரட்சிவாதிகளும் அவனது படைப்புகளில் இடம் பெறுகிறார்கள். 'சாகப் போகிறவனின் கடைசிக் காலம்' என்ற நாவலில் இத்தகைய ஒருவனது நேர்மையையும் உறுதியையும் இலட்சியப் பிடிப்பையும் சித்தரிக்கிறான்.

இப் புரட்சிகரமான கற்பனைவாதம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவிலேயே கலைந்துபோய்விட்டது. முதல்

உலகப்போருக்கு முன் முதலாளித்துவப் போட்டியும் ஏகபோக வளர்ச்சியும் அதற்கு முன்னர் என்றுமிராத அளவு வளர்ச்சி பெற்றன. உலகத்தைப் பங்குபோட்டுக் கொள்வதற்கான போர் தொடங்கும் நிலை வளர்ந்தது. கற்பனைவாதிகளின் கற்பனைகள் நொறுங்கின. அவர்கள் கற்பனைக்கெட்டிய 'பொற்காலமும்' 'இளைய உலகமும்' எட்டாக்கனவுகளாகவே நின்றன. ஏகபோகங்கள் மக்களின் உதிரத்தை உறிஞ்சிப் பேயாட்டம் ஆடின.

இக்காலத்தின் எழுத்தாளர்களில் பலர் தம் மனச்சாட்சியை ஏகபோகச் சுரண்டல் முதலாளிகளுக்கு விற்றுவிட்டனர். இவர்களுக்கு ஃபோர்டு போன்ற முதலாளிகள் உலக ரட்சகர்களாகத் தோன்றினர். பணம் சுருட்டத் தெரிந்தவர்கள், பகல் கொள்ளைக்காரர்கள், ஏகாதிபத்தியவாதிகளனைவரும் கதாநாயகர்களாகச் சித்தரிக்கப்பட்டார்கள். ஆப்பிரிக்காவில் நீக்ரோக்களைப் பிடித்து அடிமைகளாக விற்பதற்காகக் காட்டினுள் வழி கண்டுபிடித்துக் கிராமங்கள் இருக்குமிடம் காட்டிய செஸில் ரோட்ஸ் என்பவனைப் பனாமாவைக் கண்டுபிடித்த 'கார்டேஸ்' என்ற பூகோளப் புதுமை கண்டவனுக்குச் சமமாகப் புகழ்ந்தார்கள்.

முதலாளித்துவ முற்கால உலகத்தில் ஆதிக்கம் செலுத்திய பதினான்காவது லூயி, பயங்கர இவான், தாமர்லேன், செங்கிஸ்கான் போன்ற கொடுங்கோலர்களைத் தாக்கிச் சித்திரம் தீட்டிய முதலாளித்துவ எழுத்தாளர்கள், தங்கள் காலத்துப் பகற்கொள்ளைக்காரர்களான எண்ணெய் முதலாளிகளைப்பற்றியோ இரும்பு முதலாளிகளைப்பற்றியோ, யுத்த-தளவாட உற்பத்தி முதலாளிகளைப்பற்றியோ எவ்விதச் சித்திரத்தையும் தீட்டவில்லை. இவர்களை விட்டுவிட்டால் முதலாளித்துவப் பண்பாட்டின் படைப்பாளிகளான விஞ்ஞானிகள், புதுமை புனைபவர்கள், கலைஞர்கள், படைவீரர்கள் ஆகியோரைப் பற்றியாவது எழுதினார்களா? இல்லவே இல்லை. அவர்களால் ஏன் முதலாளித்துவச் சமுதாயத்தின் மேன்மைகளைப் பற்றி எழுதமுடியவில்லை?

முதலாளித்துவச் சமுதாயத்தில் இவர்களது புரவலர்கள் முதலாளிகள். அவர்களைச் சிறந்த மனிதர்களாகவோ வீரர்களாகவோ காண்பது வேடிக்கைக்குக்கூடப் பொருத்தமாகத் தெரியவில்லை. அவர்களது பகல் கொள்ளைகளைப் பற்றி எழுத இவ்வெழுத்தாளர்களது நன்றியுணர்வு இடம் தரவில்லை. இவர்கள் இரு பிரிவாகப் பிரிந்தார்கள். முதல் பிரிவினர் மனச்சாட்சியின் உறுத்தலே இல்லாதவர்கள்; முதலாளித்துவத்திற்குத் துதி பாடினார்கள். தங்கள் எஜமானர்களை

மகிழ்விக்க ஆரியக் கூத்தாடினார்கள். இவ்வகை எழுத்தாளர்கள் வில்கிகாலின்ஸ், மாரியட், ஜிரோம் முதலியவர்கள். இவர்கள் முதலாளிகளின் நல்ல பிள்ளைகள். ஆனால் மட்டமான கலைஞர்கள்.

அடுத்த வகையினர் சிறந்த கலைஞர்கள். மனச்சாட்சியுடையவர்கள். இவர்கள் தங்கள் வர்க்கத்தை விட்டு விலகி வந்து அதன் கோர உருவத்தை உண்மையாக வரைந்து காட்டினார்கள். முதலாளித்துவத்தின் விளைவுகளான வறுமையையும் வேலையின்மையையும் இரக்கமின்மையையும் சித்தரித்தார்கள். மக்களுக்கு முதலாளித்துவம் இழைக்கும் கொடுமைகளையும் தீமைகளையும் சுட்டிக்காட்டினார்கள். டால்ஸ்டாய், டிக்கன்ஸ், பெர்னார்டு ஷா, ரோமெய்ன் ரோலந்து, ஹோவர்டு பாஸ்ட், ஹைய்ன்ரிஷ் முதலியவர்கள் இத்தகைய போக்கைப் பிரதிபலித்தார்கள். இவர்களது படைப்பு முறையை விமர்சன யதார்த்தவாதம் என்றழைக்கிறோம். இவர்களில் எல்லோருடைய எழுத்திலும் புரட்சிகரமான மனிதநேசம் இழையோடுகிறது. ஆனால் இடையிடையே இவர்களிடம் கற்பனைவாதமும் காணப்படுகிறது. சமுதாய உண்மைகளைக் கண்டறியும் திறனும் கலைப்படைப்பு உத்தியும் இவர்களிடம் சிறந்து தோன்றுகின்றன.

இவர்களது இலக்கியக் கொள்கைகள், சமுதாயத்தின் சில தீங்குகளை அரைகுறைச் சித்திரமாகத் தீட்டிய ஸ்டீல் அடிசன் ஸ்விப்ட், சால்டிகாவ் ஷெட்ரின் முதலியோருடைய யதார்த்தவாத வழிவந்ததெனினும் இவர்கள் பகுதிச் சித்திரங்களோடு நின்றுவிடாமல் தீமைகளின் சமூக வேர்களைக் கண்டு விளக்க முயன்றுள்ளார்கள். இவர்களது முன்னோடிகளைத்தான் யதார்த்தவாதிகள் (Realists) என்று அழைக்கிறோம்.

இந்தப் போக்குகள் அனைத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியாக, வரலாற்று ரீதியான சமூக முரண்பாடுகளின் முதிர்ச்சியால், முற்போக்கு வர்க்கங்களில் வேர்கொண்டு எழுந்த இலக்கியக் கொள்கை (சோசலிஸ்டு ரியலிசம்) சோசலிஸ்டு யதார்த்தவாதமாகும். இக்காலத்தில் தொழிலாளி வர்க்கம் சமுதாயப் புரட்சியின் முன்னணியாக அனுபவமும் தத்துவப் பயிற்சியும் பெற்று முன்னேறத் தொடங்கியது. பல சமூக வர்க்கங்கள் அதனைப் பின்பற்றிப் புரட்சிப் போரில் அணிவகுத்தன. ஏகாதிபத்தியமாக வளர்ந்துவிட்ட முதலாளித்துவத்தை எதிர்த்து அதனால் பாதிக்கப்பட்ட பல உலக சக்திகள் (தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம், நடுத்தர வர்க்கம், அடிமை நாட்டு மக்கள், போரை எதிர்த்துச் சமாதானத்திற்காகப் போராடும் மக்கள்) தனித்தனியாகவும் ஒன்றுபட்டும் போரா

டத் தொடங்கின. ஏகபோக முதலாளித்துவம் தனது சமூக அடிப்படைப் பரப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்கியது. இச்சமூகச் சூழ்நிலையில்தான் சோசலிஸ்டு யதார்த்தவாதம் தோன்றியது. இது சமுதாய வளர்ச்சி விதிகளை உணர்ந்து, போராடும் வர்க்கங்களுக்கிடையே தனது ஸ்தானம் மிக முற்போக்கான சமூகப் புரட்சிச் சக்திகளிடம் தான் என்று தீர்மானித்துச் சமூக உண்மையை இத்தெளிவின் நோக்கில் சித்தரிப்பதாகும்.

சமுதாயத்தை மாற்றப் போராடும் மனிதன் இப்படைப்பாளிகளின் கதாநாயகன் ஆனான். அவன் தனது குறிக்கோளான சோசலிஸ்டுச் சமுதாயத்திற்காகப் போராடுவதில் எவ்விதத் தியாகத்திற்கும் தயாரானவனாக இருந்ததைச் சோசலிஸ்டு யதார்த்தவாதிகள் சித்தரித்தனர். இப்போக்கின் தந்தை மாக்சிம் கார்க்கி. அவரது நாவல் 'தாய்' இப் புதுப் போக்கின் முதல் படைப்பு. அவரைப் பின்பற்றி ஆயிரக்கணக்கான எழுத்தாளர்கள் இப்பணியில் சேர்ந்தனர். மனிதநேசவாதிகள், புரட்சிகரக் கற்பனைவாதிகள், விமர்சன யதார்த்தவாதிகள் ஆகியோரது கலைப்படைப்பு முறைகளை இவர்கள் கிரகித்துக் கொண்டார்கள். சமூக அநீதிகளை விமர்சனம் செய்வதோடு நில்லாமல், சமூகத்தை மாற்றும் சக்திகளைக் கண்டு அதனோடு இணைந்து நின்றார்கள். இதுதான் புதிய மரபு. இதனால்தான் இவர்கள் சமூக அமைப்பை மக்கள் நலன்களுக்கேற்ற முறையிலும் மனித கௌரவத்தை உயர்த்தும் வகையிலும் மனிதனை மனிதன் சுரண்டும் வாய்ப்பில்லாமலும் மாற்றிவிட மக்களால் முடியும் என்ற நம்பிக்கையோடு மக்களுக்கு உத்வேகமூட்டுகிறார்கள். இவர்கள் இன்றைய மனிதனைச் சமூகச் சூழ்நிலையில் சித்தரிக்கிறார்கள்.

வரலாற்று வழிப்பட்ட புரட்சிகரமான வளர்ச்சிப் போக்கில் சமுதாய உண்மையை இவர்கள் கண்டு அதன் எல்லா அம்சங்களோடும், மனிதனுக்கும் இயற்கைக்கும், மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள உறவுகளை முழுமையான சித்திரமாகத் தீட்டிக் காட்டுகிறார்கள்.

இவர்களுக்குக் கம்யூனிஸ்டுத் தத்துவத்தில் உறுதியான ஈடுபாடு உண்டு. மக்களுடைய நல்வாழ்வுப் போராட்டத்தில் அவர்களோடு வேறுபாடின்றி இவர்கள் ஈடுபடுகிறார்கள். எனவே, இன்றைய வர்க்கப் போராட்டத்தில் இவர்கள் முற்போக்கு வர்க்கச் சார்புடையவர்கள்.

இவர்களுடைய மனிதநேசம், கற்பனை மனிதனிடம் கொண்டுள்ள கழிவிரக்கமல்ல; போராடும் மனிதனோடு ஒன்றி நிற்பதாகும். இவர்கள் தேசபக்தியுடையவர்கள். ஆனால்,

உலகத் தொழிலாளி வர்க்கத்தோடு இணைந்து நிற்பவர்கள். அதாவது சர்வ தேசியச் சகோதரப் பார்வையுடையவர்கள்.

வரலாற்று வழியாக உலக மக்களுக்குச் சுரண்டலிலிருந்து சுதந்திரமும் நல்வாழ்வும் வருங்காலத்தில் உண்டு என்ற நம்பிக்கையும், அதற்காகத் தாமே போராடவேண்டும் என்ற உறுதியும் உடையவர்கள்.

தனி மனித உணர்வையும் (individualism) அகவய மன உளைச்சல்களையும் போற்றும் இலக்கியப் போக்குகளை இவர்கள் நிராகரித்து முறியடித்துப் போராடுகிறார்கள்.

சோசலிச யதார்த்தவாத முறை, இயற்கையோடும் சமுதாயத்தோடும் மனிதனுக்கு உள்ள தொடர்புகளை முழுமையாக அறிந்து சித்தரிக்கிறது. மனிதனது துன்பங்களை உணர்ந்து கண்ணீர் விடுவதோடு நின்றுவிடாமல் அவற்றைப் போக்க மக்கள் போராடுகிறபொழுது அவர்களுக்கு உற்சாக மளிக்கிறது. சமூக அநீதிகளையும் அவற்றிற்குக் காரணமான மனிதனை மனிதன் சுரண்டும் நிலைமையையும் விளக்கி அவற்றை ஒழித்துச் சோசலிச சமுதாயத்தை அமைக்கமுடியும் என்ற நம்பிக்கையை இவர்களது படைப்புகள் மக்களுக்கு ஊட்டுகின்றன. இக்கொள்கை பல்வேறு இலக்கியக்கொள்கைகளையுடைய எழுத்தாளர்களைக் கவர்ந்து தன் வசப்படுத்தி வருகிறது. வருங்காலம் சோசலிஸ்ட் யதார்த்தவாதத்திற்கே என்பதில் ஐயமில்லை.

# புதுக்கவிதையின் உள்ளடக்கம்

## தொடக்கக் காலம்

புதுக்கவிதை, கவிதையற்ற கவிதை, Verse Libre என்ற பல பெயரிட்டு அழைக்கப்படும் வசன கவிதை என்ற புதுப் போக்கு நம் கவிதையுலகில் தோன்றியுள்ளது. இக்கவிதை மரபினர் தங்கள் கவிதைகளின் உள்ளடக்கமும் உருவமும் மிகப் புதியது, தங்கள் புதிய மரபு பழைமை மரபினும் சிறந்தது என்று கூறுகிறார்கள். 'எழுத்து' பத்திரிகையிலும் அதற்கு வெளியிலும் நூற்றுக்கணக்கான புதிய கவிதைகள் தோன்றிய வண்ணமுள்ளன. 1962இல் 'எழுத்தி'ல் வெளியான கவிதைகள் 200லிருந்து 63 கவிதைகள் நூல் வடிவில் எழுத்துப் பிரசுரத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இக்கட்டுரையில் புதுக் கவிதையின் உள்ளடக்கம் என்ன, அது புதுமையானதுதானா, அவற்றில் என்ன புரட்சிதான் அடங்கிக் கிடக்கிறதென்று ஆராய்வோம்—மேலும், இக் கவிதை மேனாடுகளில் 1910 முதல் தோன்றியது எனவும், இதன் சிறந்த பிரதிநிதிகள் டி. எஸ். எலியட், எஸ்ரா பவுண்டு என்னும் கவிகளென்றும் புதுக்கவிதைகளது தொகுப்பின் முன்னுரையில் சொல்லப்படுகிறது. அவர்கள் கவிதைகள் எச்சமூகச் சூழ்நிலையில் தோன்றியவை, அவர்களின் கவிதைகளின் உள்ளடக்கத்தைத் தமிழ்ப் புதுக்கவிஞர்கள் எவ்வாறு பின்பற்றுகிறார்கள் என்பதையும் காண்போம்.

புதுக்கவிதைகளின் தொகுப்பிற்குப் 'புதுக் குரலகள்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். 200 கவிதைகளிலிருந்து 63 கவிதைகளைத் தொகுத்திருப்பதால் இவை இப்போக்கிற்குச் சிறந்த பிரதிநிதித்துவம் வாய்ந்தவை என்று நான் கருதுகிறேன்.

இந்நூலின் 'நுழைவாயி'லில் சி. சு. செல்லப்பா புதுக் கவிதையின் உள்ளடக்கத்தின் தன்மையைப் பற்றி விரிவாக எழுதுகிறார். அவரும், இப்புதுக்கவிஞர் வரிசையைச் சேர்ந்தவர். எனவே அவருடைய கருத்தை, புதுக்கவிதையின் இலக்கியக் கொள்கைக்கு உரைகல்லாகக் கொள்ளலாம். அவர் கூறுவதாவது:

> பிராய்டின் கருத்துக்களால் அவர்களது அகநோக்கு இதுவரை கண்டிராத அளவு விரிவும் ஆழமும் பெற்றது.

> உணர்வு உலகத்தில் இன்னும் ஆழத் துழாவிப் பார்த்தார்கள். மென்மையானதும் சிக்கலானதும் கூட்டுக்கலப்பானதும் திட்டமான எண்ணத்துக்கு உருவாகாமல் பிரக்ஞை நிலையிலேயே இருக்கும் அக உளச்சலையெல்லாம் சொல்லப் பார்த்தார்கள். கணக்கற்ற அணுக்களைப்போல எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒரே சமயத்தில் மனதுக்குள் பொழியும் மனப்பதிவுகளை, மாறுபடும் இனந்தெரியாத, கட்டுக்கடங்காத மனப்போக்கை வெளிப்படுத்துவது தங்கள் கடமையென்று கருதினார்கள். அதே சமயம் புற உலகமும் அவர்களைப் பாதித்தது. புதிய விஞ்ஞானத் தகவல்கள் பிரபஞ்ச விசாரணையில் புதுப் பார்வைகளை ஏற்றின. வாழ்க்கை ஒரு ஐக்கியத் தன்மை வாய்ந்தது என்பதோடு தொடர்ந்தே ஓடும் ஒரு தாரை, சென்றது நிகழ்வதுடன் பிணைகிறது. நிகழ இருப்பதன் வெளிக்கோட்டை உருவாக்க, ஒரு கணம், மறு கணம் என்றெல்லாம் இருந்தாலும் ஒன்றையடுத்து ஒன்றாக இடையறாமல் தொடர்நிலையாக ஓடிக்கொண்டிருக்கும் கணப்பொழுகளால் ஆனதுதான் வாழ்க்கை. ஒவ்வொரு நிகழ் கணப்பொழுதும், எல்லாக் காலத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. அத்தகைய கணப்பொழுதில், நின்று பார்க்கிற கவியின் பார்வையில் காலம் வெளியிரண்டும், பேதமற்றுப் போய்விடுகின்றன, என்ற காலம், வெளி பற்றிய கருத்துக்கள் பரவின.
>
> ஆக—அக, புற உலக மாறுதல்களால் பாதிக்கப்பட்ட இந்த நூற்றாண்டு ஆரம்ப காலத்தவன், புதுக்கவியாக மலர்ந்தது மேல்நாட்டில் கவிதையுலகம் கண்ட அனுபவம். அது பூத்த பூக்கள் நிறைய......1920-30களில் மேல்நாட்டுப் புதுக்கவிதைக்கு ஒரு உந்துதல் ஃபிராய்டிஸம், மார்க்சீயம் இரண்டிலிருந்தும், மனோதத்துவ, லோகாயுத தத்துவ ரீதியாகவும் ஏற்பட்டது போல், தேசீயம் பாரதிக்கு உந்துதல் தந்தது!

இம்மேற்கோள் ஒன்றைத் தெளிவாகக் காட்டுகிறது. மேல்நாட்டுப் புதுக்கவிதைக்கு மார்க்சீயமும் ஃபிராய்டிசமும் உந்துதல் அளித்தது என்று கூறும் சி. சு. செல்லப்பா, நமது கவிஞர்களுக்கு ஃபிராய்டிசம்தான் அகநோக்கை ஆழமும் விரிவும் உடையதாகச் செய்தது என்று கூறுகிறார். ஆகவே இக்கவிஞர்கள் மார்க்சியத்தினால் உந்துதல் பெறவில்லை என்பது தெளிவு. எனவே, இவர்களது உள்ளடக்கத்தில் ஃபிராய்டின் பிரபஞ்ச—அறிதல் முறையும் தத்துவக் கோட்பாடுகளும்

ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

ஃபிராய்டின் தத்துவத்தையும், அது கலை இலக்கிய உலகில் செலுத்தும் செல்வாக்கையும் இங்கு விரிவாக ஆராய்வது எனது நோக்கமல்ல. எனினும் ஃபிராய்ட் தத்துவத்தின் சுருக்கமான வரலாற்றையும், அதனால் பாதிப்புப் பெற்ற எக்சிஸ்டென் ஷியலிசம், சர்ரியலிசம் என்ற கிளைத் தத்துவங்களையும் புரிந்துகொண்டால்தான் இப்புதுக்கவிதையின் உள்ளடக் கத்தை நாம் மதிப்பிடமுடியும். எனவே ஃபிராய்டிசம் தோன் றிய வரலாற்றையும், அதன் வளர்ச்சிப் போக்கையும் சுருக்க மாகக் குறிப்பிடுவேன்.

ஃபிராய்டிசம் மனோதத்துவக் கொள்கையாகப் பிறந்தது. இப்பொழுது மனித உள்ளத்தின் இயக்கம் முழுவதையும் விளக்குவதாக உரிமை கோருகிறது. இக்கொள்கையின் முத லாசிரியர் ஒரு நரம்பு நோய் வைத்தியர். தம்மிடம் வரும் அரைப் பைத்தியங்கள், நரம்பு அதிர்ச்சி நோயாளிகள், சித்தப் பிரமை பிடித்தவர்கள், சோகத்தில் மூழ்கியவர்கள், உறக்க மின்றிப் பயங்கரக் கனவு காண்பவர்கள் முதலிய பலவகை மன நோயாளிகளைப் பரிசோதித்து, அதன் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, மனநோயை ஆராயும் முறையொன்றை இவர் உருவாக்கினார். அதனை 'ஸைக்கோ அனாலிஸிஸ்' என்று அழைத்தார். மனநோய்களைக் குணப்படுத்த ஒரு சிகிச்சை முறையையும் வகுத்தார். அதற்கு 'ஸைக்கியாட்ரி' என்று பெயர் கொடுத்தார்.

ஃபிராய்டு, முதலாளித்துவம் ஏகபோகங்களாக வளர்ச்சி பெற்றுவிட்ட காலத்தில் வாழ்ந்தார். ஏகபோகங்களின் போட்டியினால் சிறு தொழில் முதலாளிகள் திவாலாயினர். நடுத்தர வர்க்கத்தினர் சுதந்தரமான தொழில்களை இழந்த னர். இவ்வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள் அழிவு அபாயத்தை எதிர்நோக்கி நடுங்கினர். இவர்கள் யாவரும் முதலாளித்துவ வளர்ச்சிக் காலத்தில் 'தனி மனித சுதந்திரம்' என்று முழங்கி யவர்கள். தங்கள் சுதந்திரம் போலியானது என்று அவர்கள் கண்டார்கள். உலக ஆதிக்கம் பெற்ற ஏகபோகங்களின் அடிமைகளாக வாழ இவர்களது தனி மனித—சுதந்திர உணர்வு இடம் தரவில்லை, அதே சமயம், ஏகபோகங்களை எதிர்த்து, ஒன்று திரண்டு அவற்றை அழித்து, தனிச் சொத் துரிமையை ஒழித்து, சோசலிச சமுதாயத்தை நிறுவப் போராடும் தொழிலாளி வர்க்கத்தையும் அதனோடு சேர்ந்து நிற்கும் மக்களையும் கண்டனர். இம்மனிதக் கடலில் ஒரு துளி யாக இருக்க அவர்களது 'தனிமனித' உணர்வு இடந்தர

வில்லை. இருதலைக் கொள்ளி எறும்பாக அவர்கள் தவித்தார்கள். இத்தவிப்பில் அவர்கள் ஓலமிட்டார்கள். "தனிமனிதச் சுதந்திரம் இல்லையே, சமுதாயமே எனக்கு விரோதி" என்று கூவினார்கள். பலருக்கு நரம்பு அதிர்ச்சியும் சித்தப்பிரமையும் உண்டாயின. அவர்களைப் பரிசோதித்தவர்தான் ஃபிராய்ட். அவர்களுடைய தவிப்புக்குக் காரணம் கண்டுபிடிக்க முயன்றவர்தான் ஃபிராய்டு.

இந்நிலையை மாக்சிம் கார்க்கி கீழ்வருமாறு வருணிக்கிறார்:

> நமது அறிவாளிகளது, 'தனி மனிதச் சுதந்திர உணர்வு' சித்தப் பிரமைக்கும் அகவய உளைச்சல்களுக்கும் அவர்களை ஆளாக்கியது. இவ்வாறு 'தனி மனிதம்' என்ற கொள்கையுடையவர்களது உள்ளம் ஒடிந்து மனம் குழம்பி, உயர்வு எண்ணங்கள் குன்றி அவர்கள் படுகுழிக்குள் வீழ்ந்துவிட்டனர். இவர்கள் மனநோயால் பீடிக்கப்பட்டு உளறுகிறார்கள். தங்கள் மீது இரக்கம் கொள்ள வேண்டும் என்று கதறுகிறார்கள்.

பிறரைப் பற்றிக் கவலைப்படாதவர்களும், மனித ஒற்றுமையிலும் மனிதாபிமானத்திலும் அக்கறையில்லாதவர்களுமான இவர்கள் மனிதர்களின் அனுதாபத்திற்காகக் கூக்குரலிட்டு அழுகிறார்கள். மனித குலத்தை மந்தையென்று எண்ணியவர்களுக்கு அம்மந்தையின் இரக்கம் எதற்கு?

இந்த மூலத் தத்துவத்திலிருந்து காலப்போக்குக்கு ஏற்ற சில மாறுதல்களோடு கிளைத்து எழுந்தவைதான் சர்ரியலிசம், எக்சிஸ்டென்ஷியலிசம் என்ற தத்துவங்கள்.

சர்ரியலிஸ்டுகளுக்குப் பிடித்த இலக்கியக் கருக்கள், பயங்கரக் கனவுகள், உருவெளித் தோற்றங்கள் (hallucinations), பயங்கர மனோவிகாரங்கள் முதலியன ஆகும். கவிதையின் இக்கிளையின் முதல்வர் டி. எஸ். எலியட் என்பவர். நமது புதுக்கவிஞர்களது பிதாமகர். இவர் தமது 'பாழ்நிலம்' என்ற கவிதையில் இரண்டாம் உலகப் போருக்குப் பிற்கால உலகைப் பயங்கரக் கள்ளிக் காடாகச் சித்தரிக்கிறார். மனிதன் உருப்படமுடியாத பிராணி, இவன் விலங்கிலும் தாழ்ந்த நிலைக்குச் செல்லுகிறான் என்று அக்கவிதையில் மனிதனது விதியை நிர்ணயித்துவிடுகிறார்.

'கட்டுப்பாடில்லாத தனி மனித சுதந்திரமே மனித வாழ்க்கையின் குறிக்கோள்' என்பது இவர்கள் சுதந்திரக்கொள்கை.

இக்கொள்கைகளை மனத்தில் கொண்டு நமது புதுக்கவிஞர்களது கவிதைகளை ஆராய்வோம். இவர்களது கவிதை

களின் உள்ளடக்கத்தைப் பின்வருமாறு பிரிக்கலாம். மேற் கூறிய விளக்கத்தின் அடிப்படையில் சாவும் வாழ்வும் இவர் களது முக்கியமான கருப்பொருள்கள். வாழ்க்கையின் உந்து சக்தி உணர்விற்கப்பாற்பட்ட அன்கான்ஷியஸ் உணர்வு, ஒரு தாரை போன்றது (Stream of conscious). அதன் ஊற்று அன்கான்ஷியஸ், அதிலுள்ளவை அடக்கப்பட்ட இன்ப நாட் டங்கள். அவை இணை விழைச்சுத் தன்மையுடையவை. இவர் களுக்கு மனித வாழ்க்கைப் போக்குப் பற்றியும் பெண்மை பற்றியும், கோட்பாடு ரீதியான கருத்துக்கள் உண்டு. எனவே பின்வரும் தலைப்புகளில் அவர்களது கருவையும், அதுபற்றி அவர்களது சித்திரங்களையும் படிமங்களையும் ஆராயலாம்.

1 வாழ்க்கை 2 சாவு 3 இணைவிழைச்சுணர்வு (Sex) 4 நிராசை (Frustration) 5 தனி மனிதம் (Individualism) 6 உணர்வுத்தாரை (Stream of consciousness) 7 கவிஞன் தொழில் 8 எழுத்தாளன் தொழில் 9 கோரமான உவமை, படிமம், உருவகம் 10 கூடார்த்தம் (Obscurity) ஆகியவை.

இவ்வாறு வகைப்படுத்திக் கொண்டு ஆராய்ந்தால் புதுக் கவிஞர்களது தத்துவப் போக்கின் முழு உருவத்தையும் நாம் அறியலாம். அவற்றை மேற்குறித்த வரிசையில் ஆராயாமல் தர்க்க ரீதியாகத் தொடர்புடையவற்றை முன்பின்னாகவே ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளுவோம்.

**வாழ்க்கை**

பெனிடிக்ட் இவ்வாறு கேள்வி கேட்கிறார்:

வருகையின் நினைவில்
நிகழ்வைக் கழித்து
கழிவது கனவாய்
வருவது நினைவாய்
நினைவும் சுவடாய்
முடிவை அடைதல்
கனவின் முடிவா?
வாழ்வுள் கனவா?

கவிஞனின் வேலை கேள்வி கேட்பதுதான் போலும். வாசகன், வாழ்க்கையின் தத்துவத்தை அவனுக்கு உபதேசிக்க வேண்டும் போலும். அவ்வக்கால அறத்தினை நமது கவி மரபைச் சேர்ந்த கம்பனும் வள்ளுவனும் இளங்கோவும் திருத் தக்க தேவனும் பாரதியும் பாரதிதாசனும் தம் நிலையில்

நின்று விளக்கியுள்ளனர். இங்கே புதுக் கவிஞர் இருளில் துழாவுகிறார். வாழ்க்கை என்றால் என்ன என்பதை விளக்க நம்மைக் கேள்வி கேட்கிறார். கேட்டுக் கொண்டிருக்கட்டும். அடுத்த கவிஞர் என்ன சொல்லுகிறார் என்று பார்க்கலாம்.

அடுத்த கவிஞர் ஞா. மாணிக்கவாசகம் வாழ்க்கையைப் பயணமாக உருவகப்படுத்துகிறார்:

விதி வழியே செய்த
வினை வழியே போகின்றேன்
போகுமிடம் வேறில்லை
புதிய தடம் காணுதற்கு
பொழுதில்லை ஆதலினால்
விதி வழியே செய்த
வினை வழியே போகின்றேன்

வாழ்க்கைப் பயணம் பற்றி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உலக மறுப்புவாதிகளான பௌத்தரும் சமணரும் கூறும் விதி தான் வாழ்க்கையைப் பிடரி பிடித்து உந்துகிறது; புதிய தடம் ஒன்றுமில்லை; அதைக் காணப் பொழுதும் தமக்கு இல்லை என்கிறார் கவிஞர். இதில் புதிய உள்ளடக்கம் என்ன இருக்கிறது என்பது நமக்குப் புரியவில்லை. புதுக் கவி மரபின் தத்துவமான தனி மனிதச் சுதந்திரத்திற்குக்கூட இது விரோதமாக இருக்கிறது. சாவு ஒன்றுதான் நிச்சயம் என்ற சாக்குருவி வேதாந்தம் நமக்குப் புதிதல்ல. அதனையும் கவிதையின் கடைசிப் பகுதியில் கூறுகிறார்:

பூத்தமலர் வாடும்
புதியகனி அழுகிவிடும்
சாவுக் கோவிலிங்கே
வாவென்ற ழைக்கின்ற
சங்கீதம் கேட்கிறது
போகின்ற விதிவழியே
போய் முடியும் வினைவழியே.

இந்தக் கருத்தை வல்லிக்கண்ணனும் கூறுகிறார்:

நடந்தே அழியணும் வழி
கொடுத்தே தீரணும் கடன்
செய்தே அழியணும் வேலை
அழுதே அழியணும் துக்கம்

வாழ்ந்தே முடியணும் வாழ்வு
இதுவே உலகின் நியதி. (பக்கம் 18, விதி)

வாழ்க்கையில் துன்பமில்லாவிட்டால் பரவாயில்லை என்று சொல்லும் புதுக் கவிஞர் முருகையன் கீழ்வரும் உருவகத்தால் அவரது கருத்தை விளக்குகிறார்:

பாம்புச் சுருணை தட்டுப்படாவிடில்
எதுவும் இல்லை யெனினும்
எனக்குக் கவலையில்லை. (ப. 75, பரவாயில்லை)

இருள் வாழ்க்கையை விழுங்குமென்று, தின்னும் நிகழ்ச்சியைத் தின்னப்படும் மனிதன் ரசிக்கிறானாம். ஞானக் கருமை என்ற கவிதையில் வைத்தீஸ்வரன் சொல்லுகிறார்:

நானேது நிழல் எங்கு?
நெருக்கித் தள்ளிய கருமை
என்னை மென்று கொண்டிருந்தது.

வாழ்வே சாவின் பாதை என்றும், சாவுக் கோயிலின் சங்கீதம் அழைக்கிறதென்றும் அழுகுரல் கொடுக்கும் இக்கவிஞர்கள் சாவைப் பற்றித்தான் அதிகமாகப் பாடுகிறார்கள். சாவில் தான் தங்கள் மன—உறுத்தல்களுக்கும் தனிமனித மகாயுத்தத்திற்கும் முடிவு காண்கிறார்கள். இனிச் சாவைப் பற்றிய அவர்களுடைய கவிதைகளைக் கவனிக்கலாம்.

**சாவு**

இறப்பு என்ற தலைப்பில், புதுக்கவிஞர்களால் 'இன்டெலக்சுவல்' கவி என்று பட்டம் சூட்டப்பட்ட டி.கே. துரைசாமி சாவு பற்றி இரண்டு கவிதைகளில் தமது கருத்தை வெளியிடுகிறார்:

ஓலமிடும் நின்னுடுக்கை
ஓலமிடும் நின்னுடுக்கை
என்ன ஓலமிடும் நின்னுடுக்கை
சாவுக்கும் அர்த்தமுண்டு
சம்போகத்தில் நாசமுண்டு (ப. 35, கடன்பட்டார்)

இது பட்டினத்தார் பாடலைப்போல் பழமையானதுதான். சிவனை மயான சாமியாகக் காணும் நம்பிக்கை நம் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. கபாலீசுவரர்

வணக்கமும் கபாலிக சைவ மதமும் நமக்கொன்றும் புதியன அல்லவே. சம்போகத்தை வெறுத்த பாடல்களை எத்தனை ஆண்டிகளும் பண்டாரங்களும் பாடியிருக்கிறார்கள்! சாவு வேண்டும் சம்போகம் வேண்டாம் என்று பாடுவதற்கு என்ன இன்டெலெக்சுவலிசம் வேண்டிக் கிடக்கிறது?

கவிதையென்று பெயரிடப்பட்டிருக்கும் வேறு சில வரிகளை டி.கே. துரைசாமி எழுதியிருக்கிறார்.

> கூட்டமாக அணிவகுத்து அசட்டுக் கருஞ்சிவப்பு நிறம் தாங்கி ரௌத்திரத் துளிகள்போல் தடுத்தோரைக் குதறித் தள்ளி அடுத்த நிமிஷம் சாவதற்கு விரையும் இக் கட்டெறும்புக் கூட்டத்தை நாமறிவோம்.

தனித்து நின்றாலும் சாவு, கூடிப் போராடினாலும் சாவு என்ற தமது தத்துவத்தை இப்படி உருவகமாக இவர் கூறுகிறாராம்.

படிமச்சிற்பி என வருணிக்கப்படும் தருமு. சிவராமு சாவைப் பற்றி நீண்ட பாட்டொன்று எழுதியிருக்கிறார். பாரதியைவிட வருணனைத் திறனிலும் படிம நிர்மாணத்திலும் உயர்ந்தவர் என்று செல்லப்பாவால் அழைக்கப்படும் தருமு. சிவராமு இறப்பு என்னும் தலைப்பில் சாவுக்குப் புகழ் பாடுகிறார்:

மணமடுத்த மஞ்சமா
மஞ்சமடுத்த துயிலா, உயிரா
கூண்டு தப்பிய கிளியா
கூடேகும் புள்ளா
கூடுதப்பிய புள்ளா
வலைபட்ட புறாவா
சூடப்பறித்த மலரா
வாடயெறிந்த மலரா
கிழியக் கழிந்த உடையா
துவைக்கப் போட்ட துணியா
திரியெரிந்த விளக்கா
காற்றணைத்த சுடரா
செய்வினையா
செயப்பாட்டு வினையா
தொடர்கதையின் ஒரு பிரிவா
சிறுகதையின் முடிவா
காற்புள்ளியா
முற்றுப் புள்ளியா
? ,,

வாழ்வையும் சாவையும் பற்றி இவர்களது அகவயத் தத்துவங்கள் இவைதாம். உலக மறுப்பு, துறவு வேட்கை, உடலையும் இளமையையும் பழிப்பது, பெண்ணைப் பேயென்று ஏசுவது போன்ற கருக்கள், தற்கால-பிற்காலச் சமயக் கவிஞர்களது பாடல்களில் ஏராளமாக உள்ளன. புதிய மொந்தையில் பழைய கள்ளைத்தான் இவர் தருகிறார். "அக வுலகம் ஃபிராய்டிஸத்தினால் விசாலமடைகிறது" என்றும் "உள்ளத்தைத் துழாவி இந்தக் கவிஞர்கள் ஏதோ புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்கள்" என்றும் சி. சு. செல்லப்பா சொல்லுகிறார். அக உலகம் விசாலப்பட்டதன் விளைவு என்ன? சாவு பற்றி ஒப்பாரி வைப்பதுதானா? 'வாழ்வும் சாவும் ஒன்று,' 'வெந்த சோற்றைத் தின்று விதி வந்தால் சாகு' என்ற தத்துவங்கள்தாம் புதிய உண்மைகளா?

**பெண்ணும் இணை விழைச்சும்**

இவ்வாறு வாழ்க்கையைச் சகித்துக் கொள்ளவேண்டிய துன்பம் நிறைந்த அனுபவமாகக் கருதும் இக்கவிஞர்கள் பெண்ணையும் இணைவிழைச்சையும் பற்றி என்ன சொல்கிறார்கள்?

மா. இளையபெருமாள் எழுதிய முதல் கவியில் உமைபங்கனான சிவனை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறார்:

பெண் தூக்கிக் கதையெழுதிப்
பெண் தாக்கிப் பாட்டெழுதிப்
பெண் நோக்கும் வாழ்வென்ற
பேருண்மை நாட்டுதற்கோ
உன்மத்தா
ஒரு பாதி
பெண்ணாகி வாழ்கின்றாய்?

பெண்நோக்கே வாழ்வென்று இவர் கூறுகிறார். "வாழ்வின் அடிப்படை இன்ப நாட்டம், அது இணை விழைச்சுத் தன்மையுடையது" என்ற ஃபிராய்டின் கொள்கை இங்கே எதிரொலிக்கக் காணலாம். இவரை எதிர்த்து மற்றொரு புதுக் கவிஞர், காமம் ஒரு நோய் என்று பழைமைக் கருத்தை நினைவில்லாமல் கூறிவிடுகிறார்:

காமம்:
பலநோய் ஒரு மொழி
புற்று சோகை சளை

இரத்த அழுத்தம் இன்னுமென்ன
உண்டோ, அத்தனை அத்தனையும்
காமத்துள் அடக்கம். (ப. 62, சி. மணி)

பேச்சு என்பதே காமத்தில் உதடுகள் புதைவதும் இரத்தம் அதிர்வதும்தான் என்று பாரதியைவிடப் பெரிய படிம நிர்மாணி தருமு. சிவராமு எழுதுகிறார்:

பூவின் இதழ்ச்சுவருள்
வண்டு குரல் ஒலிகள்
மோதி மடிகிறது
முத்தத் திரைமறைவில்
பேச்சுப் புதைகிறது
ஆனால் ரத்தம் கதைக்கிறது
மவுனம் அதிர்கிறது. (ப. 34, தருமு. சிவராமு)

'நரகம்' என்ற நீண்ட புதுக்கவிதையைச் செல்லப்பா 'தாரை'க்கு உதாரணமாகச் சொல்கிறார். காலம் என்பது கணப்பொழுதுகளால் ஆன கடந்த, நிகழும், வரும் கணப் பொழுதுகளின் தொடர்ச்சியே. உள்ளத்தில் கணப்பொழுது தோன்றி மறைந்துவிடும் எண்ணற்ற எண்ணங்களின் தொடர்ச்சிதான் உணர்வுத்தாரை (Stream of Consciousness). இந்த அனுபவத்தைச் சொல்ல முயலுவதே 'நரகம்.' சென்னையிலுள்ள காட்சிகள், கவிஞன் மனத்தில் உணர்ச்சி களையும் சிந்தனைகளையும் கணத்திற்குக் கணம் ஏற்படுத் தின. இவை தனது மனத்தில் தொடங்கி வைத்த உணர்வுத் தாரையை இக்கவிதையில் ஒழுகவிடுகிறார் கவிஞர். அவர் எண்ணத்தில் புறக்காட்சிகளெல்லாம் காமத்தின் வெளி யீடாகவே தோன்றுகின்றன. அருவருக்கத்தக்க காம விகாரத் தின் ஓடையொழுக்காகத்தான் இக்கவிஞரின் உள்ளத்தாரை இருக்கிறது. இங்கே காமத்தைக் கிண்ணத்தில் ஏந்தி வருபவள் நவீனப் பெண்.

பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் ஆண்களும் பெண்களும், பஸ் வந்தவுடன் மோதியடித்துக்கொண்டு ஏறுகிறார்கள். அப் பொழுது கவிஞரின் உள்ளத்தாரை பெருக்கெடுக்கிறது:

தானியங்கி வரவும்
சூடகத் தளிர்க்கை மாதரொடு
சிகரெட் பிடிகை மைந்தரும்
ஊடுற நெருக்கியேற
சேவலே முன்னென்போரும், இல்லை

பெட்டையே முன்னென்போரும், இல்லை
வரிசையே நன்றென்போரும், ஏறுவோரும்
தேர்ந்ததே தேரினல்லால்
யாவரே தெரியக் கண்டார்?
குழுமினர் துவன்றி முயல,
கால்மிதிப்பன கைபிடிப்பன
தோள் இடிப்பன மயிர் இழுப்பன
பொய்யோ வெனும் இடையோடு
ஐயோவெனும் அரும்பினர்
கிடைத்தாரென நெறிப்பன
பாடியல் யானைப் பத்தியங் கடையின்
கூரியல் சாதனை நெருக்கி ஆய்வன
எல்லாம் வண்டியில் அடுத்த கணம்
கலைந்த மழையுள மறைந்த பூவுள
தாங்கிய செங்கை தலைக்கண் மேலுள
ஒலித்த வளையுள ஓய்ந்த விரலுள
சரிந்த கலைப்பால் தெரிந்த பூவுள
பாலூட்டக் கிடைத்தனவோ? பால்
உணர்ச்சி யூட்டிடவே
ஆழக் கழுத்தெடுத்து
நீளம் மிகக்குறைந்து
சேரப் பிடித்த சோளி
நின்று கவனித்து சோர்வு
நடை பின்னச் செய்யும்

இக்காட்சிகளால் பிரவகித்த தாரையோடு கவிஞர் வீட்டிற்கு வருகிறார். காம உளைச்சல்கள் தாரையைத் துரிதமாக்குகின்றன. வீட்டில் தனியாக இருக்கும்போது கண நினைவுகளாகத் தாரை பாய்ந்தோடுகிறது:

வீட்டிற்கு வந்த உடன்
இலக்கியத்தில் தஞ்சம்புக
அருப்பேந்திய கலசத் துணைய முதேந்திய மதமா
மருப்பேந்திய கனலா
முலை வஞ்சி காவின் கீழ்
போதர கடாரப் புல்லி முயங்குவேந்
முகடு காப்பியாத்து விட்டாங்கு
சேர்ந்த மார்பில் கனதனம் யிரண்டும் தைத்தே
அப்புறம் உருவிற்றென்றே
அங்கையால் தடவிப் பார்த்தான்

செவ்வரியால் சுடும் விழியால்
அறையை வலம் வந்தேன்
என் கண்டேன் என்னல்லால் யான்?
தான்புரட்டுந் தொறும் பெரும்
கிளர்ச்சி பின்னும் புதிதாய்
மணந்தாழ் புரிகுழலாளல்குல்
போல வளர்கின்றதே
என் செய்ய?

இன்னும் தாரை ஓடிக்கொண்டேயிருக்கிறது. அதையெல்லாம் நம்மால் சகித்துக்கொண்டிருக்க முடியாது. எனவே அதன் முடிவுக்கு வருவோம். காலையில் கண்ட காட்சிகளெல்லாம் ஓருருவாய்ப் பெண் பேயாகித் தோன்றிக் கவிஞனை விரட்டுகிறதாம்:

எரிக்கும் வெயிலதனில்
துடிக்கும் என்பிலதாய்
தவிதவித்து மயங்கியபோது
உலகத்துப் பெண்ணெல்லாம்
அணங்காகி வெறியூட்ட
விழித்துயிர்த்து மயங்கியோர் கணம்
கழித்து விழித்து உயிர்த்து
நரகம்
பெரு நரகம்

நரகத்திலே நெளிகிற காமப் புழுவாகப் பெண்ணைக் காண்பவன், அவள் அழகில் ஈடுபட்டு அதனைத் தனது தாரையின் ஊற்றாகக் கொள்ளுகிறான் என்பதை இம்மேற்கோள்கள் விளக்கும். பெண்ணைப் பற்றிக் கம்பன் எழுதினான்; பாரதி எழுதினான்; வள்ளுவனும் எழுதினான். 'பெண்ணிற் பெருந் தக்க யாவுள?' என்றும், 'பெண்ணைப் பெருமை செய்' என்றும் கவிஞர்கள் முழங்கிய தமிழ் நாட்டில் அவள் காமத்தாரையின் ஊற்றாகக் காட்டப்படுகிறாள். இதுதான் கணத்தாரை. பார்ப்பதில் எல்லாம் காமம் ஒளிந்துகொண்டு, மனிதனை மன உளைச்சல்களுக்கு உட்படுத்துகிறது என்ற ஃபிராய்டின் தத்துவத்திற்கு இதுவொரு விளக்கவுரை.

**நிராசை**

வாழ்க்கையில் நிராசை இவர்களுடைய கவிதையின் சிறப்பான தன்மைகளுள் ஒன்று. இரண்டு பக்கமும் செல்ல

முடியாத இரண்டுங்கெட்டான் வர்க்கத்தின் நெரிந்து சாகும் உள்ளத்தின் உணர்ச்சி அது. முதல் உலகப் போருக்குப் பின் உடைமை வர்க்கமும் உழைப்பாளி வர்க்கமும் எதிர்எதிராக அணிவகுத்துப் போராடும் வர்க்கப்போரின் உக்கிரத்தைக் கண்டு பயந்த நடுத்தர வர்க்கம் இரண்டிலும் சேராமல் ஒதுங்கி சமூகப் போராட்டத்திற்கு வெளியே தங்கள் தனி மனிதச் சுதந்திரப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தது. இவ் வர்க்கத்தின் பிரதிநிதிகளான கவிஞர்கள், தங்கள் இலக்கியத் திற்கான கருக்களைச் சமுதாயத்திற்கு வெளியே தேடிக்கொண் டிருந்தார்கள். தங்கள் உள்ளத்திற்குள்ளேயே உண்மைகளை யெல்லாம் தேடிப்பிடிக்க முயன்றார்கள். உலகின் இன்ப வாழ் வைப் பறிப்போரை எதிர்த்துப் போராடும் அணியில் சேர அவர்கள் 'தனி மனிதம்' இடந்தரவில்லை. எனவே உலகம் அழியும், மனிதனும் அழிவான் என்று எண்ணினார்கள். இத னால்தான் நம்பிக்கை வறட்சியும் சோக ஒலங்களும் அவர் களுடைய படைப்புகளில் காணப்பட்டன. டி.எஸ். எலியட், இத்தகையோருள் முக்கியமானவர். அவரைப் பின்பற்றும் நமது புதுக்கவிஞர்கள் இங்கும் நமது மக்களுக்கு வருங்காலத்தில் நல் வாழ்வு உண்டென நம்பவில்லை. இவர்களும் மக்களது நல் வாழ்வுப் போராட்டங்களைக் கண்டு அஞ்சுகிறார்கள். இவர் கள் மக்கள் கூட்டத்தை மந்தையென்று கருதுகிறார்கள். "அணி வகுத்துச் செல்லும் கட்டெறும்புக் கூட்டம் தன்னை எதிர்ப் போரைக் குதறிவிட்டு தானும் சாகும்" என்ற கவிதை வரிகளில் நாம் அணிவகுத்து நிற்கும் மக்களைக் காணலாம். உலக சமா தானத்திற்கோ, நாட்டு விடுதலைக்கோ, நாட்டுப் பாதுகாப் புக்கோ, நல்வாழ்விற்கோ போராடும் மக்கள் கூட்டமெல்லாம் கட்டெறும்புக் கூட்டம்தான்!

தங்களுடைய நம்பிக்கை வறட்சியைப் பல உருவங்களில் இவர்கள் வெளியிடுவார்கள். பெ.கோ. சுந்தரராஜன் எழுது கிறார்:

வளரும் நொடியினிலே
வாழ்வே சிதைந்துவிடும்
வையம் உருக்குலையும்
வரையறையும் கண்டுவிட்டேன்
இப்பொழுது நினைக்கின்றேன்
இருந்ததை மறந்திட்டேன்

வேறொரு கவிதையில் அவர் எழுதுகிறார்:

வாழவேண்டும் என்று
விதியிருந்தது
ஆனால்
விதியின் பெயர் சொல்லிப்
புனைபோல் மிதந்து செல்ல
வெள்ளத்தைக் காணோமே
வறண்ட மணற்காட்டிலே (ப. 24, இருந்தேன்)

கஸ்தூரிரங்கன் எளிய நடையில் நம்பிக்கை வறட்சியை மறைக்காமல் சொல்லுகிறார்:

சிரிக்காமல் போனாலும்
அழவேண்டாமே.
இனிக்காமலிருந்தாலும்
கசக்காது இருக்கிறதே
அதுவே போதும். (ப. 18, பழம்புளி)

"எனக்குப் பகை நானே" என்கிறார் சுப. கோ. இரண்டு படைகள் உள்ளத்தில் போராடுகின்றன. தனக்கு வெளியே எப் போராட்டத்தையும் காண அவரால் முடியவில்லை.

வைத்தீஸ்வரன் எழுதுகிறார்:

கருத்தை மருட்டியது கவலை
கிட்டாத கசப்பும்
நெஞ்சக் குமட்டிவர
முகத்தின் முக்கால் பரப்பும்
இருள் மண்டி விளிம்பு கட்ட
விதியை வெறுவெளியில்
குத்தி நின்றேன்
இது சவமோ? தவமோ எனப்
பகலிரவு பிரமையொழித்து
பாழும் கல்லாய்ச் சமைந்திருந்தேன்!
(ப. 18, பொன் வேட்டை)

**தனிமனிதனும் மீட்சியும்**

இந்த நம்பிக்கை வறட்சிக்கு அவர்களது 'தனிமனிதம்' தான் காரணம். எல்லையற்ற சுதந்திரத்துக்காக மனத்தினுள் போராட்டம் நடத்துகிறவர்கள் கற்பனையிலே அந்தச் சுதந்திரத்தை அனுபவித்துக்கொள்ளுகிறார்கள். மனிதனைப் படம் தீட்டும் ஓவியனும் சிலையாக்கும் சிற்பியும் கவிதையாக்

கும் கவிஞனும் மனிதனைச் சிறை பிடிக்கிறார்களாம். இவர்கள் எழுதும் கவிதையில் எதனைச் சிறை பிடிக்கிறார்கள்?

சி.சு. செல்லப்பா எழுதுகிறார்:

தேய்வும் கம்மலும் அழுதலுமே
எனக்குப் பின்
எனக்குப் பின்
உளியாலும் கோலாலும் பேனாவிலும்
விதைக்காதே என்னை
கலைக்குள்
அடைக்காதே, சொன்னேன் (ப. 29, கலைச்சிறை)

சுதந்திரம் அல்லது மீட்சி எதுவென அவரே தெளிவாக்குகிறார்

சாயை மறைத்த புறமோ
இருள் நீங்கலில் தெளிவாகும்
மாயை மறைத்த அகமோ
'தான்'னை அறிதலில் விரிவடையும் (ப. 27, மீட்சி)

நிலவைப் பார்த்தவுடன் தோன்றிய உணர்வுத் தாரையில் தனது எல்லையற்ற சுதந்திரத்தைக் காண்கிறார் பேரை. சுப்பிரமணியன்:

சுட்டு விட்டேன்
விழுந்தது நீலத்திரை
விளிம்பிட எவருமில்லை
ஒளி சிரித்தது உச்சியில்
நிறை—
மழலை உலகிடைப்பூ.

போராடவேண்டியது எதுவும் இவர்களுக்குத் தங்கள் உள்ளத்திற்கு வெளியே இல்லை!

**கூடார்த்தம்**

"உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்றார் பாரதியார். கம்பரும் கோதாவரியின் தெளிந்த நீரைக் "கவியெனத் தெளிந்து சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி" என வருணிக்கிறார். சிறந்த கவிதையில் தெளிவு இருத்தல்வேண்டும். ஆனால் இவர்களுடைய கவிதையில் தெளிவு இராது. அதனைக் 'கூடார்த்தம்'

(Obscurity) என்ற பெருஞ்சிறப்பாக இவர்கள் போற்று கிறார்கள்.

எவ்வளவுக்கு மறைபொருளாக யாருக்கும் விளங்காமல் கவிதையின் கரு இருக்கிறதோ, அவ்வளவுக்கு அது பரிபூரண மான கவிதையாம். இத்தகைய கவிதைகளில் ஓரிரு உதாரணங் கள் காட்டுவோம்:

கதவைத்திற காற்றுவரட்டும்
சிலையை உடை
என்
சிலையை உடை
கடலோரம் உடை
கடலோரம்
காலடிக்கு வடு
கதவைத் திற
காற்று வரட்டும் (ப. 49, சுந்தர ராமசாமி)

பல கேள்விகள் போட்டு மருட்டி இருட்டில் ஆழ்த்துவது இவர் களுடைய கூடார்த்த உத்திகளில் ஒன்று:

உண்மை எது பொய் எது?
எண்ணமா சொல்லா எது?
எண்ணமா சொல்லா
நினைவா கனவா
அல்லது உண்மை பொய்
எண்ணம் சொல் நனவு
கனவு எல்லாம் ஒன்றுதானா?

கவிஞர்கள், எழுத்தாளர்களை மனித குலத்தின் மனச் சாட்சி, உணர்ச்சியை ஆழப்படுத்துபவர்கள், தீமையை எதிர்க்க உத்வேகமளிப்பவர்கள், அறியாமையிருளை அகற்ற அறிவொளி பரப்புபவர்கள் என்றெல்லாம் தற்கால மக்கள் கருதுகிறார்கள். நம் நாட்டிலேயே பாரதியையும் தாகூரை யும், அவர்கள் போலக் காலக்குரலாக முழங்கிய மற்றவர்களை யும் மக்கள் இவ்வாறு மதிக்கிறார்கள். ஆனால் இக்கவிஞர்கள் எழுத்தாளனைப்பற்றியும் வாசகனைப்பற்றியும் என்ன கூறு கிறார்கள்?

இலக்கியம் செய்வதென்றால்
எளிதில்லை எழுத்தாளா

கலக்கினால் காவிரியும்
　　கழிவுப் பொருள் காட்டும் (சுந்தர ராமசாமி)

காவிரியே கலங்கித்தான் போகிறது. அதைக் கலக்கினால் கழிவுப் பொருளைக் காட்டுமாம். இவர்கள் அக உலகம்தான் காவிரியாம். அதைக் கலக்கினால் காட்டப்படுவது எது என்பதை அவர்களே சொல்லிவிட்டார்கள்!

**எழுத்தாளன் யார்?**

அகத்திலுள்ளதைத் தானே அவர்கள் வெளியே காண முடியும்? 'நகத்தை வெட்டியெறி' என்ற கவிதையில் சுந்தர ராமசாமி எழுதுகிறார்:

நகத்தை வெட்டியெறி—
　　அழுக்குச் சேரும்
நகத்தை வெட்டியெறி—
　　அழுக்குச் சேரும்
அகிலமே சொந்தம் அழுக்குக்கு
　　நகமும் எதற்கு அழுக்குக்கு!

எழுதுவதே வேதனைதான். அவன் எழுதுவது தனது அக உலகத்தைப் பற்றியேதான். கணப் பொழுதுகளில் நம்பிக்கையுடையவன் தன்னை மட்டும் என்றும் நிலைத்திருப்ப வனாக எண்ணிக்கொள்ளுகிறான்:

காற்றைத் திரித்து நகத்தைக்
　　கிழித்து விளக்கேற்றி
ஊனைக் கரைத்து உயிரைப்
　　பிழிந்து எழுத்தாக்கி
நெஞ்சைக் குத்தி விரலைத்
　　தேய்த்துப் படைத்தேன்
திரியை எரித்தது விளக்கு
விளக்கை அணைத்தது காற்று
விரலையும் கரைத்தது குருதி.
எனினும்
என்னை அழிக்க யாருண்டு?
எழுத்தில் வாழ்பவன் அன்றோ யான்?

இலக்கியம் வாழ்க்கைப் போராட்டத்திற்கு உணர்ச்சி யூட்டுவதோ, அறிவூட்டுவதோ அன்று; அது கரக ஆட்டம்

அல்லது கண்கட்டு வித்தை. அதனைப் படிப்பவர்கள் 'வாசகக் கும்பல்' என்று எழுதுகிறார் தி. சோ. வேணுகோபாலன்:

சொல்வதிரண்டு வகை
சிந்தித்துச் சொல்லல்
சிந்தை இலையாதல்
கரகம் அல்லது கண்கட்டு
சொன்னவன் புலவன்
கண்டவன் கலைஞன்
முழிப்பவன்
நீயும் நானும் கேவலம்
வாசகக் கும்பல்.

எத்துணை அலட்சியம் வாசகன் மீது! தன்னை உயர்த்தி, வாசகனைத் தாழ்த்தும் இவர்கள் வாசகக் கும்பலை மதித்து என்ன எழுதுவார்கள்? இவர்களது சோக ஓலங்களைக் கேட்டுத் தீரவேண்டுமென்றுதான் கூறுவார்கள் போலும்!

இன்னும் தெளிவாகக் கவிஞனது போதை மயக்கத்தையும் அவனது படைப்பையும் பற்றிக் 'கவி வேதனை' என்ற கவிதையில் தி. சோ. வேணுகோபாலன் எழுதுகிறார்.

விட்டில் விளக்கில் எரிந்து சாவதை 56 வரிகளில் விவரித்து விட்டு (இப்படிமத்தின் மூலம் மனிதனது துன்பத்தை ரசிக்கிறார் போலும்) இக்காட்சியைக் காணாத எழுத்தாளன் எங்கேயிருக்கிறான் என்று கேட்டுப் பதிலளிக்கிறார். எழுத்தாளன் இத்துன்ப உலகத்தில் வாழாமல் எங்கு போய்விட்டான்?

எழுத்தாளன் எங்கே
கேட்கப் போனேன்
நடப்பூர் தாண்டி
நினைவூர் கடந்த பின்
கற்பனைத் தோப்பிலே
கள்ளுக்கடையில்
கவிஞனைக் கண்டேன்
போதைக் கிறக்கம்
எழுதிய கவிதை
எங்கே கிடைத்தது?
கேள்வி குழைந்தது
பதில் ஒரு குமுறல்.
இருட்குகை யொன்றில்
இலக்கியப் பொருளில்

சோதனை நடந்ததாம்
தட்டித் தடவினான்
சிந்தனைக் கையில்
வந்ததை எடுத்து
இருளில் குமைந்த
பொருளின் ஒளியில்
கண்டவன் திகைத்தான்
தத்துவம் எங்கே?
பொருளும் மெய்யா?
பயனும் உண்டா?
எனக்குத் தெரியவே
தெரியாது!
கவிஞன் மதுவின்
அவதியில் இருப்பதால்
தெரியாது.

இக்கவிதையில் கவிதைக்கும் சமூகவாழ்க்கைக்கும் தொடர்பே யில்லை என்றும் ஒரு கவிஞனுள்ளத்தில் அது மது மயக்கம் போன்ற (எக்சிஸ்டென்ஷியலிஸ்டு) போதை உணர்வினால் தோன்றுவதென்றும் அதனை யாரும் அறிந்துகொள்ள முடியாதென்றும் சொல்லுகிறார்.

**படிம உத்தி**

இவர்களது படிம உத்தியெல்லாம் விளங்குவதை விளங்காமல் செய்து கூடார்த்தமாக்கத்தான். இவ்வுத்தியெல்லாம் டி. எஸ். எலியட்டிடம் கற்றுக்கொண்டதுதான். தூலத்தைச் சூக்குமத்தால் விளக்க முயன்று, சூக்குமப் படிமங்களால் வாசகனை மயக்குவதும், பொருள் தெரியாமல் திண்டாடச் செய்வதும் இவர்களது வழக்கம். இப்படிமங்களில் பெரும் பாலானவை சாவோடும் பிணத்தோடும் அருவருக்கத் தக்கனவற்றோடும் தொடர்புடையனவாக இருக்கும். உதாரணமாகச் சில படிமங்கள்:

1 சுடுகாட்டை
உன்மத்தா
உறைவிடமாய் நீ கொண்டாய்.

2 சிறிதில் பெரிதின் பரு
பாழின் இருளைத் தொட்டுன்
நுதலில் இட்ட பொட்டு

பார்வைக் கயிறு அறுந்து
இமையுள் மோதும் குருடு.

3 உன்சாம்பல் மேனிப்பூச்சும்
சவச்சிரிப்பும் சுடலை நாற்றமும்
சுழித்துப் பொங்கும் நச்சரவும்
என்ன குறித்தன?

4 மேற்கே சுடலையின் ஓயாத மூச்சு
காலன் செய் ஹோமத்தில் உடல்
நெய்யாகும் காட்சி.

5 ஒளிமோகம் கொண்டது
களிகொண்ட விட்டில்
காற்றைச் சிறகின் மேல்
ஏற்றிச் சுழன்றது
வட்டங் குறுகியது
சொட்டாமல் திரி நுனியில்
நிற்கும் ஒளித்திவலை
மெய்தீண்டும் காட்சி
'சொய்' என்னும் விசும்பல்.

புதுக்கவிதைகளின் உள்ளடக்கத்தை இதுவரை விரிவாகவே கண்டோம். இவ்வாராய்ச்சியிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகளுக்கு நாம் வர முடியும்.

புதுக்கவிஞர்கள் வரலாற்றுப் போக்கில் உருவான ஒரு சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தில் வாழ்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளவில்லை. இச்சமுதாயச் சூழ்நிலையில் அவர்கள் உள்ளங்களில் உருவான எண்ணங்களையும் சிந்தனைகளையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு அகவயமாகத் திரும்பி உள்ளத்தினுள் வாழ முயற்சி செய்கிறார்கள். தங்கள் உள்ள இயக்கத்தை அறிய ஃபிராய்டை வழிகாட்டியாகக் கொள்கிறார்கள்.

இதனால், வாழ்வில் மனிதன் முன்னேறுவதாகவோ, வரலாற்று ரீதியில் மனித இனம் பல வெற்றிகளைப் பெற்று வருவதாகவோ இவர்களுக்குத் தோன்றவில்லை. இயற்கையையும் சமுதாயத்தையும் ஒரு மாறாத நிலையாகக் காண்கிறார்கள். மனித வர்க்கத்தின் நம்பிக்கைக்குரிய புதிய தடம் எதுவும் இவர்கள் கண்களில் படுவதில்லை. தற்காலச் சமூக அநீதிகளுக்குக் காரணம் தனிச் சொத்துரிமை முறையும் சொத்துடைமையாளர்களின் ஆதிக்கமும்தான் என்ற உண்மையை

இவர்கள் காண மறுக்கிறார்கள். அதனை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்திருக்கும் மனித வர்க்கத்தின் ஒன்றுபட்ட உணர்வையும் போராட்ட ஒற்றுமையையும் கண்டு இவர்கள் நடுங்குகிறார்கள். ஆகையால்தான் மனிதனது துன்பங்களுக்கு விடிவு இவ்வாழ்வில் இல்லை, சாவில்தான் இருக்கிறதென்று கூறுகிறார்கள். எனவே இவர்களுடைய கவிதைகளில், வாழ்வில் சலிப்பையும் சாவில் இனிமையையும் காணும் போக்கை நாம் பார்க்கிறோம்.

இவ்வாறு மனிதனது மேன்மையை உணராத புதுக் கவிஞர்கள் தனிமனிதம் என்ற கற்பனையில் ஆழ்கிறார்கள்; அதன் சுதந்திரத்திற்காக உள்ளத்துக்குள் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தை 'எனக்குப் பகை நானே' என்ற கூடார்த்தமான முழக்கங்கள் மூலம் வெளியிடுகிறார்கள். இதற்கு அடிப்படை, மனிதனுடைய உணர்வுநிலைக்கும் ஆழ்மட்ட உணர்வுநிலைக்கும் நடைபெறும் போராட்டம்தான் மனித நடத்தையை நிர்ணயிக்கிறது என்று ஃபிராய்டிசம் சொல்வதில் இவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதுதான்.

மனித கௌரவத்தைப் பாதிக்கின்ற அநீதிகளை எதிர்த்து இன்று உலகமெங்கிலும் மக்கள் போராடி வருகிறார்கள். இப்போராட்டங்கள் புற உலகில் நடைபெறுவன. ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் வெள்ளையர்களது இனவெறிக்கு எதிராக நீக்ரோ மக்கள் போராடுகிறார்கள். சின்னஞ்சிறு நாடுகள் முதலாளித்துவ அரசாங்கங்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுகின்றன. உலகமெங்கும் போரைத் தடுத்துச் சமாதானத்தை நிறுவும் நோக்கத்தோடு உலக மக்கள் போராடுகிறார்கள். தொழிலாளிகள் முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்துப் போராடுகிறார்கள். விவசாயிகள் நிலப்பிரபுத்துவச் சுரண்டலை எதிர்த்துப் போராடுகிறார்கள். இப்போராட்டங்கள் அனைத்தும் மனித வர்க்கம் நல்வாழ்வு பெற்றுச் சகோதரர்களாக வாழ்வதற்கு நடைபெறும் போராட்டங்கள். இவையனைத்தும் பெரும்பான்மையோருக்கு வாழும் வாய்ப்பு அளிக்காத முதலாளித்துவச் சுரண்டல் சமுதாயத்தை ஒழித்து, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வாழும் வாய்ப்பளிக்கக் கூடிய, சுரண்டலற்ற சோசலிசச் சமுதாயத்தை நிறுவ நடைபெறும் பகுதிப் போராட்டங்கள். இக்கிளை நதிகளெல்லாம் ஒன்று சேர்ந்து பேராற்று வெள்ளமாகப் பெருகினால் சமூக அநீதிகள் அழிந்து, வர்க்கப் பேதங்கள் ஒழிந்து மனிதனுக்கு மனிதன் சமமாகும் வாய்ப்பு ஏற்படும். அது வர்க்கப் போராட்டத்தின் மூலம்தான் சாத்தியமாகும். இந்தப் போராட்டம் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தங்கள் சுதந்

திரத்திற்காகப் போராடுகின்ற மக்கள் அணி வலுத்து வருகிறது. சுரண்டுவோர் கூட்டம் வலிமையிழந்து வருகிறது. மக்கள் இப்போராட்டத்தில் நம்பிக்கையோடு முன்னேறுகிறார்கள். இச்சமூக உண்மையைக் காணமுடியாத புதுக் கவிஞர்கள், இப்போராட்டத்தில் தங்கள் ஸ்தானத்தை நிர்ணயித்துக் கொள்ளாத புதுக்கவிஞர்கள் அகத்துக்குள் ஏதோ போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தங்களைப் பற்றிக் கவலைப்படாத புதுக்கவிஞர்களைப் பற்றி மக்களும் கவலைப்படவில்லை என்பதை அறிந்து அவர்கள் ஆத்திரம் கொண்டு சபிக்கிறார்கள்.

போராட்டங்களைக் கண்டு வெருளுவதால் தங்கள் அக ஓட்டத்தை இவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள். அங்கே அவர்கள் காண்பதெல்லாம் இருட்குகையும் மதும்யக்கமும் துழாவுதலும் கணத்தாரையும்தான். தேடித்தேடிப் பார்த்தாலும் மனித கௌரவத்தை உயர்த்துகிற, மனிதனது அறிவை விசாலப்படுத்துகிற, மனித உணர்ச்சியை ஆழப்படுத்துகிற எந்தச் செய்தியையும் இவர்கள் மனிதனுக்குக் கூறவில்லை. சொறிந்து சுகம்காணுகிற சொறி, சிரங்கு நோயாளி, பிறருக்கு அச்சுகம் இல்லையே என்று கர்வம் கொண்டு கூறுவது போல் இருக்கிறது இவர்களது அகவுலக வெளியீடுகள் எல்லாம்.

இவைகளுக்கெல்லாம் விடை காண ஃபிராய்டிசத்தைத் துணையாகக் கொண்டிருப்பதால், காமவிகாரங்களே மனித வாழ்க்கையின் அடிப்படை உந்துதல் சக்தி என்று நம்பி, அதிலும்கூட ஆரோக்கியத்தோடு ஈடுபடமுடியாமல் தவித்து, மனதில், கற்பனையில், இன்பங்காண முயலும் கிழவனைப் போல மனித நடத்தைக்கெல்லாம் அகப்போராட்டத்தைக் காரணமாகக் காட்டுகிறார்கள்.

இக்காரணங்களால்தான் அவர்களுடைய கவிதைகள், சோக ஓலங்களாகவும் காவிரிக் கலக்கலின் கழிவுகளாகவும் நகத்தின் அழுக்காகவும் விட்டில் சுவாலையில் எரியும் 'சொய்' என்ற சப்தமாகவும் சாவு தன்னை மெல்லும்போது ரசிக்கும் கற்பனை உணர்வாகவும் உருவெடுக்கின்றன.

இவர்களது சோக ஓலங்களும் நம்பிக்கை வறட்சி ஒப்பாரிகளும் சாவுக் காதல் கீதங்களும் வாழ்க்கை மறுப்புப் பாடல்களும், நல்வாழ்வுக்காக நம்பிக்கையோடு போராடும் மக்களுக்குச் சிறிதும் தேவையற்றவை. இவர்களுடைய புதுக்கவிதைகளில் புதுமையுமில்லை; கவிதைத் தன்மையுமில்லை; புரட்சியுமில்லை. இவை வாழ்க்கைப் போராட்டத்துக்குப் பயந்து சாவை விரும்பும் பலவீன மனிதர்களது கூக்குரல்தான்.

# புதுக்கவிதையின் உள்ளடக்கம்

## முற்போக்கும் பிற்போக்கும்

புதுக்கவிதையின் தொடக்கக் கால உள்ளடக்கம் பற்றி, சி. சு. செல்லப்பாவின் 'புதுக்குரல்கள்' என்ற தொகுப்பை ஆதாரமாகக் கொண்டு முன்னைய கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

அக்காலப் புதுக்கவிஞர்களது உள்ளடக்கத்தின் அடிப்படை தனிமனிதம். அதுவும் சமுதாயத்தின் நடுத் தட்டுகளில் வாழ்ந்து வாழ்க்கையை மேலும் கீழும் பார்க்கிறவர்கள் மனத்தில் உருவான தனிமனிதம். மேலே சமுதாய உற்பத்தியின் மன்னர்கள்; கீழே சமுதாய உற்பத்தியின் படைப்பாளிகள். இரு வர்க்கங்களுக்கும் இடையே முரண்பாடுகள் முதிர்ந்து, தீர்மானமான போராட்டங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலத்தில் பொருளாதார, அரசியல் போராட்டங்களுக்கு வழி காட்டியாகத் தத்துவப் போராட்டங்களும் கூர்மையாகியுள்ள காலத்தில் நடுத்தர வர்க்கத்தின் அறிவாளிகள், இரண்டு பக்கமும் பார்த்துத் திகைப்படைகிறார்கள்.

அவர்களில் சமூக வாழ்க்கையின் இயக்கப் போக்கை அறிந்துகொள்ளுகிறவர்கள் தமது அணியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சமுதாயப் போராட்டத்தில், தமது நலன்களை, உழைக்கும் மக்கள் நலன்களோடு இணைத்துக்கொண்டு, ஒன்றிவிடுகிறார்கள். சமுதாய உற்பத்தி மன்னர்களின் தத்துவச் சிந்தனைகளில் மனம் பறிகொடுத்த நடுவாந்தர அறிவாளிகள், உற்பத்திச் சாதன உடைமையாளர்களுக்கும் தனி உடைமை உற்பத்தி முறைக்கும் இக்காலத்தில் தோன்றியுள்ள ஆபத்தைத் தமக்கு வந்த ஆபத்தாகக் கருதுகிறார்கள். இது வரை உற்பத்தி மன்னர்களின் ஆஸ்தான கவிகளாகவும், அவர்களது தத்துவ ஒலிபெருக்கிகளாகவும் இருந்து, தாங்களே, அவர்கள் என்றெண்ணி மயங்கி, சுதந்திரத்தை அனுபவிப்பதாக எண்ணிக்கொண்டிருந்தவர்களுக்கு, உலக ரீதியான வர்க்கப் போராட்டங்களின் கடுமையையும், அதில் பாட்டாளிகள் பெற்றுவரும் வெற்றிகளையும், உடைமை மன்னர்களுக்கும் உடைமை முறைக்கும் வந்துள்ள போராட்டத்தையும் கண்டு, அது தங்களுக்கே வந்துள்ளதெனக் கருதி மயங்குகிறார்கள். புற

உலகப் போராட்டத்தில் தமது ஸ்தானத்தைத் தீர்மானிக்க இயலாத தத்துவத் தெளிவில்லாத எழுத்து மன்னர்கள் உழைக்கும் வர்க்கத்துக்கும் உடைமை வர்க்கத்துக்குமான போராட்டத்தைக் காண அஞ்சி, தமது மனக்குகைகளுக்குள் ஒளிந்து கொண்டு, தமது தனிமனிதத்தையும் தனிமனிதச் சுதந்திரத்தையும் பாதுகாக்கத் தங்களைத் தாங்களே எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குத் தமக்கு வெளியே உள்ளதெல்லாம் தங்களை மருட்டும் பேய் பிசாசாகவே தெரிகிறது. புற உலகில் மனிதனது முன்னேற்றமும் வெற்றிகளும் இவர்களுக்கு மாயை. தம் உள்ளத்தில் வெளியுலகப் போராட்டத்தினால் விளைந்த பீதியே உண்மை. வெளியே உடைமையாளர்களது ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவிப்பதற்காகவும் உலக மக்களை விடுவிப்பதற்காகவும், உலக முழுவதும் நடைபெறும் விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் ஏதோ தங்களுக்குச் சம்பந்தமில்லாத தொலைக் காட்சிகள். உலகையே மாற்ற நடைபெறும் போராட்டங்களில் இவர்கள் எங்கு நிற்பதென்று முடிவு செய்துகொள்ள முடியாமல் இவர்களது தனி மனித உணர்வு தடைசெய்கிறது. தங்கள் மனித உணர்வை இவர்கள் வளர்ந்து வரும் உழைக்கும் மக்களின் சமுதாய உணர்விற்கு எதிராக நிறுத்தி, தாங்களே ஆன்மாவில் பிளவுபட்டவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இத்தனி மனித வீக்கம், மனநோயாக வளர்ந்து, புற உலக இயக்கத்தின் பிம்பங்கள், படிமங்கள், பிரதிபலிப்புகளான அக உலகையே இவர்கள் பாதுகாத்துக்கொள்ளவும் மாற்றவும் முயலுகிறார்கள். கண்ணாடியில் விழும் பிம்பத்தை உண்மையென்று நம்பி, அந்தப் பிம்பத்தை மாற்ற முயலுகிறவர்களைப் போல அக உலக உளைச்சல்களையே பாடுகிறார்கள். புற உலகின் இயக்கம், தன் நிஜபிம்பங்களைத் தமது மனத்தில் பதிவு செய்யத் தங்கள் அகக் கண்ணாடிகளின் அழுக்கை இவர்கள் போக்கிக்கொள்ளுவதில்லை.

இதனால்தான் அவர்களது கவிதை உள்ளடக்கம் பற்றி என்னுடைய புதுக்கவிதையின் உள்ளடக்கம் என்ற கட்டுரையின் முடிவில் இவ்வாறு எழுதினேன்:

> இவர்களது சோக ஓலங்களும் நம்பிக்கை வறட்சி ஒப்பாரிகளும் சாவுக் காதல் கீதங்களும் வாழ்க்கை மறுப்புப் பாடல்களும், நல்வாழ்வுக்காக நம்பிக்கையோடு போராடும் மக்களுக்குச் சிறிதும் தேவையற்றவை. இவர்களுடைய புதுக்கவிதைகளில் புதுமையுமில்லை; கவிதைத் தன்மையுமில்லை; புரட்சியுமில்லை. இவை வாழ்க்கைப்

போராட்டத்துக்குப் பயந்து சாவை விரும்பும் பலவீன மனிதர்களது கூக்குரல்தான்.

இவ்வகையான அகவய நோயாளிகளின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தைத் தெளிவாக்கச் சிந்தனைச் சிதறலை மேற்கோளாகக் காண்போம்:

> நான் என் சுதந்திரத்தை இழந்துவிட்டதாக நினைக்கிறேன். ஒரு காலத்தில் நான் மிகவும் சுதந்திரமாக இருந்ததாக உணர்கிறேன். நான் பின்னால் திரும்பிப் பார்க்கவேண்டும். அந்த ஞாபகங்கள் விநோதமானவை.
>
> எனக்கு முன்னால் அமைப்புகள் பயனில்லாத செருப்புகளாக உலா வருகின்றன. I mean systems. அவை எனக்குப் பொருந்தவில்லை. அவை வலியுறுத்தப்பட்ட வடிவங்களாகிவிட்டன. சில எடுபடும்போல் தோன்றிவிட்டன. நான் அந்தச் செருப்புகளைப்பற்றி ஏன் கவலைப் படவேண்டும்? எனது தற்போதைய செருப்பு என்று எதுவும் இல்லை.
>
> எதைப் பற்றியும் நிச்சயம் தோன்றுவதில்லை. செக்ஸ் மட்டும், உடம்பில் தோன்றும் வலிகள் மட்டும் நிச்சயம் படுகின்றன. I feel them, therefore I exist.
>
> Knowledge is sorrow, done is sorrow. Sorrow is perhaps knowledge.
>
> இப்போதைய எனது தனிமை விவரிக்க இயலாமல் நானடையும் வேதனையை உனக்குச் சொல்ல வேண்டுமோ. என்னைவிட்டு எல்லா ஊன்றுகோல்களையும் எறிந்த பின்பு பற்றுக்கோடாய் எதுவுமே அற்று இந்தப் பெரிய சமுத்திரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்.
>
> A constant revolt against everything.
>
> எனக்கு விடுதலை வேண்டும். தப்பித்தல் அல்ல. விடுதலை.

இந்தப் போக்கு, பழைய அகவயப் புதுக்கவிஞர்களின் உள்ளடக்கத்தில் இன்றும் காணப்படுகிறது. விடுதலை வேண்டும் என்று சொல்லுகிறவர்கள், உலக மக்களின் அடிமைத்தனத்திற்குக் காரணம் கண்டு, அடிமைத்தனத்தை ஒழிக்கப் போராடும், உலக மக்கள் சக்திகளோடு இணைத்துக் கொள்ளாமல், தங்களையே தனிமைப்படுத்திக் கொண்டு, விடுதலை வேண்டுமென ஆசைப்படுகிறார்கள். விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்று வருகிறபோது, தாம் முன்பு சுதந்திரமாக இருந்ததாக இவர்கள் உணருகிறார்கள். தாகூர்

கூறுவது போலத் தங்க விலங்குகளை நினைத்து, அது போன பின்பு அதற்கு ஆசைப்பட்ட கிளியைப் போல. வரலாற்று ரீதியாக, ஆளும் வர்க்கங்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டு, உழைக்கும் வர்க்கங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கப் பல அமைப்புகளை நிறுவிப் பாதுகாத்தன. அவற்றை உடைத்தெறிந்து தங்களை விடுவித்துக்கொள்ள அடிமைப்பட்ட வர்க்கங்கள் போராடியுள்ளன. வெற்றியும் பெற்றுப் புதிய அமைப்புகளை அமைத்துக்கொண்டன. அடிமைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட—அமைக்கப்பட்ட அமைப்புகளும் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள ஏற்படுத்திக்கொண்ட அமைப்புகளும் இவர்களுக்குப் பழைய செருப்புகள்தாம். அமைப்புகளே இல்லாமல் ஒவ்வொரு மனிதனும் சிங்கம், புலி போலச் சுதந்திரமாக இருக்கவேண்டுமாம். மக்கள் சமுதாயமாக வாழ்கிறவர்கள். தங்கள் வாழ்க்கைக்கு அடிப்படையான உற்பத்தியைத் தாங்களே படைத்துக்கொள்ளுபவர்கள். இதற்கான அமைப்புகளைப் படைப்பவர்கள். கால வளர்ச்சியால் பழசாகிப்போன அமைப்புகளை அழித்துவிட்டுக் காலத் தேவையான அமைப்புகளைத் தோற்றுவித்துக் கொள்ளுவார்கள்.

வரலாற்றுப் பார்வை, தத்துவப் பார்வை, சமகால நிகழ்ச்சிகளை அறியும் அறிவுக் கூர்மை எதுவுமில்லாத ஒரு குழப்பச் சிந்தனைதான் இந்த அகவய எழுத்தாளர்களுக்கு உள்ளது.

இந்தப் போக்கு இப்பொழுது வலுவிழந்து வருகிறது. உலக சமுதாயப் போராட்டத்தின் பேரொளி இவர்களில் பலரது அகவயக் கோட்டைகளுக்குள் கேட்கிறது. அதனால் கோட்டைகள் உடைகின்றன. ஆயினும், அகவயக் கோட்டைகளை மண் வைத்துப் பூசி அதனுள்ளேயே கிடந்து சாகப் போகிற பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்போக்குக்கு உதாரணங்கள் சில தருவோம்.

கடிகாரத்தை முன் வைத்துச் சொல்லியவை:

இப்படியெல்லாம்
உள்ளிருந்து தெறித்து விழுகின்ற
இக்கணத்தை மீறி
உன்னை யுகயுகமாய் நான் ஆட்கொள்ள
முற்படும் போதெல்லாம்
சூன்யமாய் கவ்வி
பிடறியில் அறைகிறாய்—இனியும்
உனக்கெதிராய் நான்
முயற்சிகள் எடுக்கப் போவதில்லை

காத்திருப்ப தெல்லாம்—உன்
இறுதி ஆயுதப் பிரயோகத்திற்குத்தான்
நான் மெல்லச் சிரித்தது
உனக்குத் துணிச்சல் மூட்டியது
நீ என்னை முதல் முறை முத்தமிட்டபோது
நான் தயங்கினேன், உறுதியற்று
இருந்தேன், ஆர்வம் காட்ட
அச்சமுற்றேன், சிறகுகள்
விரித்த பரவசம் உற்றேன்.
இன்று நம் வாழ்க்கை புளித்துவிட்டது
நாம் வேறான உலகங்களில்
வார்க்கப்பட்டதாய் உணர்கிறோம்.
சென்றதை நினைக்கையில்
ஏக்கமே மிஞ்சும்.

வாழ்க்கைப் போராட்டத்தின் பலமுனைப் போர்கள், இப்பொழுது ஒருமுனை நோக்கிக் குவிகின்றன. புற உலகில் அடிமைத்தனத்தை ஒழிக்கும் போராட்டம் வலுப்பெற்று வருகிறது.

அகவய உலகின் பிம்பங்கள் கலைகின்றன. இப்பொழுது அக உலகில் வாழ்வது கடினமாகிவிட்டது. உலகையும் சமுதாய அமைப்புகளையும் சுதந்திரத்தை நசுக்கும் ஆளும் வர்க்கத்தின் இயந்திரங்களையும், நடுத்தர வர்க்க அறிவாளிகள் காண்கின்றனர். அவர்களில் சில பகுதியினர் தங்கள் பொருளாதார நலன்களுக்காகப் போராட்டங்கள் நடத்துகிறார்கள். தனி உணர்வு, சங்க உணர்வாக, தொழில் பகுதி உணர்வாக வளர்ச்சி பெறுகிறது. ஆயினும் இன்றும் அவர்கள், உலகை மாற்றுகிற உழைப்பாளி வர்க்கச் சக்திகளோடு இணைந்து சமுதாய மாற்றப் போராட்டங்களில் கலந்துகொள்ளவில்லை. அதனால் தங்களை நசுக்கும், தங்களுக்குச் சுதந்திரத்தை மறுக்கும் ஆளும் வர்க்கத்தையும் அதன் அமைப்புகளையும் அவர்களது போலித்தனமான சுதந்திரச் சோசலிசத் தத்துவங்களையும் சாடுகிறார்கள். இவர்கள் இப்பொழுது அகவய உலகிலிருந்து, நடப்பியல் புற உலகில் நுழைகிறார்கள். புற உலகத்தில் சுதந்திரத்தை ஒடுக்கும் சக்திகளைக் காண்கிறார்கள். இவர்களது கவிதைகள், சமுதாய விமர்சனமாக, ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக ஒலிக்கின்றன. சில சமயம் கேலியும் கிண்டலுமாக, அமைப்புகளையும் போக்குகளையும் இவர்கள் பழித்துப் பாடுகிறார்கள். இக்கவிதைகளில் சமுதாய உணர்வும் ஆதிக்க எதிர்ப்பும் போலித்தன்மை எதிர்ப்பும் காணப்

படுகின்றன. அகவயவாதிகளைவிட, இவர்கள் ஆரோக்கிய மானவர்கள். ஏனெனில் இவர்கள் சமுதாய விமர்சகர்கள். சுதந்திரம் பற்றிய சில கவிதைகளில் இப்போக்கைக் காணலாம்;

**பூவரசு**

நான் பேருக்குத்தான்
பூக்களின் அரசு
இந்நாட்டு மன்னரான
உங்களைப் போல.

**சுதந்திரம்**

இரண்டடிக் கயிற்றால்
முளையுடன் கட்டப்பட்டுள்ள
மாடு கதறியது
மா...... மா......
எங்கிருந்தோ வந்த ஒருவன்
இரண்டடிக் கயிற்றை அவிழ்த்து
இருபதடிக் கயிற்றைக் கட்ட
மாடு இன்று துள்ளுகிறது
சுதந்திரம் அடைந்து விட்டதாய்.

**இந்தியப் புதல்வர்கள்**

ஜனநாயகப் பசுவிடம்
அரசியல் இடையர்கள்
ஆதாயப்பால் கறக்க
உதவும்...
நகரத்துக் கன்றுகள்.

**சுதந்திரம்**

நாங்கள் குருடர்கள்
பகல்......
எப்படியிருக்கும்?

**எல்லோரும் எந்நாட்டு மன்னர்**

நான்
இப்போது
நாடில்லாத ராஜா
ஒரு
ராணியில்லாத ராஜா.

இக்கவிதைத் துணுக்குகள், சமுதாய விமர்சனத்துக்கு ஏற்றவை. இவை சமுதாயத்தின் சுதந்திரத்தின் போலித் தனத்தைச் சாடுகின்றன.

சுதந்திரம் தவிர, மக்களின் உணர்வின்மையைக் குத்திக் காட்டும் பாடல்களும் உள்ளன. இவை சமுதாய உணர்வை எழுப்பும் நோக்கம் உடையவை.

பட்டமர மொன்று
லோகாயதப் பார்வையில்
வெட்டுண்டால்...
கிளிப்பொந்தும்
குலைத்துவிட
மாற்றிவிட
மாலைப்பொழுதில்
கண்ணில்பட்ட...

**மரபு**

கரிக்கின்ற உப்பை
இனிக்கிறது என்றும்
கரிய நிற ஆடுகளை
வெள்ளாடு என்றும்
கொடு விஷப் பாம்பை
நல்ல பாம்பென்றும்
சொல்லும் மரபு
நம் சொந்த மரபு
இல்லையென்றால்—
கல் நெஞ்சனான என்னை
'கருணாகரன்' என்று
அழைப்பார்களா!

**கைதி: எங்களுக்குப் பெயர் வைக்கத் தெரியும்**

வருங்காலத்தில்
ரெட் லைட் ஏரியாவுக்கு
கண்ணகிபுரம் எனப்
பெயர் வைக்கப் போகிறோம்.
'இராமலிங்க அடிகளார்
பிரியாணி ஓட்டல்'
திறப்புவிழாச் செய்வோம்.
'காந்தியார் பிராந்திக்கடை'
நடத்துவோம்.

அதற்கெல்லாம்
முன்னோடியாகத்தான்
இதோ
எங்கள் முதலாளித்துவத்திற்கு
நாங்கள் ஜனநாயகம் என்று
பெயரிட்டிருக்கிறோம்.

இவை முதலாளித்துவத்தின்மீது தாக்குதல்கள். அதன் போலி வேஷங்களைக் களைத்தெறியும் அங்கதங்கள். ஜோடனையை நீக்கி எலும்புக் கூட்டைச் சுட்டிக்காட்டும் துகிலுரிப்புகள்.

சில சமயங்களில், இது சர்வாம்ச நம்பிக்கையின்மையாகவும் நிராசையாகவும் வெளிப்படுவதும் உண்டு. உதாரணமாக சிற்பியின் 'எங்களுக்குப் பெயர் வைக்க தெரியாது' என்ற கவிதை ஏறக்குறைய Scepticism என்ற எல்லைக்குச் சென்று விடுகிறது:

நியாயங்களின் சமாதிகளை
நீங்கள் கண்டதுண்டா?
எங்கள் நாட்டில் அவைகளை
'நீதிமன்றங்கள்' என்போம்!
பொய்மைக்கு
பொன் மெருகு பூசும்
சொல் வித்தைக்காரரை
நீங்கள் பார்த்ததுண்டா?
அவர்களை நாங்கள்
'அரசியல்வாதிகள்' என்போம்!
நச்சுப்பாம்பை
'நல்ல பாம்பு' என்போம்!
கள்ளிச் செடியை
'கற்பக விருட்சம்' என்போம்!
எங்களுக்குப்
பெயர் வைக்கத் தெரியாது!

சமுதாய விமர்சனத்திற்குமேல், புறநிலைச் சமுதாய இயக்கநிலைகளை முழுதும் உணர்ந்து விமர்சனத்திலிருந்து புரட்சி மாற்றத்தில் நம்பிக்கையூட்டும் பாடல்களும், சமுதாயப் பிரக்ஞையில் உயர்ந்து நிற்பவர்களிடமிருந்து தோன்றுகின்றன. இந்திய ஏகபோக முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்தோடு அழிந்துபோகும் என்ற வருங்கால நிகழ்ச்சியைச் சமூக

இயல் விதிகளின் மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் 'அறிவன்' இவ்வாறு கூறுகிறார்:

அம்மா அடி அம்மா
தங்க முலாம் பூசிய
மேனி யழகை மோகித்த
அந்நிய மூலதனங்கள்
மிதியாடக் கொடுத்து விட்டாய்—
உன்னை.
விதவையாகக்கூட வாழ்ந்திருக்கலாம்
நீயோ
வேசியாக...
அடி அம்மா!
நீ மறுத்தாலும்
உன் ஏகாதிபத்தியக் காதலனோடு
உடன்கட்டை ஏற...
இங்கே
ஒரு தீக்குண்டம் தயாராகிறது.

போராட்டச் சக்திகளின் வெற்றியில் வரலாற்று ரீதியாக, சமூகவியல்வாதிகளின் போக்கில் நம்பிக்கையுடன் எழுந்த பாடல்களில் சிலவற்றிற்கு உதாரணம் கண்டோம்.

இவ்வாறல்லாமல், இளமையின் கோபத்தாலும் அவசர உணர்ச்சியாலும், இயங்கு சக்திகளின் தராதர பலத்தையும் சமுதாயத்தை மாற்றுகிற சக்திகளின் பக்குவநிலையையும் உணராமலும், சக்திகளின் இனம் உணராமலும் வலிமை உணராமலும் எழுகின்ற உணர்ச்சி வெளியீடான பாடல்கள் தற்காலத்தில் மிகுதியாக எழுகின்றன. இப்பாடகர்கள் துடிப்பு மிக்கவர்கள். ஆனால் வாழ்க்கைக் கண்ணோட்டத்தில் தத்துவப் பார்வையும் இயக்கவியல் அறிவும் இல்லாதவர்கள். இவர்களுடைய உணர்ச்சியும் சிந்தனையும், போராட்டச் சக்திகளின் இயக்கக் கதியை மிஞ்சி இவர்களைத் தனிமைப்படுத்துவதோடு இவர்களையும், போராட்டச் சக்திகள் மீது நம்பிக்கையிழக்கச் செய்கின்றன. இத்தகைய இளமைத் துடிப்பும் புரட்சி ஆவேசமும் தோன்றுகிற சில கவிதைகளைக் காண்போம். இக்கவிதைகளில் முற்றிலும் பழமையையும் வரலாற்றுச் சாதனைகளையும் மறுக்கும் போக்குகளும் உண்டு. ஆயினும் இவை உடைமை ஆதிக்கத்தை எதிர்க்கும் உள்ளடக்கம் உடையவை. எதிர்க்கிற சக்திகளோடு இணைந்து அவற்றை வளர்க்கப் பாடாமல், தனியான சிலரது தர்மாவேச உணர்ச்சிப் பெருக்காக வெளியாகி விடுகிறது. இதற்குச் சில உதாரணங்கள் தருவோம்:

நம்மீது அவர்களெறிந்த
கற்களை
பொறுக்கி வையுங்கள்
மார்பில் முத்தமிட்ட
துப்பாக்கி ரவைகளை
எடுத்து வையுங்கள்
இரத்தம் கசிந்த
தடியடித் தழும்புகளை
எண்ணி வையுங்கள்.
ஏனென்றால்—
அவர்கள்
வட்டி வாங்கியே
பழக்கப்பட்டவர்கள்.

பழி வாங்குகிற உணர்ச்சி இங்கே இருக்கிறது. ஆனால் சமுதாய மாற்றச் சக்திகளைப் பற்றிய அறிவு இங்கே இல்லை.

உணவில்லாமல்
எமது மக்கள்
இரத்தம் வெளுக்கிறது.
இந்த அனலில் எரிந்து
நாம் கொள்கையில்
இரத்தமாய் சிவக்கிறோம்.

பசியுணர்வே, புரட்சியுணர்வாகிவிடும் என்ற Philosophy of poverty என்னும் தத்துவச் சிந்தனை இது. பசி மட்டும் கொள்கையைச் சிவப்பாக்குவதில்லை. அது பத்தும் பறந்து போகச் செய்யலாம். சமுதாய இயக்கத்தின் வர்க்க முரண்பாடுகளில் உழைக்கும் மக்களின் ஒற்றுமையும் போராட்டமும் தத்துவப் பார்வையுமே உலகை மாற்றும் சிவப்புக்கொள்கையைப் படைக்கும். பசியும் கோபமும் அல்ல.

இதே கவிதையில் ஆதிக்கக்காரர்களின் புரட்சித்தடை மதில்கள் எப்படி உடைக்கப்பட்டு, புரட்சியும் புத்துலகமும் தோன்றும் என்பதைச் சரியான தத்துவப் பார்வையில் கவிஞர் கூறுகிறார். இங்கே வரலாற்றுப் பிரக்ஞையும் இயங்கியல் அறிவும் கவிதையில் மின்னுகின்றன:

சிம்மாதனங்கள்
சீரழிய
செல்வமேடுகள்
சரிய

இங்கு—
எந்தச் சிவனும்
கால் தூக்கத் தேவையில்லை
உங்களின்
நூறு—ஆயிரம்—கோடி கரங்களின்
அசைவுகளே
ஊழிப் பிரளயங்களின்
உற்பத்திக் கேந்திரங்கள்
ஃ ஃ ஃ
வேள்வி செய்யும் எம்
வினாடியுளிகளை
வினாவிக் கொண்டிருக்கிறோம்
கரையேறப் போகிறோம்—நாங்கள்
கடல் மீறப் போகிறோம்.

வினாடிகள் துளிதுளியாகச் சேர்ந்து கரையேறிக் கடலை மீறப் போவதாக அவை பேசுவதுபோலத் தமிழன்பன் எழுது கிறார். இதில் தத்துவக் கனம் இருக்கிறது.

தற்காலத் தனி உழைப்பாளிக்குச் சமூக உணர்வூட்டி, சமுதாய மாற்றப் போராட்டத்தில் அவனது பணியை உணர்த்தி அகவயச் சிந்தனை, சோக முனகல்கள், துன்பக் குமுறல்கள் முதலிய இயலாமைச் சிந்தனைகளிலிருந்து மீட்டுப் போராடுகிற உழைப்பாளர் மூலபலப் படையோடு இணைக் கிற கவிதைகளும் பூத்துள்ளன. அப்படையின் வீரநடைக்கு, நடைப்பாடல்களும் வெற்றிக்கு முரசு கொட்டுகிற பாடல் களும் தோன்றுகின்றன. வருங்கால நம்பிக்கையை, உலகை மாற்றுகின்ற உழைப்பாளி மக்களுக்கு அளித்து, கடந்த கால, நிகழ் காலப் புரட்சிகளின் வெற்றிகளும், தானே மாற்றி யமைத்த சமுதாயத்தைத் தானே பாதுகாத்து, மனிதர் அனை வரும் சுதந்திரத்தோடு வாழும் நிலைமைகளை உருவாக்கப் பாடுபடும் மனிதனது அறிவுத் திறனையும் உழைப்புத் திறனை யும் போற்றிப் புகழ்கிற கவிதைகள் பல தற்கால முற்போக்குப் பூங்காவில் பூத்து மணம் வீசுகின்றன.

மேலே கூறிய தன்மையுடைய கவிதைகளுக்குச் சில உதா ரணங்கள் தருவோம். 'ஓ... மே தினமே' என்ற தலைப்பிட்ட கவிதை இவ்வாறு கூறுகிறது:

நீண்ட காலமாக—
கோபுரத்தைத் தாங்குவது
தானே என்று இறுமாந்திருந்த

கலசத்தை நொறுக்கித்தள்ளி
அடித்தளத்துக்கு அஸ்திவாரமிடப்பட்டது

ஃ ஃ ஃ

பெரிய கோட்டை கட்டினார்கள்
எத்தனை அழகு
எவ்வளவு செலவு
சுற்றிலும் அகழி
முற்றிலும் முதலைகள்
ஆனால்—
வாசல் அமைக்க மறந்து விட்டார்கள்.
பாட்டாளிகள் வழியமைக்கப் புறப்பட்டபோது—
எத்தனை எதிர்ப்பு!
அந்த எதிர்ப்பிலேயே
கோட்டை
தரைமட்டமாகியது
தரை கோட்டையாகியது
என்ன விந்தை!

ஃ ஃ ஃ

உலகைப் படைத்த தொழிலாளிக் கடவுளின்
சந்நிதியில்
இதோ நான்
ஆசைப்பூக்களோடு நிற்கிறேன்.
இதை ஏற்றுக் கொள்ள
இறைவன் இன்னும் வரவில்லை.
இன்று நல்ல நாள்!
இதைப் படைக்காமல்
நான் போகப் போவதில்லை!

வியத்நாம் பற்றி ஒரு கவிதை—அதன் தலைப்பு அக்கினிக் குஞ்சுகள்.

டாலர்கள் குண்டுகளாகின்றன
டாங்கிகள் எரிமலைகளாகின்றன
விமானங்கள்
நெருப்பு மழை
பொழிகிறது!
நாடே பற்றி எரிகிறது
உலகப் படத்திலிருந்து ஒரு நாடு ஒழிந்தது.

மூலதனம் சிரிக்கிறது
ஒரு நாட்டின்
முடியாத அழிவை ரசிக்கிறது
ஓ, எரியும் நாட்டில்
எத்தனை ஆயிரம் நெருப்பின் பிள்ளைகள்
அக்கினிக்குஞ்சுகள்...
ஆத்திரம் கண்களை மறைக்கிறது
ஆதிக்கம் மண்ணை அழிக்கிறது.
புகை அடுப்புக்குள்ளே
பூனைகள் மாட்டிக் கொண்டன
பூகம்ப வெடிப்புக்குள்ளே
புலிகள் விழுந்து விட்டன.

இவர்கள் சார்புநிலைக் கவிஞர்கள்; புரட்சிக்காரர்கள். உலகை மாற்றுகிற சக்திகளோடு சேர்ந்து முன்னேறுபவர்கள். ஒவ்வொரு காலத்திலும், சமுதாய வர்க்கங்களின் போராட்டங்களில், அவர்களது யுகக்கடமைகளை நிறைவேற்ற முன்னேறுகிற மக்கட் படையின் அணியில் ஒரு கவிஞன் எங்கிருக்கிறான் என்பதைப் பார்த்தே அவனது கவிதையுள்ளடக்கம் முற்போக்கா, பிற்போக்கா என்று தீர்மானிக்கவேண்டும்.

வாழ்க்கையின் சாரத்தை உணராமல் தன் குறுகிய மனத்தில் புகுந்துகொண்டு, மனித சமுத்திரத்தின் பரப்பிலிருந்து விலகித் தன்னை ஒரு துணையாக்கிக் கொண்டு வறண்டு போகிறவன்—பிற்போக்காளன்.

ஆதிக்க உலகை உடைத்தெறிந்து, சமத்துவ-சுதந்திர உலகை நிர்மாணிக்க உறுதி கொண்டு முன்னேறுகிற சக்திகளைக் காணாமல் தனிமனிதக் கனவுகளிலும் தனிமனிதச் சுக போகக் கற்பனைகளிலும் ஈடுபடும் கவிஞன் பிற்போக்காளன். மனித இனத்தின் சுதந்திரப் போராட்டத்தைத் திசைதிருப்பி விடப் போலிச்சுதந்திர கோஷங்களை எழுப்புகிறவன் பிற்போக்காளன். போராட்ட அணிகளை விட்டு விலகிக் கூச்சல் போடுகிறவன் பிற்போக்காளன்.

வரலாற்றுப் பிரக்ஞையோடு, புறஉலக இயக்கத்தின் தற்கால கதியை அறிந்து, அதனோடு இணைந்து முன்னேறுபவனும் முன்னேறாதவர்களை முன்னேறத் தூண்டுபவனும், முற்போக்காளன். இப்போரில் 'நடுநிலை' என்று ஒதுங்குவோரைக் குத்தியும் மிரட்டியும் குழைந்தும் போராட்ட அணிக்குக் கொணர்பவன் முற்போக்காளன்.

# புதுக்கவிதையில் புதிய போக்கு

## மீராவின் கனவுகள்

கனவுகள் உள் ஆழத்தின் உறக்கத்தில் எழுந்து நனவில் முகிழ்பவை. கற்பனைகள் நனவிலேயே தோன்றிப் பறப்பவை. ஆயினும் இவையிரண்டிற்கும் கட்புலனாகாத வேர்கள் சமுதாய உறவுகளே. அவற்றின் தடைகளினால் உள்ளத்தில் வளரும் கனவும் கற்பனையும் சிறைப்படுத்தப்பட்டு வாழ்க்கையின் இன்பமாக மாறிவிடாமல் வறண்டு போகின்றன. வறட்சியைத்தான் மீரா காகிதமாக்கிவிட்டார்போலும்.

தற்காலப் பண உறவுச் சமுதாயத்தில் வாழ்க்கையின் மதிப்புகளுக்கு அடிப்படையே பணம்தான். அமெரிக்காவில் 5,000 டாலர் யோசனை, 1000 டாலர் அழகு, 10,000 டாலர் பரிசுக்குரிய புத்தகம், 2,000 டாலர் மதிப்புடைய வெண்கலச் சிலை, 20,000 டாலர் வருமானம் தரக்கூடிய அறிவியல் திட்டம் (Project) என்று கலை முயற்சிகளுக்கும் அறிவியல் முயற்சிகளுக்கும் கலைப் பொருள்களுக்கும் டாலரில்தான் மதிப்பு வைக்கிறார்கள். ஸ்டாலினது மகள் ஸ்வெட்லானாவின் புரளிக் கதைகளை 7 லட்சம் டாலர் விலைகொடுத்து வாங்கி, அவளது சுயசரிதையாக வெளியிட்டன, அமெரிக்கப் பொய் விலைப் பத்திரிகைகள். பொய்க்குக்கூட விலையுண்டு முதலாளித்துவ உலகின் தலைநகரில்.

மனித உணர்வுகளில் மிகவும் நுண்மையும் அழகும் வாய்ந்தவை இளமைக் காலக் கனவுகளும் கற்பனைகளும். இவை அழகிய மொட்டுக்கள். மலர்வதற்குரிய தோட்டமின்றி அவை வாடிவிடுகின்றன. தோட்டத்தின் சொந்தக்காரன் பண மதிப்பையேயன்றி அழகைக் காண முடியாத குருடன். இவ்வுணர்வுகளைக் கவிஞர்களும் கலைஞர்களும் போற்றினாலும், வாடிவிடும் இதனைப் பார்த்துச் சோக உணர்வும் கொண்டனர். பண மதிப்புச் சமுதாயத்தில், திருமண உணர்வும் ஒரு பண உறவே. இதனை நான் விளக்கவேண்டியதில்லை.

எனினும் பண மதிப்பே, வாழ்க்கையின் அடிப்படை மதிப்பாக இருக்கும் ஒரு சமுதாயத்தின் திருமணக் கருத்தையும், மனித உணர்வு மதிப்பையே (human value) வாழ்க்கையின்

அடிப்படை மதிப்பாகக் கருதும் மனித மதிப்புச் சமுதாயத்தின் திருமணக் கருத்தையும் ஒரே ஒரு அனுபவத்தின் மூலம் குறிப்பிட்டுக் காட்டலாம் என எண்ணுகிறேன்.

என்னோடு ஒரு முதிய இந்திய எழுத்தாளர் மாஸ்கோவிற்கு வந்தார். அவர் இளமை முழுவதையும் ஆயுதப் புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டதற்காகச் சிறையில் கழித்தவர். 44 வயதில் திருமணம் செய்துகொண்டார். தமது இந்தி இலக்கிய அறிவைப் பயன்படுத்தி நன்றாகச் சம்பாதித்தார். டெல்லியில் வீடு கட்டினார். பையனை இங்கிலாந்தில் வாணிபக் கணக்கியல் கற்க அனுப்பினார். சொந்தக் கார் வாங்கினார். அவருக்கு ஐந்து பெண்கள் உள்ளனர். திருமணமாகவேண்டும். அவருடைய வாழ்க்கைப் பிரச்சினை அது. அவர்களுள் இருவருக்குக் கல்லூரிக் காதல் ஏற்பட்டு அக்காதலர்களையே மணந்துகொள்ள விரும்புகிறார்கள். கல்லூரிக் காதலாயினும் சரி, கட்டி வைக்கப்படும் கணவனாயினும் சரி, அவருடைய சாதியில் வரதட்சணையின்றிக் கலியாணம் செய்துகொள்ள மாட்டார்களாம். இவருடைய வசதிகளைப் பார்த்து அதிக வரதட்சணை கேட்கிறார்களாம். ஒவ்வொரு பெண்ணுக்கும் 20,000 ரூபாய் கலியாணத்திற்காக வேண்டுமாம். அப்படிச் செலவழித்துவிட்டால் அவருக்கும் அவருடைய மனைவிக்கும் ஒரே மகனுக்கும் வீடு மட்டும்தான் மிஞ்சுமாம். அது 2 லட்சம்தான் பெறுமாம். என்ன செய்வது என்று இவர் கவலைப்படுகிறார். இந்தக் கவலையோடுதான் மாஸ்கோவில் இளம் பெண்களைப் பார்த்து அவர்களுடைய பெற்றோர்களுக்காகக் கவலைப்பட்டார். ஒரு நாள் எங்களுடைய ரஷ்ய மொழிபெயர்ப்பாளர் செர்கேயிடம் அவர் கேட்டார்: "உங்களுக்குச் சகோதரிகள் உண்டா?"

"உண்டு. ஐந்து தங்கைகள்."

"ஐயோ பாவம்" என்று தனது அனுதாபத்தை அவருக்குத் தெரிவித்துக்கொண்டார். மொழிபெயர்ப்பாளருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் தனக்கு அனுதாபம் தெரிவித்ததற்குக் காரணம் கேட்டார்.

"இந்த ஐந்து பெண்களையும் மணம் செய்விக்க உங்கள் பெற்றோர்களுக்கு எவ்வளவு செலவாகும் என்று நினைத்துத்தான் நான் அனுதாபம் தெரிவித்தேன்" என்றார்.

"கலியாணம் என்றால் பணம் எதற்கு?" என்றார் மொழிபெயர்ப்பாளர், அப்பாவித்தனமாக.

"பின்னே, மணமகனுக்கு வரதட்சணை, கலியாணச் செலவு, நகைகள், விருந்து."

செர்கேக்கு எதுவுமே விளங்கவில்லை. "மணமகனுக்கு ஏன் பணம் கொடுக்கவேண்டும்? கலியாணத்துக்கு என்ன செலவு? விருந்துக்கு என்ன? ஒரு மாதச் சம்பளத்தில் ஒரு பங்கு செலவாகுமா?" என்றார்.

இந்தி எழுத்தாளர் திடுக்கிட்டார். "இங்கு ஒரு கலி யாணத்துக்கு என்ன செலவாகும்?" என்றார். அவர் பதில் சொல்லாமல் உடனே எங்களை யுக்ரேனோ ஓட்டல் விருந்து மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். 25 விருந்தினர்களுக்கு 'ரிசர்வ்' செய்யப்பட்ட மேஜைகளைப் பார்த்தோம். மேஜை மீது மதுக் கிண்ணங்கள் இருந்தன. 'திருமணம்—வாழ்க......' என்று மணமகன், மணமகளின் பெயர்கள் ரஷியனில் எழுதப் பட்டிருந்தன.

22 பேர் வந்தார்கள். மேசை நாற்காலிகளில் அமர்ந்தார் கள். மணமகன் மணமகள் யார் யாரென்று தெரியவில்லை. அவர்கள் உட்கார்ந்ததும் இரண்டு மலர்ச்செண்டுகளை மண மக்களிடம் நண்பர்கள் கொடுத்தார்கள். அவர்கள் எல்லோ ருமே சமவயதினர். மணமக்களின் தாய் தந்தையர்கள் வர வில்லை.

மணமக்களைச் சுற்றியிருந்த நண்பர்கள் ஒரு பாடகியை ஏற்பாடு செய்திருந்தனர். அவள் பாடினாள். பிறகு விருந்து. ஒவ்வொருவரும் வெவ்வேறு உண்டிகளுக்கு ஆர்டர் செய்து பணம் கொடுத்தார்கள். மணமகனும் மணமகளும் வோட்கா வாங்கி எல்லோருடைய கிண்ணங்களிலும் ஊற்றினார்கள். எல்லோரும் எழுந்து நின்றார்கள். ஒரு மடக்குக் குடித்தார் கள். ஒருவன் "கசக்கிறது" என்றான். உடனே எல்லோ ருடைய கண்களும் மணமக்கள் மீது திரும்பின. மணமக்கள் இறுகத் தழுவி உதடுகளில் முத்தமிட்டனர். மறுபடி ஒரு மடக்கு—மறுபடி "கசக்கிறது" என்ற குரல்; மறுபடி முத்தம். சில தடவைகளுக்குப் பிறகு மணமகள், "இனிக்கிறது" என்று சொல்லுகிறாள். எல்லோரும் சிரிக்கிறார்கள். பெண்கள் "இவ்வளவு சீக்கிரம் இனிக்கலாமா?" என்று கேட்கிறார்கள். பிறகு நீண்ட நேர ரஷிய விருந்து. பிறகு நடனம்.

செர்கே சொன்னார். 'கசக்கிறது' என்பதைச் சொல்லி, 'இனிக்கிறது' என்று மணமக்கள் சொல்லும்வரை திருமண நிகழ்ச்சியாம். இனி இவர்கள் பதிவு அலுவலகத்தில் பதிந்து கொள்ளுவார்களாம்.

"என்ன செலவாகலாம்?"

வோட்காச் செலவு 20 ரூபிள்; விருந்தறை வாடகை 5 ரூபிள்; விருந்துச் செலவு அவரவருடையது 5 ரூபிள். மண மக்களுக்குச் செலவு கிடையாது. பாடகிக்கு ஊதியம்

10 ரூபிள்; உடை, வழக்கமாகத் தைக்கிற புது உடைகள்; ஆபரணங்கள் இல்லை; வரதட்சிணை இல்லை.

பரிசுகள்—உண்டு ஏராளமாக. மணமகன் டெலிவிஷன் தொழிலாளி; மணமகள் ஆசிரியை. டெலிவிஷன் தொழிலாளிகள் பரிசளிப்பார்கள்; இவளுடைய சக ஆசிரியர்கள் பரிசளிப்பார்கள்; தாய் தந்தையர்கள் பரிசளிப்பார்கள். இவர்கள் தனி ‘ஆஸ்டல்’களில் வசிக்கிறார்கள்; இனி இரண்டு அறை கொண்ட வீட்டிற்குப் போய்விடுவார்கள்.

“இவர்கள் ஏன் கலியாணம் செய்துகொண்டார்கள்?” என்றார் இந்தி எழுத்தாளர். செர்கே, “நாம் ஏன் சாப்பிடுகிறோம்?” என்று கேட்டார்.

“அதுவல்ல; இவர்கள் ஒருவரையொருவர் ஏன் வாழ்க்கைப் பங்கினர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள் என்று தெரிந்துகொள்ளவே இக்கேள்வியைக் கேட்டேன்” என்றார் இந்தி எழுத்தாளர்.

“அதுவா? இவன் அவளை நூலகத்தில் சந்தித்தான். அடிக்கடி அவர்கள் சந்தித்தார்கள். அவள் எலெக்ட்ரானிக் விஞ்ஞானம் பற்றி அறிந்துகொள்ளப் படித்தாள். அவனும் படித்தான். சேர்ந்து ஒரு மாலைப்பள்ளியில் எலெக்ட்ரானிக்ஸ் படித்தார்கள். ஒருவரது இயல்பு அடுத்தவருக்குப் புரிந்தது. புரிந்தபின் பிடித்தது. முக்கியமாக அவனுக்குத் தனது தொழிலில் தேர்ந்தவன் என்றும் பிற தொழிலாளருக்கு உதவுபவன் என்றும் புகழ் இருந்தது. அவள் நல்ல ஆசிரியை; சமூக மதிப்புப் பெற்றிருந்தாள். அவளுடைய மாணவ மாணவியர் அவளைக் கண்டதும் துள்ளிக் குதித்தனர். இத்தகைய தனி ஆர்வங்கள், சமூகப் பொறுப்புணர்வுகள் இவற்றைக் கண்டும், தங்கள் உள்ளுணர்வான காதல் சரியான திசையில்தான் செல்லுகிறதென்று கண்டும் ஒருவரையொருவர் மணந்து கொள்ளத் தீர்மானித்தனர். தீர்மானத்தைப் பெற்றோர்களிடமும் நண்பர்களிடமும் கூறினர். பெற்றோர்கள் மணமகள், மணமகனது தனிப்பண்புகளையும் சமூகப் பண்புகளையும் (individual traits, social traits) பற்றி விசாரித்தார்கள். நண்பர்கள் இங்கு மணவிழாக் கொண்டாடத் தீர்மானித்தார்கள். இந்த விழா மகிழ்ச்சியாக இருக்கவில்லையா?”

“உங்களுக்கு மணமான இருவரில் யாரையாவது தெரியுமா?” என்று செர்கேயை நான் கேட்டேன். “மணமகள் என்னோடு ஆசிரியர் கல்லூரியில் படித்தவள். நன்றாகத் தெரியும்.”—செர்கே.

அதற்குள் மணமகள், மணமகனை அழைத்துக்கொண்டு எங்கள் மேஜைக்கு வந்தாள். நாங்கள் இந்திய விருந்தினர்

என்று காட்ட நம் நாட்டுக் கொடியும் சோவியத் கொடியும் இணைந்து மேசை மீதிருந்தன. அவள் கேட்டாள் "இந்திய விருந்தினர்களா?"

"ஆம்; இவர் பேராசிரியர் வானமாமலை. 25 வருட ஆசிரிய அனுபவம்; பண்பாட்டு ஆய்வாளர்; கம்யூனிஸ்டு. இவள் லுயூபோமோவா, மணமகள். இவர் நிகிதாவ் லாடிமாவ், மணமகன்." இருவரும் தங்கள் கையிலிருந்த செண்டுகளை என்னிடம் கொடுத்தார்கள். கைக்குலுக்கினார்கள்.

மணமகன் ரஷியனில் ஏதோ சொன்னான். எதிர்பாராத விதமாக மணமகள் என்னை முகத்தில் முத்தமிட்டாள். செர்கே "நீங்களும்..." என்றார். நான் அவள் முகத்தில் முத்தமிட்டேன். மணமகன் என்னைத் தழுவி முத்தமிட்டான். நான் அவர்களுக்கு வாழ்த்துக் கூறினேன்.

"உங்கள் இன்பம் வளர்க. இருவரும் உங்கள் அறிவுத் திறனால் சோவியத் நாட்டிற்குச் சிறந்த பணிபுரிக. கம்யூனிசத்தை நிர்மாணிக்க உங்கள் அறிவுத்திறன் வளரட்டும். கம்யூனிச உலகில் வாழ இளஞ் செடிகளை நீங்கள் நட்டுக் கொடுங்கள்." ரஷியனில் மொழிபெயர்த்தவுடன் எல்லோரும் கைதட்டினார்கள்.

சோசலிச அமைப்பில் மணமுற்காலக் கனவுக் கற்பனைகளுக்கும் அதாவது காதல் செடியில் அரும்பும் மொட்டுக்கும் மலர்க் கொத்துகளுக்கும் மணவாழ்க்கையாகிற செடி வளரும் நிலத்திற்கும் முரண்பாடுகள் இல்லை. நிலம் வளமான நிலம். கனவு கற்பனை மொட்டுகள் வளருகிற மனிதநேச நிலமே, இச்சமுதாயத்தின் இயல்பான தரை. மனித மதிப்புகளே, சமுதாயத்தின் மதிப்புகள். அதாவது, காதல், கற்பனை, கனவுகள் எல்லாம். இவை வாடுவதில்லை. மொட்டு மலர்ந்து காய்த்துக் கனிந்து......

இனி நமது கனவு+கற்பனை=காகிதங்களுக்கு வருவோம். நமது சமூக வாழ்க்கையிலிருந்து மீரா தொடங்குகிறார். பாரதி கூறியதுபோல கவிதையில், காப்பியத்தில், புராணத்தில் காதலை ரசிக்கும் தமிழன், கிணற்றோரத்தில், ஆற்றோரத்தில் காதலென்றால் சீறுகிறான். அதனைக் கொன்று பாடை கட்டி அனுப்புகிறான்.

ஆம்; நமது சமுதாய வாழ்க்கையில் திருமணப் பொருத்தம் என்பது ராசிப்பொருத்தம், நட்சத்திரப்பொருத்தம், ஜாதகப் பொருத்தம், சமுதாய உறவுப் பொருத்தம், அதாவது பொருள் நிலைப் பொருத்தம், பிறகு சாதிப் பொருத்தம், அதாவது பொருளாதார நிலை சமமானதாகவும் அல்லது தம்மைவிட

ஒரு மட்டம் உயர்வாகவும் சாதி ஏணியில் ஒருபடியாகவும் இருத்தல்வேண்டும்.

மணமகன், மணமகளது தனி இயல்புகள், அதாவது உருவம், ஆர்வங்கள், கனவுகள், கற்பனைகள், அறிவுத்திறன் இவை யாவும் முக்கியமான பொருத்தங்கள் அல்ல. அதாவது மனிதப் பண்புப் பொருத்தம் திருமணத்திற்கு முக்கியமான பொருத்தம் அல்ல. எனவே இயல்பான மனிதப் பொருத்தங் களான கனவுகள், கற்பனைகள், மனிதநேசம், காதல் எல்லாம் இளமையின் ஒளிமிக்க உள்ளக் கிளர்ச்சிகளாக இருந்து, அவற் றிற்கு இடமில்லாத சமுதாயத்தில் வேறு பொருத்தங்களுக்கு இடங்கொடுத்து வாடிப் போகின்றன.

இந்நிலையிலிருந்து முன்னுரையை முடிவுரையாக எழுது கிறார் மீரா:

என் வேட்கையே
நீ இவ்வளவு தாமதமாக வந்து
இவ்வளவு விரைவாகப் புறப்பட்டு விட்டாயே!
நீ வந்தபோது இனிமேல்தான் என் வாழ்க்கை
தொடங்கப் போகிறது என்று எண்ணினேன்.
......நீயோ முடிவுரை
எழுத வந்திருக்கிறாய்.
என் வேதனை உன் விழிகளை நனைக்கிறது
என் அந்தரங்கமே
இதோ உன் சொல்லோவியம்......
நம் உள்ளப் புணர்ச்சிக்குப் பிறந்த உயிரோவியம்......
உன் காலடியில் வைக்கிறேன்

உள்ளப்புணர்ச்சி மனித மதிப்புகளால் நிகழ்வது. உடல் புணர்ச்சியாம் திருமணப்பிணைப்பு மனிதமதிப்பற்ற தற்காலச் சமூக மதிப்புகளால் நிகழ்வது. மனித மதிப்பு, சமூக மதிப்பால் மிதிபட்டுச் சாகிறது. நல்ல சோக கீதத்தோடுதான் சாகிறது.

இந்தச் சோக கீதம் எவ்வளவு கம்பீரமாக ஒலிக்கிறது. ஹெலனுடைய வாழ்க்கையைப் போல, அன்னாகரினாவின் உள்ளத்துடிப்பு போல, ஜூலியத்தின் கீதத்தைப் போல, சகுந்தலையின் ஏமாற்றத்தைப் போல, இந்த மாபெரும் மனித சோகச் சுமையைத் தாங்கிக்கொண்டு முகவுரையான முடிவுரை பிறந்துவிட்டது.

பிறகு வாழ்க்கையின் மனிதத்தன்மை வெளியாகும் ஒரு குறுகிய காலத்தின் இன்பம், கிளர்ச்சி, ஒளி முதலியவற்றால் உடலும் உள்ளமும் தூண்டப்பட்டு, கனவு, கற்பனை ஏறிய

கவிதைகளாக வெளிப்படுகின்றன. இது ஐந்திணை அல்லது ஏழுதிணை அகவொழுக்கமன்று. கனவும் கற்பனையும் உண்மையாகிவிடும் என்று நம்புகிற இளமை எழுச்சி, சமுதாய மதிப்புக்கள் என்ற தூக்குமரத்தைக் காண்பதில்லை.

இன்று வளர்ந்துள்ள அறிவுநிலையின் பரப்பு, இன்று முன்னேறியுள்ள மனித ஆற்றல் வரம்பு, சோசலிச அமைப்பு, மனித இயல்புகளைத் தாங்கும் விளைநிலமாகவும் மனித ஆற்றலின் விரைவூக்கியாகவும் இருப்பதை அறிந்த அறிவு, இவை யாவையும் கலந்து நனவுலக மொழிக் கோவைகளால் கவிதை ஊற்றாகப் பிறக்கிறது. உலகப் புதுக்கவிதை மரபு தரும் படிம உத்திகளால் கனவுகளையும் கற்பனைகளையும் சித்திரங்களாகவும் அகப்படிமங்களாகவும் ரசவாதம் செய்து மீரா அளிக்கும் புதுக்கவிதைகளின் தாக்கம் நமது ரசிகர்கள் உள்ளத்தில் இனிய மலர்களாக மலராமற் போகாது.

இளமைக் காதல் வேறொன்றையும் வேண்டாத ஒருமை புணர்ச்சியாக சில கணங்களாவது உண்மையாக நீடிக்கிறதல்லவா? வெறும் கானல் நீராக இல்லாமல், உள்ளத்தில் நிலையான பதிவையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் மாபெரும் கிளர்ச்சியல்லவா!

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்

என்று பாரதி பாடினார்.

இளமையில் அதுவே மனிதனை இயக்கு சக்தியாக அதனை அனுபவிப்பவருக்குத் தெரிகிறது. இந்த உணர்வு மின்னலையே மீரா இப்படிக் கூறுகிறார்.

மின்னல் இருளின் கனத்தைக் கிழிக்கும்பொழுதுதான் இருளின் அடர்த்தி நமக்குப் புரிகிறது. சுதந்திர வேட்கை கனன்று எரியத் தொடங்கும்பொழுதுதான் அடிமைத்தனத்தின் அசிங்கம் நமக்கு விளங்கத் தொடங்குகிறது. இதனைப் போலவேதான் காதல் என்னும் இனிய நீரோடை பாய்ந்த பின்னர்தான் இளைஞனுக்குத் தனது முந்திய வறண்ட வாழ்க்கையை அறிய முடிகிறது என்று கவிஞர் மீரா கூறுகிறார்:

நீ எனக்குத் தாகவெறி தந்தாய்
பிறகுதான்—
என் இதயம் வறண்ட நிலமாய்க் கிடந்தது
எனக்குப் புரிந்தது

துறவு பற்றிப் பேசிப் பெருமைப்படும் நாட்டில், உலக அறிவும் இன்பங்களும் கீழ்த்தர உண்மையென்றும், வெறுமையையும் உள்ளத்தைத் துழாவுதலையும் உயர்தர உண்மையென்றும் கருதுகிற இந்நாட்டில், இளங்கோவையும் கம்பனையும் பாரதியையும் ஷெல்லியையும் விட்மனையும் பின்பற்றி மீரா கூறுகிறார்:

நான் துறவியாகப் போகிறேன்
பற்றுகள் அனைத்தும் முற்றும் நீக்கிப்
பரம்பொருளிடம் மட்டும்
பற்றுவைக்கும் துறவிகளைப்பற்றி
நீ கேள்விப்பட்டிருப்பாய்.
நான்
சகல பற்றுக்களையும் வீசியெறிந்துவிட்டு
உன்மீது மட்டும் பற்று வைக்கும்
துறவியாகப் போகிறேன்.

'வீசியெறிந்துவிட்டு' என்ற எளிய சொற்களில் கவிஞர் இளமையின் காதலுணர்ச்சியின் வலிமை முழுவதையும், படிமம், உவமை எதுவுமின்றிக் காட்டிவிடுவதில் முழுமையான வெற்றியடைந்து விடுகிறார்.

மகிழ்ச்சி, ஏக்கம், அழுகுக் கிளர்ச்சி ஆகிய மனித உணர்வுகளையெல்லாம், சமுதாய உணர்வு-உவமைகளால் அகவெளியீட்டுச் சித்திரங்களாகக் கவிஞர் படைக்கிறார். இதுவொரு சிறந்த உத்தி. அதிலும் ஒரு பகுதி மக்களின் தற்கால வேட்கையை, காதல் இன்ப வேட்கைக்கு உவமை கூறும் போக்கு புதுமையாக உள்ளது.

சங்க காலத் தலைவனுடைய காதலில் புகழ்ச்சியிருக்கும். ஆனால் இப்படித்தான் பேசப்பட வேண்டும் என்ற விதிப்படி தான் அவன் பேசுவான். பொங்கும் உணர்ச்சிக்குப் புதிய சொற்கால்வாய் அமைத்துக்கொள்ளமாட்டான்.

உலக இன்பத்தைச் சிற்றின்பம் என ஒதுக்கிக் கற்பனையான தெய்வ நாட்டத்தைப் பேரின்பம் என்ற நாட்டில், இந்தப் போலிக்கற்பனையை ஒழிக்கப் பாரதி "எத்தனை கோடி இன்பம் வைத்தாய்" என்று பாடினான். தனது மூதாதையை மிஞ்சிவிடுகிறார் மீரா:

என் மூதாதை ஒருவன்
பராசக்தியிடம் வரம் கேட்டான்.
காணி நிலம்

மாடமாளிகை
தென்னந்தோப்பு
அது இது என்று வேண்டி
இறுதியில் ஒரு பத்தினிப்பெண்ணைக் கேட்டான்
நான் கேட்டால்
உன்னை மட்டும்தான் கேட்பேன்
உன்னைப் பெற்றால்
உலகத்தில் உள்ள
எல்லாம் பெற்ற மாதிரித்தானே

காதலைப்பற்றிய நவீன சிந்தனைகளைத் தொல்காப்பியத்தில் காண்போர் உள்ளனர். வருங்காலமனைத்திற்கும் ஒரு காதலன் என்ன பேசவேண்டும் என்பதை அவர் சொல்லிவிட்டதாக வரலாற்றையும் வளர்ச்சியையும் அறியாதவர்கள் தொல்காப்பியர் காலத்திலேயே வாழ்ந்துவிட்டுப் போகட்டும். நாம் தொல்காப்பியர் காலத்திலோ, நம்பியகப்பொருள் ஆசிரியர் காலத்திலோ, பாட்டியல் காலத்திலோ வாழவில்லை. ஒன்றிற்குப் பின் ஒன்றாக அகப்பொருள் இலக்கணங்கள் தோன்றியதே, பிற்கால வாழ்க்கையில் புதிய உணர்ச்சிப் போக்குகளும் அவற்றின் வெளியீடுகளும் தோன்றியதற்கேற்பப் புதிய இலக்கண விதிகள் தோற்றுவிக்கப்படவேண்டிய அவசியம் நேர்ந்தது என்பதால்தானே!

தலைவன்தான் ஏற்றமுடையவன். அவனோடு ஊடினாலும், கற்பு அவளை அவனுக்குப் பணியச் செய்கிறது. ஆனால் பிரெஞ்சுப் புரட்சிக்கும் சோவியத் புரட்சிக்கும் பின்தோன்றிய சமத்துவம் என்னும் உயரிய கொள்கைக்காக மக்கள் புரட்சிகளை உருவாக்குகிற காலத்தில் காதலில் சமத்துவம் புகுந்து கொள்கிறது:

நான் மகரயாழ்!
உன் மணிக்கரம் தீண்டினால் போதும்
என்னால் உனக்குப் பெருமை வரும்
உன்னால் எனக்கு வாழ்வு வரும்

உணர்ச்சிகளின் சமத்துவம் இங்கே விளக்கம் பெறுகிறது. காதலுக்காக ஏங்கி, அதன் வருங்கால அழிவை எண்ணிக் கவலையுறும் கவிஞர், அக்கொடுமையை வருணிக்கக் கொடுமைகளில் எல்லாம் கொடுமையான ஏகாதிபத்தியக் கொடுமையை உவமையாகத் தேர்ந்தெடுக்கிறார்:

ஏகாதிபத்தியத்தின் கொடுமைக்கு இரையாகும்
ஓர் சிற்றரசைப்போல்
வாடி வருந்தும் என் மேனியைப் பார்

'காலங்கழித்து வராதே' என்று கூறும் காதலன்,

வாசலில் நின்றவாறு
உன் வீட்டையே நோக்குகிறேன்
எல்லையில் நின்றவாறு
நாடுகடத்தப்பட்ட ஒரு தேசாபிமானி
தன்நாட்டை ஏக்கத்தோடு பார்ப்பதைப் போல!

'சில்லான் கைதி' என்ற பைரனின் கவிதையும், 'லஜபதிராய் பிரலாபம்' என்ற பாரதியின் கவிதையும் தேசாபிமானியின் ஏக்கத்தை வருணிக்கின்றன. ஆனால் எல்லையில் நின்றவாறு, "தன் நாட்டை ஏக்கத்தோடு பார்ப்பதுபோல" இவை ஏக்கச் சித்திரத்தின் வளர்ச்சியைக் காட்டும் அழகுக்கோடுகள்:

புரட்சியில் மலர்ந்த சோவியத் பூமியின்
கூட்டுப் பண்ணைகளைப்
படங்களில் பார்த்து மலைக்கும்
ஓர் இந்திய உழவனைப்போல்
வியப்படைகிறேன்.

உழவனது பண்ணை ஏக்கம் (land hunger) பல முற்போக்கு நாவல்களின் கலைப்பொருளாகியுள்ளது. இங்கு 'நில ஏக்கம்' பிடித்த 'இந்திய உழவன் கூட்டுப்பண்ணைகளைப் படங்களில் பார்த்து' மலைக்கிறானாம். இது அவனது நில ஏக்கத்தைச் சமுதாய உணர்வாக உயர்த்தி, துண்டு நிலத்துக்குப் பதிலாக அவன் அடையவேண்டிய சமுதாய உயர்வின் குறிக்கோளாகச் சோவியத் பண்ணையைக் காட்டி, அந்த உன்னதமான சமுதாய ஏக்கத்தை, வேட்கையைக் காதலியின் அழகைப் பார்க்கும்போது காதலன் உள்ளத்தில் எழும் மலைப்புக்கு உவமையாகக் குறிக்கிறார்.

இக்காதலின் முடிவு சோகமாகத்தானே இருக்கவேண்டும். இது சமூக 'விதி'யை மீறிய மனித உணர்வல்லவா; பண மதிப்பை மீறுகிற மனித உணர்வின் எழுச்சியல்லவா? எனவே இதற்கு ஓர் அகால மரண முடிவு உண்டு. இராவணன் மரணம் போல, முத்துப்பட்டன் மரணம் போல, சாக்ரடீசின் மரணம்

போல, ஜூலியஸ் ஃப்யூசிக்கின் மரணம்போல, சாக்கோவான் செட்டியின் மரணம்போல, பகத்சிங்கின் மரணம்போல, பாலு வின் மரணம் போல காம்பீர்ய நாதத்தோடு முடிக்கிறார் கவிஞர். இம்மரண காம்பீர்யம் மனித உணர்வுகளை வாழ வைப்பதற்காக, மனித விரோத மதிப்புக்களைத் தகர்க்கும் சமுதாய விடுதலைப் போராட்டமாக, மனித மதிப்புக்களை மட்டும் அடிப்படையாக, Everything for man என்ற மனித சாசனப் பிரகடன முழக்கமாக, நமது உள்ளத்தைத் துடிக்கச் செய்கிறது.

நான் புறப்படப்போகிறேன்
என்று தெரிந்ததும்
என் நேயர்கள் எல்லோரும்
என் அருகில் வருத்தமாக நிற்கிறார்கள்;
ஜனசக்தியின் ஒளியில் அரும்பி
ஒரு மகாகவியாக
மலர்ந்து கொண்டிருந்த நீ
இடையில் இப்படி
ஒரு பலவீனத்தின் கரம்பட்டுக்
கருகிவிட்டாயே!
அந்தப் பாதையிலே வளர்த்த
வசீகரமான கனவுகளையும்
கற்பனைகளையும்
விட்டுச் செல்லுகிறேன்.

பண மதிப்பும் ஆதிக்க மதிப்பும் சமூக நியதிகளாகவுள்ள சமுதாயங்களில் இச்சோக ஒலம் காலம் காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இம்மனித உணர்வுகளே கவிதைகளாகின்றன. மனித இதயங்களை ஊக்குவிக்கின்றன.

மனித உணர்வின் இனிமையான, நளினமான காதல் வேட்கை, காதல் கனவு இவற்றால் ஏற்படும் கற்பனைகளே நுண்கலைகளின் பொருள்.

இது மரணத்தில்கூட, காம்பீர்யமான மனித கீதத்தோடு கண் மூடுகிறது. உலக மக்கள் பண மதிப்புடைய சுரண்டல் சமுதாயத்தை நொறுக்கி, அதனிடமிருந்து ‘மனிதனுக்கே எல்லாம்’ என்ற முழக்கத்தைப் பொறித்த கொடியேற்றிச் சோசலிசச் சமுதாயத்தைப் படைக்கிறபோது, மிகச் சிறந்த மனித மதிப்பின் வெளிப்பாடான காதல், இயேசு புத்துயிர் பெற்றது போலவும், அதற்கு முன் பருவத் தேவதையான ஆஸிரிஸ் ஆண்டுதோறும் இறந்து மறுபடியும் பிழைத்தது

போலவும், நைல் பெருகுந்தோறும் பலியிடப்பட்ட ஹோரஸ் மீண்டும் மீண்டும் உயிர்த்தெழுந்தது போலவும் மகத்தான வலிமையோடு உயிர்த்தெழும்.

இப்போதைக்கு, கனவு + கற்பனை = காகிதங்கள் தான். ஆனால் கனவு + கற்பனை = முழு மனித மதிப்பு என்னும் காலம், மனிதன் மனித உணர்வுகளோடு முழு மனிதனாக வாழ்கிற காலம் உலக முழுவதற்கும் வரத்தான் போகிறது. அதனை மனிதனே உருவாக்குவான்.

# கம்யூனிஸ்டும் கவிதையும்

"பரிணாமன் முதலில் ஒரு கம்யூனிஸ்டு, பிறகுதான் அவர் கவிஞர்" என்கிறார் மீரா. சதங்கையில் பரிணாமன் கவிதை களைப்பற்றித் தமது அலட்சியக் கருத்துக்களைச் சிதறி வைத் திருக்கும் இராஜமார்த்தாண்டன் "பரிணாமன் கம்யூனிஸ்டு என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் பல கவிதைகளில் அவர் கவிஞர் என்று காட்டிக்கொள்ளவேயில்லை" என்றெழுது கிறார்.

மீரா எழுதிய வாசகத்திற்குப் பொருள் உணர முடியாத இவர், சாதாரணத் தர்க்கவாதங்களைக்கூட அவரது மனம் கோணுகிற வழியில் கண்டு எழுதுகிறவர், கருத்தைப் புரிந்து கொள்ளாமலேயே தாக்குதல் தொடுக்கும் 'நேர்மை'யுள்ளவ ராகத் தோன்றுகிறார். உதாரணமாக, "உறவு முறையில் வைத்துச் சொல்லுவதானால் பரிணாமன் பாரதியின் மகன்" என்று மீரா சொல்லுகிறார். இதைப்பற்றி விமர்சக நீதிபதி என்ன சொல்லுகிறார் தெரியுமா? "கவிஞன் மகன் கவிஞனாகத் தான் இருக்கவேண்டுமா என்ன" என்று கேட்கிறார்.

தமிழ்க் கவிதையின் உள்ளடக்க வளர்ச்சி முறைமையில் பாரதியின் மரபைப் போற்றி, அரை நூற்றாண்டுத் தமிழகச் சமுதாய உறவுநிலை வளர்ச்சிகளை அறிந்து பாரதியின் இலக் கிய உள்ளடக்க, வடிவ மரபுகளை அவர் கவிதை மரபு வழியில், அவர் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து முன்னேறுகிறார் பரிணாமன் என்ற கருத்தில் மீரா இப்படி எழுதினார் என்று கூட, கவிதைபற்றி மீராவுக்கும் பரிணாமனுக்கும் போதிக்க வந்த புதுக்கவிதை விமர்சன மேதைக்கு விளங்கவில்லை. மகன் என்பதை எப்படி இவர் பொருள் கொண்டுள்ளார் என்பதைப் பார்த்தால், கவிதையையே இப்படித்தான் காண்பார் என்று நினைத்துச் சிரிப்பு வருகிறது.

முற்போக்கு, பிற்போக்கு என்ற சொற்களைக் கவிதை வடிவங்களுக்குப் பொருத்திக் கவிதையளவில் பிற்போக்காகப் பரிணாமன் இருக்கிறார் என்று குற்றம் சாட்டுகிறார்.

இது குரோத விமர்சனம் என்பது முதலில் "கம்யூனிஸ்டு என்பதில் சந்தேகமில்லை" என்ற சொற்களை 'சாட்சியங் களால் இவன் கொலையாளி என்பது சந்தேகமில்லாமல் நிரு பிக்கப்பட்டிருப்பதால் இவனுக்கு நான் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்' என்று கூறுகிற கோர்ட்டுகளின் வாசகம்போலக்

கூறுகிறார். அதுவே கம்யூனிஸ்ட், கம்யூனிசம் என்றால் உடனே இவரது துவேஷம் அறிவைப் பொசுக்கிவிடும் என்று நன்றாகவே விளக்குகிறது. கவிதையை இவர் துவேஷக் கண்ணாடியின் வழியாகவே காண்கிறார். இவர் கவிதையின் உள்ளடக்கம், அதன் வெளியீட்டு வடிவம் ஆகிய இவையிரண்டையும் சம்யோகமாக்கி, இரண்டை ஒன்றாக்குகிற ரசவாத அழகியல் முறை பற்றியும் கூறி, அவற்றிற்கெல்லாம் புறம்பாகப் பரிணாமன் கவிதையுள்ளது என்று விவாதித்திருந்தால், இவர் பரிணாமனுக்கு எதிராகத் தீர்ப்பளித்திருந்தபோதிலும் நான் இவர் நேர்மையையாவது ஒப்புக்கொண்டிருப்பேன். ஆனால் இவர் "கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சாரகன் என்ற நிலையிலேயே (பரிணாமன்) நின்றுவிடுகிறார்" என்று கூறுகிறார். ஒரு கவிஞனை மதிப்பிட முயலும் விமர்சகன் அல்லது ஆய்வாளன் தனது மதிப்பீட்டு அளவுகளை வாசகனுக்கு அறிவிக்கவேண்டாமா? தமிழ்நாட்டு விமர்சகத் தலையாரிகள் அப்படியொன்றும் செய்வதில்லை. கவிதை, கலை வெளிப்பாடு; அது உருவாகிறபோது பின்பற்றுவது அழகியல் விதிகளை. ஆனால் கவிதையை விமர்சிக்கும்பொழுது, காரணகாரிய நியாய தர்க்கமுறைகள், சிந்தனையை வழிப்படுத்தவேண்டும். இவையெதனையும் இந்த விமர்சகரின் எழுத்தில் காணமுடியவில்லையே.

பரிணாமன் பல்கலைக்கழகத்தினுள் நுழையாதவர். வீடு கட்டும் கொத்தனார். தாமே கற்று, நாட்டுப் பாடல்களைக் கேட்டுப் பாடிப் பழகி, தொழிலாளிகளின் வாழ்க்கையை, வாழ்ந்து, அறிந்து, அந்த அனுபவங்களையும் உணர்வுகளையும் பாட ஆரம்பித்தார். தொழிலாளியின் வாழ்க்கையுணர்வுகளையும் உலகில் முன்னேறிய தொழிலாளிகளின் முன்னேறிய உணர்வான சோசலிச உணர்வோடு இணைத்து, அனுபவத்தையும் இலட்சிய ஆர்வத்தையும் பிணைத்துத் தமக்குக் கைவந்த உருவங்களோடு ஐக்கியமாக்கிக் கவிதையாகப் பாடினார். உணர்ச்சிமிக்க உள்ளடக்கத்தைப் பாடல்களாகவும் சிந்தனையும் உணர்ச்சியும் ஏகதேசமாகக் கலந்த உள்ளடக்கத்தைப் 'புதுக்கவிதை'களாகவும் எழுதினார். நாட்டுப் பாடலின் உயிர்த்துடிப்பும் காப்பியக் கவிதையின் சிறப்பு அமைப்பு முறையும் புதுக்கவிதையின் சுதந்திரப் படிமப் பிரயோகங்களும் அவரைக் கவர்ந்தன.

தொழிலாளி, உழைப்பாளிகளுக்குச் சொல்லவேண்டிய செய்தியை (Message) அவர் பிசிறற்ற பாட்டாகவே பாடுகிறார். படித்தவர்களைச் சிந்திக்கத் தூண்டப் புதுக்கவிதை புனைகிறார். இப்படித்தான் பாடவேண்டும், இதைத்தான்

பாடவேண்டும் என்று உழைக்கும் மக்களின் பாவலனுக்குப் புதுக்கவிதைக்காரர்கள் கட்டளையிட முடியாது. அவர்களது மரபு இப்பொழுது பழைய மரபைவிட இறுக்கமான எழுதப் படாத, வரையறுக்கப்படாத ஆனால் புதுமரபாக ஒரு குழு வினால் ஒப்புக்கொள்ளப்பட்ட மரபாகிக் கனத்துப் போய் விட்டது. அதனால் அவர்கள் தமிழ்க் கவிதையில் பல்வகை மரபுகளைக் குப்பைத் தொட்டியில் எறிந்துவிடுவார்கள். யாப்பு விலங்கை ஒடிக்கிற சுதந்திரத்தில் தொடங்கி இருண்மை, படிமஉத்தி என்றெல்லாம் பேசி, அப்படியே எழுதிக் கடைசியில் கட்டுப்பெட்டியான புதுக்கவிதை மரபுகளையும் சம்பிரதாயக் குழுக்களையும் அமைத்துக்கொண்டுவிட்டார்கள். பொது எதிரியான மரபுக் கவிதையை நோக்கித் தங்கள் துப்பாக்கி களைச் சுடுவதை விட்டுவிட்டு இப்பொழுது தங்களுக் குள்ளேயே சுட்டுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். இப் பொழுது புதுக்கவிதைக்காரர்கள் கவிதை வடிவம் பற்றிப் பெரிய உள்நாட்டுப் போரைத் தொடங்கியுள்ளார்கள். ஆயினும் சமயம் கிடைக்கும்போதெல்லாம் மக்கள் கவிஞர் களின் காலை வெட்டத் தவறமாட்டார்கள்.

உழைக்கும் மக்கள் வாழ்க்கை, நல்வாழ்வுக்கான இயக்கங் கள், தியாகங்கள், லட்சியப் பிரகடனங்கள் எல்லாம், வாழ்க் கையில் எவ்வித லட்சியமும் இல்லாத, வாழ்க்கையைக் கணங் களாகப் பார்க்கிற, தொடர்பற்றதாகக் காண்கிற, புதுக் கவிதைக்காரர்களுக்குப் புரியாது. ஆனால் நீங்கள் பார்வை யுள்ளவனைக் குருடன் என்பீர்கள். ஏனெனில் நீங்களே குருடர்கள்.

புயலில் பிறக்கும் நமது பாடல்கள்
பூமியையே பற்றி உலுக்கட்டும்
கொதிப்பில் பிறந்த நம்
தத்துவத் தீப்பொறிகள்
இந்திய முதலாளித்துவத்தின்
கொழுப்பில் பற்றி எரியட்டும்!
நாளைய இந்தியாவின் தேசியக் கொடி
நமக்காகப் பறக்கட்டும்!

நமது நாட்டையாண்டு 28 ஆண்டுகளாக, ஒரு பக்கம் நமது நாட்டுச் சொத்துக்காரர்களின் செல்வத்தை வீங்கவைத்து, உழைப்பாளிகளின் உடலையும் உள்ளத்தையும் வற்றவைத்து ஆண்டு கொண்டிருக்கும் ஆட்சியாளர்களின் ஏமாற்றுப் பேச்சுக்களை அங்கதத்தால் சாடுகிறார் கவிஞர்:

விஞ்ஞான வளர்ச்சியால்
விளைகின்ற பயன்கள்
விண்ணை முட்டும்
ஆயிரம் ஆலைகள்
அணுமின் சக்தி
யந்திரக் குலங்கள்
அரசின் கேந்திர
அறிவாளிக் கூட்டம்
சுரங்கப் பொருள்கள்
தோண்டிடும் தங்கம்
கனிவளத் தாதுகள்
கடல்படு திரவியம்
சுதந்திர வியாபாரம்
சொக்கட்டான் அரசியல்
சொந்தம் எழுபத்து
இரண்டு மனிதர்க்கு
ஓடிவாருங்கள்
ஓட்டுப் போட்டிட
ஓட்டு முடிந்ததும்
உற்பத்தி பெருக்குங்கள்.

ஆளுகிறவர்களின் மாய்மாலத் திரையை, 'உற்பத்தி பெருக்குங்கள்' என்ற பிரசாரத்தின் போலித்தனத்தை, உற்பத்தி பெருகி, செல்வம் பெருகி, யாருடைய சொத்தாகிறது என்ற உண்மையை மறைக்கிற அரசியல் மூடுபனியை, எப்படி உண்மையெனும் ஒளியால் ஆவியாக்கிவிடுகிறான் கவிஞன். கடைசி நான்கு வரிகளில் அங்கதம் எப்படி வலுவாக ஒலிக்கிறது? "உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்றான் புதுயுகக் கவிஞன்.

ஏமாற்றப்படுகிற இந்திய மக்களுக்கு, ஏமாற்றின் உண்மை நிலை புரிகிறமாதிரித் தெளிவாக எழுதிவிடுகிறானல்லவா கவிஞன். இதில் இருண்மையில்லை, படிம உத்தி இல்லை, இறுக்கமில்லை, இன்னும் புதுக்கவிதையின் விலங்குகளான மரபற்ற மரபு இலக்கணத் தளைகள் இல்லை. அதனால்தான் இதில் கவிதைப் பண்பில்லை, கம்யூனிஸ்டுப் பிரச்சாரம் இருக்கிறது என்பார், கவிதை விமர்சக மன்னர். ஆனால் இப்படி இருக்கவேண்டும் என்று விரும்புவாரோ?

பிச்சைக்காரியின்
பிள்ளைகள்

பேசத் தொடங்கும் முன்னையே
விரைத்துச் சாகும்.
பசிக்கு வழிசொல்ல
பாஷையின்றி
இந்தக் கவிதை பேசத்
தொடங்குமுன்
வீசியெறிவாள்.
இந்தக் கவிதை உங்களுக்கும்
புரியாமலே போகட்டும்!

இதிலே உங்களது கவிதை இலக்கணத் தேவைகளெல்லாம் பூர்த்தியாகியுள்ளதா?

பசியைப்பற்றிப் பேசி, அதைப்பற்றிப் பேசிப் பயனில்லை, இந்தக் கவிதை விளங்காமலே போகட்டும் என்று முடிக்கிறாரே புதுக்கவிதைப் பேரொளி. இதை ஏன் எழுதுகிறார், இதை ஏன் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு விமர்சக மேதாவிகள் வாகைப்பாட்டுப் பாடுகிறார்களோ சிற்றறிவுடைய நமக்கு விளங்கவில்லை. இதிலும் அங்கதம் இருப்பதாக விரிவுரை எழுதுவார்கள். அது இருண்மையாக இருப்பதாகக் கதை விடுவார்கள்.

இருளில், வசியப் பேச்சுக்களைப் பேசிக் குழியில் வீழ்த்தப் பட்டிருக்கும் மக்களை ஏமாற்றுகிற, அவ்வசியப் பேச்சுக்களின் வஞ்சகத்தை எடுத்துக்காட்ட, பச்சையாகக் கவிஞன் உண்மை யைச் சொல்லி, அங்கத உத்தியால், அவர்கள் சொல்லின் ஏமாற்று அந்தரங்கத்தை விளக்கக்கூடாது; கூடாதென்றால் உங்கள் கவிதைகள் விளங்காமலே போகட்டும்.

பசியைப் பற்றியும் பசித்திருப்பவனது பிரலாபங்களைப் பற்றியும் கவிதை எழுதி, அக்கவிதை வீசியெறியப்படும், அது விளங்காமலே போகட்டும் என்ற கவிதையோடு பரிணாமனது பசி பற்றிய இரண்டு பகுதிகளை ஒப்பிட்டுப் பார்ப்போம்:

தொட்டிற் சனியன் தொடர்ந்தே அழுதது
தூங்கிய மனிதர்கள் சலித்தனர்
வட்டில் நோயால் தாயும் சேர்ந்தழ
வறுமை நோய்க்கு மருந்துகள் உண்டோ

பசி, உணர்வை அழிக்கிற கொடுமையைக் கூறிய கவிஞர் அதனோடு விட்டிருந்தால், புதுக்கவிதைக்காரரின் பசி ஓலத்திற் கும் இதற்கும் வேறுபாடில்லை என்று கூறிவிடலாம். ஆனால் பரிணாமன் பசிக்குக் காரணமான தனியுடைமைச் சமுதா

யத்தை உடைத்தெறிய, முன்னேறுகிற உலகப் பெரும் படையைச் சுட்டிக்காட்டி, அதன் வெற்றியால் உலகில் பசி ஒழியும் என்ற நம்பிக்கையைப் பசித்திருக்கும் ஏழை மக்களின் உள்ளங்களில் எழுப்புகிறார்.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழிக்கச் சொன்னான் பாரதி. ஜகத்தினை அழிக்கச் சொன்னான் ஆனால் இங்கே,

ஜகத்தினில் அனைவர்க்கும் உணவில்லை எனவே
அரசினை அழித்திடுவோம்—முதலாளி
அரசினை அழித்திடுவோம்.

'நமது கொடி'யும் அக்கொடி தாங்கிய உலக உழைப்பாளிகளின் படையும், முதலாளி அரசினை அழித்துப் பசியையும் ஒழித்துப் பல நாடுகளில் வெற்றி விழாக்கள் கொண்டாடியுள்ளன. அக்கொடியும் படையும் இங்கும் வெற்றிபெற, பசித்திருப்பவன், 'இன்றைக்கில்லை நாளைக்கில்லை' என்று புலம்பிக் கொண்டிராமல் பசித்துன்பத்தை, முதலாளி அரசை அழிக்கும் பேராற்றலாக மாற்றி, வறுமையையும் பசியையும் ஒழிக்க நடைபெறும் போராட்டத்தில் ஈடுபடுத்தப் போர் முரசு கொட்டுகிறான் கவிஞன். இதனால்தான் மீரா, இவனைப் பாரதியின் புத்திரன் என்கிறார். விமர்சக மேதாவியோ, "கவிஞன் மகன் கவிஞனாகத்தான் இருக்கவேண்டுமா?" என்று கருத்துப் புரியாமலோ, புரிந்தும் கிண்டல் செய்யவேண்டும் என்றோ கேட்கிறார்.

பரிணாமன் தான் இணைந்து கொண்டுள்ள உழைக்கும் மக்கள் வாழ்க்கையை, ஆர்வங்களை, இலட்சியங்களை எப்படிக் கவிதையாக்குகிறார் என்று காண்போம். அதிலே எத்தனை படிமங்களைப் பயன்படுத்துகிறார் என்றும் காண்போம்.

உலகு முழுவதும் வாழும் உழைப்பாளி, உலக மக்களை அழித்துவிடக் கூடிய போரைப்பற்றி என்ன நினைக்கிறான்? தனது சக தொழிலாளிகளுக்கு என்ன செய்தி விடுக்கிறான்? அமைதியின் அடையாளமான வெண்புறாவிடம் கவிஞன் உழைக்கும் மக்களின் குரலில் பேசுகிறான்:

கவிமனக் கதியென புவிமன எழுச்சியில்
கலந்திடு யுகப்புறாவே
தவளைகள் குரலொலி சரித்திர மடையுமோ
திரண்டெழு வெண்புறாவே

புவிமன எழுச்சி, உலகத்தின் மன எழுச்சி அமைதியைப் பாது காப்பது. தவளைக் குரல் போர் முழக்கம். தவளைக் குரல் சரித்திரத்தில் இடம் பெறுமோ என்று எதிர்மறை விடையுள் ளடங்கிய கேள்வியை யுகப் புறாவிடம் கேட்கிறார். யுகம், அமைதிச் சக்திகள் வெற்றி பெறுகிற காலகட்டம்.

இது கவிதையில்லையாம். ஏனெனில் இக்கேள்வியைப் பரிணாமன் என்ற கம்யூனிஸ்டுதான் கேட்டுக் கட்சிப் பிரச் சாரம் பண்ணுவாராம். இது உலக மக்களின் மனச்சாட்சியின் குரல் அல்லவா? உலக மக்களின் உணர்வு வெள்ளத்தினின்றும் சிந்தனையோட்டத்தினின்றும் விலகி நிற்கும் நடுத்தர வர்க்கச் சுதந்திரவாதிகளுக்கு உலகத்தின் மனச்சாட்சியைப் பற்றி என்ன தெரியும்?

'சாவேது' என்ற கவிதையால் உங்கள் உள்ளம் நெகிழ வில்லையா? அது கவிதையில்லையா? பங்களாதேஷில் பாகிஸ் தானியப் படை நாய்கள், குடும்பப் பெண்களைக் குதறிக் கடித்துத் துப்பவில்லையா? அவர்கள் நாட்டுப் பற்றோடு, அவர்களுக்குப் பணிய மறுத்தால் அவர்களை வேசிகள் எனக் குற்றம் சாட்டி, நிரந்தர வேசிகளாக்கவில்லையா? இது எங்கெல்லாம் நடந்தது என்று தெரியுமா? சுதந்திரப் போராட் டங்களில் தாய்மாரும் சகோதரிகளும் பங்குகொண்ட வியட் நாமில், ஆப்பிரிக்க நாடுகளில், சிலியில், செக்கோஸ்லாவாகியா வில், போலந்தில், ரஷ்யாவில், இந்தியாவில், ஏன் உலகெங்கும் ஆதிக்க எதிர்ப்புச் சுதந்திரப் போராட்டங்களில் தமது மக்க ளுக்கும் கணவர்களுக்கும் சகோதரர்களுக்கும் உதவிய மாதர் கள், ஆதிக்க வெறியர்களால் வேசிகளாக்கப்பட்டனர். உலகின் மனச்சாட்சியை எழுப்பிவிட, மனச்சாட்சியுள்ள கவிஞர்கள், கலைஞர்கள் எல்லாம், தங்கள் படைப்புகள் மூலம் இதனைக் கண்டித்தனர். வரலாற்றில் இவர்கள் சுதந்திரச் சக்திகளின் பக்கம் நின்றார்கள். ஆக்கிரமிப்புச் சக்திகளை எதிர்த்தார் கள். தாயையும் தங்கையையும் பாதுகாக்கக் கலையையே கருவியாக்கிப் போராடினார்கள். பரிணாமனும் அந்தக் கவிஞர்கள் மரபில்தான் பாடுகிறார். ஆனால் மார்த்தாண்ட னுக்கு இது கம்யூனிஸ்டுப் பிரச்சாரமாகத்தான் தெரியும். உலக மனச்சாட்சியின் துடிப்புகளுக்கு ஒப்பத் துடிக்கும் மனச்சாட்சி அவருக்கிருந்தால்தானே!

யாஹ்யாகான் வீதிகளில்
நம் தாய்கள் கற்பிழக்க
காகிதத்துக் கண்ணகிக்கு
சிலையெடுத்தா மகிழ்ந்திடுவீர்?

இதற்கு விளக்கமும் வேண்டுமா? இது நமது போலித்தனத் தினின்று நம்மை மீட்டு, உண்மையான நியாய உணர்வை எழுப்பவில்லையா? உங்களுடைய புதுக்கவிதை இலக்கணப் படி கவிதை வடிவம் அமையாததால் இது கவிதையில்லையா?

தனி மன உளைச்சல்களைக் கவிதையாக்கி, தேசத்தையும் உலகத்தையும் மறந்து, மனித இன உணர்வினின்றும், மனித இன விடுதலை ஆர்வத்தினின்றும் தம்மைத் துண்டித்துக் கொண்டு, தன் மனத்தே புதைந்து, தன்னையே தேசமாகவும் உலகமாகவும் கண்டு, தனது மாயா சுதந்திரமே மனித சுதந்திர மென நம்புகிற மனநோயாளிகளுக்குப் பரிணாமன் கவிதை கசக்கத்தான் செய்யும். மனித இனத்தின் மனச்சாட்சியாய் ஒலிக்கும் கவிதை அவர்களது தனிமனிதப் பேய்ப் படைப்புக் களை மாயையெனக் காட்டிவிடுகிறது.

> தேசத்திற்கு நாம் கிடைத்துவிட்டோம்
> ஆனால் இன்னும்
> தேசம் நமக்குக் கிடைக்கவில்லை!

இப்படி ஓர் ஏக்கத்தோடு நிறுத்திவிடுவார்கள் சமூக விமர் சனப் புதுக்கவிஞர்கள்.

தேசம் நமக்குக் கிடைக்க, நாம் செய்யும் முயற்சிகள் வீணாகாது என்ற நம்பிக்கை சுடர்விடப் பாடுகிறார் பரிணாமன்.

பரிணாமன் கம்யூனிஸ்டுதான். அதைச் சொன்னவுடன் ஒரு குடும்பப் பெண்ணை வேசியென்று திட்டிவிட்ட திருப்தியில் மனம் குளிர்கிற அற்ப மனம் படைத்தவனைப்போல 'ஆமாம் அவர் கம்யூனிஸ்டுதான், கவிஞனல்லன்' என்று பூரித்துப் போகி றார் விமர்சக மன்னர்.

பரிணாமன் கம்யூனிஸ்டுதான். உலக உழைப்பாளி மக் களின் பொதுவான இலட்சியங்களிலும் ஆர்வங்களிலும், தன் தனிமனிதத்தைப் பறிகொடுத்து விட்டவர் பரிணாமன். தன்னை உலகத்திலிருந்து பிரித்துக்கொண்டு, மகாபாரதப் போரில் இரண்டு படையிலும் இன்றி, இடையே ஓடுகிற பன்றி யைப் போல, மாபெரும் உலக சமுதாயப் போராட்டத்தில் கட்சி சேராமல் தனது மாபெரும் உள் மனத்தைக் களமாகக் கொண்டு பிளவுண்ட மனத்தின் இரு கூறுகளைப் போராட விட்டுச் சாவல் சண்டையில் குரூரக்களிப்படையும் பத்தொன் பதாம் நூற்றாண்டு ஜமீன்தார்களைப்போல இவர்கள் மனப் போர் நடத்திக் கொண்டிருக்கட்டும். ஆனால் உலக மக்களின் மூலபலப் படையோடு மோத தங்கள் கவிதையம்புகளை எய்

தால், அவையனைத்தையும் முறியடிக்க இப்படையின் தத்துவம் நிரம்பிய கவிதை அக்கினியஸ்திரங்களால் முடியும்.

உலக முதலாளித்துவ அமைப்பை மூழ்கடிக்கக் கிளம்பிய மாபெரும் தொழிலாளர் இயக்கமும் கம்யூனிஸ்டு இயக்கமும், உலகில் சிறந்த அறிவியலாளரிடையேயும் கவிஞர்களிடையே யும் தனது தத்துவப் பாதிப்பை ஏற்படுத்தி அவர்களது படைப்புகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளது. இன்று மட்டு மல்ல. ஜெர்மனியில் பாசிசம் தலைதூக்கிப் பல புரட்சிகளைக் கண்ட பிரான்சின்மீது பாய்கிறபோது ரொமெய்ன்ரோலந்து என்ற புகழ்பெற்ற நாவலாசிரியர், தம் நாட்டு எழுத்தாளர் களுக்கு ஓர் அறைகூவல் விடுத்தார். உலகிலுள்ள பாசிச எதிர்ப்புச் சக்திகள் விடுதலைப் போராட்டச் சக்திகளோடு இணைந்து நின்று பாசிசத்வையும், அதை வளர்த்துவிட்ட உலக முதலாளித்துவத்தையும் எதிர்த்துப் போராடும் உலக உழைப் பாளி மக்கள் படைக்குக் கட்டியம் கூறவேண்டுமென அழைத் தார். அப்பொழுது பிரெஞ்சு எழுத்தாளர்களில் மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாளிகள் பாசிச—முதலாளித்துவ எதிர்ப் பணியில் இணைந்து கவிதையை இயந்திரத் துப்பாக்கிகளாக் கிப் போராடினர். அக்காலத்தில், பாசிசம் பற்றிய கொள்கைக் குழப்பங்களை நீக்குவதற்கு உலக முற்போக்கு எழுத்தாளர்கள் தமது இலக்கியப் படைப்புகளை அர்ப்பணித்தனர். இக்காலத் தில்கூட உலக அரங்கில் போராடும் இரண்டு சக்திகளுக் கிடையே தமது அணியை நிர்ணயித்துக்கொள்ள முடியாத இலக்கியப் படைப்பாளிகள், அகமன உளைச்சல்களைப் போராடவிட்டுப் பார்த்து ரசித்து, உலகைவிட்டே விலகிப் போகின்றனர்.

பாசிசம் வெற்றிமேல் வெற்றிபெற்ற காலத்தில் ரொமெய்ன் ரோலந்தின் தீர்க்கமான குரலும், மாக்சிம் கார்க்கியின் தெளி வான குரலும் இணைந்து ஒலித்தன. மாக்சிம் கார்க்கி கம்யூனிஸ்டு. ரொமெய்ன் ரோலந்து கம்யூனிஸ்டல்லர். ஆனால் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து நின்று பாசிச அபாயத்தையும் உலக முதலாளித்துவச் சதிகளையும் எதிர்த்துப் போராட எழுத்தாளர்களைத் திரட்ட முன் வந்தார். அக்காலத்தில் இக் குரல்களுக்குச் செவிசாய்த்து உலகப் போரணிகளில் தமது ஸ்தானங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களை உலகம் இன்று நன்றியோடு நினைவில் வைத்திருக்கிறது. உலக மக் களின் சுதந்திரம், பாசிச அடிமை வாழ்க்கை என்ற இரு வருங் கால நிலைமைகளுக்காக நடந்த உலகப் போரில், அணி சேராத வர்களும், ஒரு நிலைமையென்ற பெயரால் மக்கள் அணியில் நிலைத்து நிற்காதவர்களும் அச்சமயம் உள்ளங்களுக்குள்

சுதந்திரப் பட்டிமன்றங்கள் நடத்திக்கொண்டிருந்தவர்களும் பாசிசத்தின் அடிமைகளாயினர்.

இந்த இலக்கிய வரலாறு எல்லாம் க்ஷணங்களில் வாழ்ந்து, க்ஷணத்தையே எழுத முயலுகிற இவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

அக்காலத்தில் இரண்டு கட்டுரைகளை மாக்சிம் கார்க்கியும் ரொமெய்ன் ரோலந்தும் எழுதினார்கள். அவை உலக எழுத்தாளர்களுக்கு ஓர் உண்மை விளக்கமும் அறைகூவலும் ஆகும். ஒரு கட்டுரை: 'கலை மன்னர்களே ஒன்றுபடுக!' எழுதியவர் கார்க்கி. மற்றொரு கட்டுரை: 'பின்தங்குகிறவர்களைச் சவுக்கால் அடித்து முன்னேறச் செய்வேன்.' இதை எழுதியவர் ரொமெய்ன் ரோலந்து, அக்கட்டுரையில் அவர் எழுதுவதாவது:

> உலகத்தில் அடிமைத்தனத்தையும் பாசிசத்தையும் ஒழிக்க முன்னேறுகிற சுதந்திர சக்திகள், சோசலிசமே உலக மக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகிறதென்பதை உணர்ந்து விரைகிற படையாக உருவாகி வருகின்றனர். இந்தச் சுதந்திர சோசலிசப் படை முன்னணியில் அப்படையின் சுதந்திர சோசலிச முழக்கத்தின் குரலாக, தத்துவ உணர்வூட்டும் மனச்சாட்சியாக எழுத்தாளர்கள் விளங்க வேண்டும். அவர்கள் இப்படைகளின் உணர்வு, சிந்தனைகளின் வெளியீடாக எழுதவேண்டும். அவ்வெழுத்துக்கள், உணர்வும் சிந்தனையும் இல்லாதவர்களுக்கு அவற்றை எழுப்பவேண்டும். இக்கடமையில் பின்தங்கும் எழுத்தாளர்களை என் எழுத்தென்னும் சவுக்கால் அடித்து முன்னேறச் செய்வேன்.

ரொமெய்ன் ரோலந்து 1934இல் சொன்னதைத்தான் பரிணாமன் சொல்கிறார். போர்க் குரல் சில சமயங்களில் கர்ண கடூரமாக ஒலிக்கும். இயற்கையழகையும் காதலின்பத்தையும் வெளியிடுகிற மென்மையும் இனிமையும் நளினமும் போர் முரசில் இராது. இதனால்தான் கடுமையும் வல்லோசையும் பரிணாமனின் கவிதைகளில் கேட்கின்றன. வல்லோசை போர்முரசின் ஓசை. சில சமயங்கள், உலக முற்போக்குப் போர்ப் படையிலிருந்து விலகிப் பின்தங்கும் 'அறிவாளி'களையும் படிப்பாளிகளையும் படையணியில் சேருவதற்காகக் கடுஞ்சொல் கூறி வாருங்கள் என்று அழைக்கிறார். பண்டைத் தமிழ்ப் புலவர்கள், தங்கள் சமயத்திற்கோ, கொள்கைக்கோ எதிரானவர்களைத் தங்களோடு சேர்த்துக்கொள்ள என்

னென்ன சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்கள்? சித்தர்கள் தங்கள் வழிக்கு மக்களைத் திரட்ட எப்படியெல்லாம் திட்டியிருக்கிறார்கள்? இந்தக் கவியுரிமையைத்தான் பரிணாமனும் பயன்படுத்தியுள்ளார். நமது 'மத்தியதர வர்க்க'ப் படிப்பாளிகளது அலட்சியத்தையும் கொள்கைப் பற்றின்மையையும் சுய நலத்தையும் போலிச் சுதந்திர முழக்கங்களையும் சாடுவதற்குக் காரணம் இதுதான்.

இன்றைய உலக அரசியலில் வெற்றிபெற்று வரும் மக்கள் சக்தியை உணராமல், தன் கைவிலங்கைப் பார்த்து அழுது கொண்டிருக்கும் நம்பிக்கையற்றவர்களைப் பார்த்து அவர்கள் நிலைமையை உணர்த்துவதற்குப் பாரதியின் 'அஞ்சியஞ்சிச் சாவார்' என்ற பாட்டின் வழியில் பரிணாமன் பாடுகிறார்:

கண்ணீர் வாழ்க்கையைப் புன்னகையாக்கும்
கருவி 'உழைப்' பென்றறியாமல்—கை
விலங்கை அறுத்து எறியாமல்
பன்னீர் மரம்போல் கண்ணீர் சொரிந்தே
பாதை இருந்தும் முழிக்குதடா—புதுப்
பார்வைகள் அற்றே அழியுதடா!

அதோடு விடாமல் நம்பிக்கையற்ற அவர்கள் மனதில் நம்பிக்கையை ஊட்ட அதனைக் குழந்தையாகப் பாவித்து ஒரு தாலாட்டும் பாடுகிறார்:

மூளையின் கரங்களின் விலங்குகள்
சுக்கு நூறாய்ப்
பொடிந்து சிதைந்து சாம்பலாய், பஸ்பமாய்ப்
பாதைப் பனிபோல் குவிகிறது
அந்த மலர் மணத்தில்...
மனிதமும் கலந்து
காற்றின் கணங்களாய் ஓர் நாள்
பிரபஞ்சம் நிறைந்து தளும்பும்!
அன்றுதான் கண்ணே...
துப்பாக்கியால் தொப்பூள் கொடி அறுபடாத
ஒரு யுகத்தின்
சுகப் பிரசவத்
தொட்டில்கள் தாலாட்டப்படும்
'நெருடா'வின் நாளங்கள்
நெய்த இசைகளும்

அந்த
புதிய யுகத்தின் புலன்களை வருடவரும்!

புதுக்கவிதைக்காரரது க்ஷண வாழ்க்கைத் தத்துவம், மனித குலத்தின் நீண்ட வரலாற்றைப்பற்றி அறியாமை, தற்கால உலக மக்களின் நல்வாழ்வுப் போராட்டம், இப்போராட்டத்தில் தத்துவ மோதல்கள், இவ்வுலகச் சூழல்களிடையில் தனது ஸ்தானம்—இது எவை பற்றியும் சிந்திக்காமல் சொற்சேர்க்கை, படிம உத்தி, இருண்மை, பழமை யாப்பு உடைப்பு முதலிய சில்லறைச் சாகசங்களில் பொழுதைப் போக்குகிற வடிவ ரசனைவாதிகளான புதுக்கவிதைக்காரர்களுக்குப் புதுக் கவிதைக் கடுகுதான் கண்ணுக்குத் தெரியும். அதிலே அவர்கள் தங்களுடைய தனித்துவத்தைக் கண்டுகொள்ளுகிறார்கள். மனித உணர்ச்சிகளின் முரண்பாடுகளையும் மனித சிந்தனைகளையும் தத்துவ மோதல்களையும் உள்ளடக்கிய உலக சமுதாயமென்னும் சமுத்திரத்தை அவர்கள் அறியமாட்டார்கள். மதத்தை ஒழிக்கக் கிளம்பி, ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தவனைப்போல, பழைமையின் யாப்பு மரபை ஒழிக்கத் தொடங்கி, ஒரு புதிய இறுக்கமான 'புதுக்கவிதை' மரபுகளை உருவாக்கி, அவற்றையே கடினமாக்கி, கூட்டுச்சிறையிலிருந்து தூக்குத் தண்டனை பெற்றுச் சிறைக்கு வந்து 'பழைமையிலிருந்து அது எவ்வளவு வேறுபட்டது' என்று அச்சிறை வாழ்க்கையைச் சகித்துக்கொள்ளும் தனிமைவாதப் புதுக்கவிதைக் காரர்களுக்குப் பரிணாமனது அகலமான — உள்ளடக்கம் பொதிந்த கவிதைகளை எப்படி ரசிக்க முடியும்?

# புதுக்கவிதை - பழமையும் புதுமையும்

புற்றீசல் போலப் புதுக்கவிதை பறந்து இறகொடிந்து, வீழ்ந்துவிட்டது போலத் தோன்றுகிறது. இக்குழப்பத்தில் ஆயிரக்கணக்கான படைப்புகள் தோன்றியுள்ளன. புதுப் போக்குகள் சிலவற்றை இனங்காண நான் முயலுகிறபோது கவிஞர்களையெல்லாம் வரிசையாகச் சொல்லிப் படைப்புகளை விமரிசனம் செய்யும் முயற்சியில் இறங்கப் போவதில்லை, ஆயினும் முற்றிலும் பெயர்களை ஒதுக்குவதும் இயலாத காரியம். எனவே எனக்குக் கிட்டியுள்ள சில தொகுப்புகளை வைத்துக்கொண்டு எனது கருத்துக்களைக் கூறுவேன். அவற்றில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இலக்கியத் தத்துவம் என்ன, அதனைக் கவிதையில் கடைப்பிடிப்பதில், தொகுப்பில் உள்ள கவிஞர்களின் கவிதைகளே வெற்றி பெறுகின்றனவா என்றும் ஆராய்வேன்.

'நாற்றங்கால்' தொகுப்பில் 'முன்னுரை' என்று தலைப்பிடாத மரபு மீறிய கவிதைக்கு முன்னுள்ள உரைநடைப் பகுதியில் ந. முத்துசாமி புதுக்கவிதையின் தன்மைபற்றி வரையறை ஒன்றைத் தருகிறார்:

> பழக்கப்பட்டுவிடுகிற மரபை மீறிக் கண்ட சுதந்தரம் தான் புதுக்கவிதை. புதிய மரபில் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதில்தான் புதுக்கவிதை இருக்கிறது.

இதில் இருந்து, புதுக்கவிதை மரபு மீறவேண்டும் என்பது அவர் கருத்து போலத் தோன்றுகிறது. அப்படியானால் அது எந்தக் கொள்கைக்கும் அகப்படாது; வரையறைக்கும் உட்படாது. பழைய மரபை அழித்துப் புது மரபாக மாறிவிடாமல் பாதுகாக்கவேண்டும். இவ்வளவுதான்.

கருத்து, உணர்ச்சி, நிகழ்ச்சி இவை பற்றிய அக்கறை எதுவும் புதுக்கவிதைக்கு இருக்கவேண்டாம். எந்தப் பழைய கருத்தாயினும் புதிய புதிய மரபு மீறிய கவிதை உருவங்கள் வேண்டும். அதாவது மொந்தைகளை உடைத்துக்கொண்டே இருக்கவேண்டும். இதுதான் நவீனத்துவ மரபு உடைப்புப் பணி.

கரு பற்றி, இந்நூலில் எழுதிய பகுதியில் நான் சொன்னது, இத்தொகுப்பில் உள்ள கவிதையனைத்திற்கும் பொருந்துகிறது.

மனித சக்தியில் நம்பிக்கையின்மை, சாதாரணத்துவமே வெற்றி பெறுகிறது என்ற அங்கலாய்ப்பை 'சிருஷ்டி' என்ற க. நா. சு. கவிதையில் காணலாம்:

அலுத்துப்போய்
கண்களிலே குருட்டுத்தனமும்
மனத்திலே ஒரு சிந்தனையில்லாமையுமாக
முத்திரைகளிலே முடிவு காட்டும் சக்தியும்
நடையிலே பெருமிதமும்
சொற்களிலே அடைமொழிகளுமாக
போக்கிலே சாதாரணத்துவமாக
ஒரு மனிதனை நடமாட விட்டேன்
அவன் எண்பது ஆண்டுகள் உயிர் வாழ்ந்தான்
அதில் முப்பது ஆண்டுகள் அறிஞனாகவும்
இருபது ஆண்டுகள் பேரறிஞனாகவும்
பதினைந்து ஆண்டுகள் மந்திரியாகவும்
நடமாடினான்.

படைப்பிலேயே சிறந்தவன், உயர்ந்தவன் என்றும் படைப்பிலேயே சாதாரணமானவன், வெளிப்பகட்டின்றி, பாமர மக்களைக் கவரும் இயல்புகள் வாய்ந்தவன் என்றும் இருவிதமாக மக்களைப் பிரித்து, சாதாரணத்துவம் வெல்லுகிறது என்றும் தனிமனிதத்துவ உயர்வுக் கொள்கை தோற்றுப் போகிறது என்றும் கண்ணீர் வடிக்கிறார் கவி. மனிதத்துவ மகத்துவத்தைச் சீர்குலைக்கும் பல கருத்துக்கள் தொகுப்பில் உள்ளன.

மனித இனம் தனக்குள்ளே போரிட்டு அழியும் என்ற கருத்தை க. நா. சு. 'விஜயதசமி' என்ற கவிதையில் வெளியிடுகிறார்:

மகிஷம் என்ற மனிதன்
மாயமறுத்து
மீண்டும் உயிர்பெற்றெழ
யுத்தம்
வரும்
வரும்
என்று
கனன்று அலுப்புற்று
இந்த விஜயதசமி அன்று
மகிஷம் என்கிற மனிதனை
மணந்து கொண்டு விட்டாள்

இனி யுத்தம்
ஒன்பது நாட்களுக்கு மட்டுமல்ல.

எவ்வளவு மனித வெறுப்புக் கவிஞனுக்கு. யுத்தத்தை மனிதன் மணந்துகொண்டு விட்டானாம்!

'மனித மேன்மை'யைச் சீரழிக்கிற இக்கவிஞர்கள் எலி வேட்டை, இந்த மாடுகள், நிழல் வேட்டை போன்ற அற்பமான கருக்களைக் கவிதையாக்குகிறார்கள். கருவில் பழைய சிலேடைக்காரர்களை நினைவூட்டுகிறார்கள். ஏதோ அற்பமான ஒரு விஷயம்பற்றி மனம்போன போக்கில் தோன்றுவதையெல்லாம் எழுதுகிறார்கள். தொடர்பாகச் சிந்திப்பது மரபு. தொடர்பில்லாமல் சிந்திப்பது மரபு மீறல். வண்ணாத்திப் பூச்சிகள், ஆமை, இவர்கள் என்று மூன்று கவிதைகளை ஒரு புகழ்பெற்ற புதுக்கவிஞர் படைத்துள்ளார்.

இதன் செய்தி (message) என்ன? வாசகன் எதை உணர வேண்டும் என்று கவிஞர் ஆழ்ந்து உணருகிறார்?

உண்ணாளிப்பிள்ளைக்குக் கண் வலி; நவீனன் செத்துப் போகிறான்; கேசவமாதவன் ஊரில் இல்லை; சிவனைப் பற்றித் தகவல் இல்லை. இறந்தவன் சாகுமுன்னர் தங்களிடம் சொல்லியிருந்தபடி அவன் நண்பர்கள் நீளமாக ஒரு குழி வெட்டி அவனை அதில் தலைகீழாக நிறுத்திவைத்து அடக்கம் செய்து விட்டார்கள். இனிக் கவிதை வரிகளையே தருவோம்:

எங்கும்
அமைதி சூழ்ந்திருக்கிறது. வெயிலில்
வண்ணாத்திப்பூச்சிகள் பறந்து
கொண்டிருக்கின்றன.

இவையெல்லாம் என்ன? நவீன சர்ரியலிசத்திற்கு ஓர் உதாரணமா? ஏதாவது தொடர்ச்சியான சிந்தனையிருக்கிறதா? ஒரு காட்சி, ஓர் இலை, ஒரு காய், ஒரு சிற்றோடை, ஒரு குயில், ஒரு பெண், ஓர் ஆண் இவற்றில் இருந்து தொடங்கிய சிந்தனை, மனநிலத்தின் வழியோடிப் பெரிய பிரவாகமாக உணர்ச்சிக்கடலை அடையலாம். To the Skylark, Nightingale, On a Gracian Urn, குயில் பாட்டு போன்றவை. ஓர் அடிமையின் கனவு—உழைத்து உழைத்து எஜமானனுடைய கொடுமைகளுக்கு உள்ளாகி, கசையடிபட்டு அகன்ற வயல்களின் கரையிலே சாகக்கிடக்கும் அடிமை கனவு காண்பதாக லாங்ஃபெல்லோ எழுதிய கவிதை, சாகக்கிடக்கிறவனுடைய ஆர்வம், சுதந்திர ஆர்வமாக, தன்னாட்டில் மன்னனாக வாழ்ந்து,

காதலித்து மண்ணைக் கிளறிய கனவாகத் தொடர்ச்சி குன்றாமல் வருணிக்கிறது. உலக மகா கவிதைகள் எங்கே, புதுக் கவிதை எங்கே? இதில் புதுக்கவிதை இலக்கணக்காரர்கள் விரும்புகிற இருண்மை இருக்கலாம். அழகியல் ரசிகன், சோகத்தைக்கூட ரசிக்கக்கூடிய திறமையுடையவன். கண்ணும் மூக்கும், உள்ளத்தின் ஜன்னல்களை மூடிக்கொள்ளும் அளவுக்கு நமது உணர்வுப் பாதைகளில் அருவருப்பை ஏற்றுகிறது.

'ஆமை' பற்றி அடுத்த கவிதை. படிமங்கள் எல்லாம் அருவருப்பைத் தோற்றுவிப்பன:

உடம்பு முழுவதும் ஒரு கொட்டாங்கச்
சிக் கூரை; விகாரமாக வெளித்
தெரியும் துளிக்கால்கள்; எட்டிப்
பார்க்கும் பாம்பு மூஞ்சி.

இவ்வளவுபோதும், மூன்றாவது கவிதை இவ்விரண்டு கவிதைகளின் தொடர்ச்சியாம். பிணமும் ஆமையும் கவிஞன் அறிந்த மனிதர்களது குணதோஷங்கள்; நம்மில் தோற்றுவிக்கும் அருவருப்பின் உருவங்கள். சுயநலமும் வஞ்சகமும் இவர்களது பண்புகள். உடைமை மோகம் இவர்களது வெறி. சாகிறவனைப் பார்த்து, 'இவன் ஏன் இன்னும் சாக மாட்டேன் என்கிறான்' என்று பொறுமையிழந்து நிற்கிறார்கள். இவர்கள் தங்களைப் போல் நல்லவர்கள் இல்லை என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

இவர்களுடன்தான் உறவுகளை வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. நாம் வாழும் உலகில்தான் இவர்களும் வாழ்கிறார்கள்.

ஆனால் ஒன்றும் சேதமில்லை
இன்றும் பூதங்கள் மனிதனைக் கண்டு
சிரிக்கின்றன. அது ஒன்று போதும்.

முதல் இரண்டு படிமங்களை வெறுப்புக் கொப்புளிப்பதற்காக உருவாக்கிய கவிஞன், அதே உணர்ச்சியை மனிதன் மீதும் செலுத்துகிறான். இவனது சொந்த அனுபவம் உணர்த்திய குறுகிய மனித இனம், மனிதத்துவம் கெட்டதாக இருக்கிறது. இதையே முழுமையான மனித இனம் எனக் கருதிச் சாபம் விடுகிறான் கவிஞன். 'மனித உடல் பூதங்களால் உருவானது' என்ற பழைய தத்துவக் கருத்தை மனதில் கொண்டு அவை மனிதனை நோக்கிச் சிரிப்பதாகக் கவிஞர் கூறித் திருப்தி அடை

கிறார். ஒருவேளை பூதம் என்பது பேயாக இருக்கலாமோ? பேய்த்தன்மை பெற்றுவிட்ட மனிதரைப் பார்த்துப் பேய்கள் சிரிக்கின்றன என்னும் பொருள் தானோ? 'இருண்மை' இங்கேயும் வாசகனை மருட்டுகிறது.

இன்னொரு பழைய போக்கு அரசியல் புதிர்கள். ஒரு கருத்தை முன்பின்னில்லாமல் சொல்லி நிறுத்தி விடுவது. ஒரு கருத்தின் வளர்ச்சி நிலையில் அதன் வருங்காலத்தைக் காண முயலாமல் அது மனதில் படும் நேரத்தில், அதைப்பற்றிப் பெரிதாக்கிக் கருத்தைச் சொல்லிவிடுவது. இவற்றைப் புதிர் கவிதைகள் என்று சொல்லிவிடுவது. இவை தற்கால நிலைபற்றி வெறுப்பை ஏற்படுத்துகின்றன. ஆனால் இதை மாற்ற முடியும் என்ற நம்பிக்கையை வாசகனுக்கு ஏற்படுத்துவதில்லை.

உடைமைச் சமுதாயம் படைத்திருக்கும் வக்கிரமான மனித குணங்களையே நிலையானதாக ஏற்றுக்கொண்டு, காலகாலமாக இதனை எதிர்த்து மனித வலிமையையும் மனிதத்துவத்தின் மேன்மையையும் போற்றிப் பாதுகாக்கப் போராடி வந்திருக்கிற மேன்மையான நல்மரபுகளைக் காணப் பார்வையில்லாத இப்போக்கு சமுதாய உணர்வில்லாத மிகப் பல கவிஞர்களிடம் நீடித்து நிலைத்துள்ளது. இதற்குச் சில உதாரணங்கள் தருவோம்:

**அர்த்தம்**

வழிக்காரர்
வீசிப் போவார்
கிடைத்ததைத்
தக்கையாய்
நான் மிதக்கும்
குளத்துக்குள்ளே
கலக்கித் தெளிவாக்கும்
வட்டங்களாய்
நீர்க்கோடுகள்
என்னைச் சுற்றி
எப்போதும்.

இருண்மை உத்தி முழுமையாய் இருக்கிறது. எதைக் குறித்து இவர் எழுதுகிறார்? அர்த்தம் என்பது தலைப்பு. சமூக உணர்வுடையவனுக்கு ஏதாவது புரிகிறதா?

வேறொன்று. பட்டங்கள் பற்றி. இது ஒரு வெற்று விமர்சனம். கோபக்காரக் கவிஞரின், வலுவற்ற கோபத்தின் வெளியீடு.

**பட்டம்**

தாலியிழந்த பெண்ணுக்கு
சமுதாயப் பல்கலைக்கழகம்
அளித்து கௌரவித்தது
விதவைப் பட்டமும்
வெள்ளைப் பொன்னாடையும்.

தாலியிழந்தவளுக்குச் சமுதாயம் அளிக்கிற பட்டங்கள் இவை. தெரிந்ததுதான். இதனைக் கண்டு கோபப்படுகிறார் கவிஞர். இது பல்கலைக்கழகங்களுக்குக்கூடப் பொருந்தும். பயனற்ற கல்வியை இவ்வாறு தாக்குகிறார். இந்நிலைமையை எதிர்க்கத் தாலியிழந்த பெண்ணுக்கு என்ன சொல்லுகிறார்? வெறும் புலம்பல்தானா அவளுக்குக் கதி?

இதே போல நிராசைகளை நிரந்தரமாக்கும் கவிதைகளே பெரிதும் வெளியாகின்றன.

**இயல்வது**

கோடை வரும்
புழுங்கலாய்
வியர்வையாய்
பிசுபிசுப்பாய்
தலை எரிப்பாய்
கால் தகிப்பாய்
மீண்டும் கோடை வரும்
கோடை வரும் காலமெல்லாம்
செருப்பு வாங்கும் ஆசை வரும்
கோடை போகும் வழியோடு
செருப்பும் சேர்ந்து கொள்ளும்.

இதில் இருண்மையில்லை. கருத்து தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது. நிராசைதான் கவிதையின் கரு. அது மட்டுமன்று. இயற்கையில் கோடை வந்து மனிதன் உடலை வாட்டுவது இயற்கை. அது செருப்பு வாங்கும் ஆசையை ஏற்படுத்தும். ஆனால் வாங்க இயலாது. கோடை போகும்போது செருப்பும் சேர்ந்துகொள்ளும்.

இதைப் பற்றி ஜீவானந்தம் ஒரு பாட்டுப் பாடியுள்ளார். 'காலுக்குச் செருப்புமில்லை' என்ற பாடல். கடைசியில் என்ன முடிவு கூறுகிறார்? காலுக்குச் செருப்பும் குண்டிக்குத் துணியும் வயிற்றுக்குக் கூழும் கொடாத இச்சமுதாயத்தை நொறுக்கித்

தள்ளி, எல்லோருக்கும் வாழ்க்கைத் தேவைகளை அளிக்கத் தகுதி வாய்ந்த சமுதாயத்தை நாமே உருவாக்குவோம் என்று நம்பிக்கையூட்டும் தொனியோடு பாடலை முடிக்கிறார்.

ஆனால் இந்த நிராசைக் கவிஞர், செருப்பில்லாத நிலைமை இயற்கை நியதிதான்; செருப்பு என்கிற ஆசை கோடை வந்ததும் தோன்றி, கோடை போனதும் போய்விடவேண்டியது தான் என்று கூறுகிறார். கோடை தோற்றுவிக்கும் உடல் உபாதைகள் போலத்தான் செருப்பு வேண்டும் என்ற ஆசையும் என்றுதான் கவிஞர் கருதுகிறார். இந்நிலை மாறவேண்டும் என்ற உணர்வைக் கவிதை தோற்றுவிக்கவில்லை. செருப்புத் தேவை என்ற ஏழையின் ஆசை, இயல்பாகவே கோடை போகும்போது மறைந்துவிடவேண்டியதுதானா? 'நிலைமையை மாற்றவேண்டும். மாற்றுவதற்குரிய உறுதிவேண்டும். இது ஒரு சமுதாயப் பிரச்சினை' என்ற சமுதாய உணர்வு சிறிதும் கவிஞருக்கு இல்லை.

இவைதான் புதிர் கவிதைகள். ஒன்று கோபக்கனல் தெறிக்க வெளிவரும் நறுக்குக் கவிதை. அல்லது இயலாமையை வெளிக்காட்டும் இது போன்ற நிராசைக் கவிதை.

ஆழ்ந்த உணர்ச்சியோடு, சமுதாயச் சீர்கேடுகளை எண்ணி எண்ணி அசைபோட்டு இயலாத்தனத்தைக் காட்டும் கவிதைகளை, சில புதுக்கவிதை இலக்கண மரபு அணிகளை அணிவித்து எழுதுகிற கவிதைகள் சமுதாய உணர்வு, மனிதநேசம், வரலாற்று நோக்கு இவையெதுவுமில்லாத கவிஞர்களது படைப்புகளாக வெளிவருவது குறையவில்லை.

ஆனால் சமூகக்குறைபாடு கண்டு குமுறுகிறவர்களிடையே, இப்போது மக்களின் சக்தியில் நம்பிக்கையும் வரலாற்று நன்னம்பிக்கையும் (historical optimism) தோன்றியிருக்கின்றன, இவை சில சமயங்களில் தெளிவாகவும் சில சமயங்களில் சந்தேக மேகங்களிடையே ஒளியாகவும் தோன்றுகின்றன, மிகவும் பிற்போக்கான—மனித வெறுப்பு இணைவிழைவுக் குறியீடு, புதுக்கவிதைகளில் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட இப்போது குறைந்திருக்கிறது. ஆயினும்கூட குதிரை ஏற்றத்தை மானிடப் புணர்ச்சிக் குறியீடுகளைக் கொண்டு விவரிக்க ஒரு கவிஞர் முயன்றிருக்கிறார்:

காற்றுப் பிதுக்கம் கிழிந்தது
ஆவியாகிக் கரைந்த
திட
திரவ

பாலுறவுச் சவாரி
குதிரையேற்றத்தில் உருவகமாகியது.

குதிரைச்சவாரி பற்றிய வருணனைகள் தமிழிலக்கியத்திலும் தமிழ்க்கதைப் பாடல்களிலும் எத்தனை எத்தனையோ உண்டு. கதைப் பாடல் மரபு ஒரு ஃபார்முலாதான். கவிதைகள் பற்பல விதமாகச் சுவையூட்டுவனவாக உள்ளன. ஸ்காட்டிஷ் கதைப் பாடல்களில் (ballads) குதிரையேற்றம் பற்றிய வருணனைகள் பலவிதமான சுவையுடையனவாக உள்ளன. இங்கு இவருக்குத் தோன்றியது பாலுறவுச் சவாரிதான்.

இந்தப் பட்ட மரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றுகிற புதிய ஜீவரசத்தைச் சமூக நிலத்தினின்றும் உறிஞ்சிக்கொண்டு வளருகிற மரங்களில், பலநிறப் பூக்களும் பூக்கத் தான் செய்கின்றன.

போலி அரசியல்வாதிகளைச் சாடுகிற கவிதைகள், சமூகச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டிப் போராட எழுச்சியூட்டும் கவிதைகள், வரலாற்று நன்னோக்கக் கவிதைகள், உடைமை யற்ற வர்க்கம் ஒன்றுபட்டுத் தங்களுக்கு இல்லாமையையும் தங்களை ஏமாற்றி வாழ்பவர்களுக்குத் தங்கள் உழைப்பின் விளைவு முழுவதையும் வழிமாற்றியும் கொடுக்கும் சமுதா யத்தை அழித்து, அந்த அழிவின்மீது சமத்துவம், உழைப்பின் உயர்வு, உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற அடிப்படையில் உலகில் அமைந்துள்ள சோசலிச முகாமில் உள்ள நாடுகளைப் போல நாமும் சோசலிசத்தை அமைக்க முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் கவிதைகள் தோன்றுகின்றன. இவை இப்போது முன்னர் தோன்றியதைவிட மிக அதிகமாகவே தோன்றுகின்றன. ஏனெனில் இவற்றை வெளியிடப் பல பத்திரிகைகளை இக்கொள்கையில் ஆழ்ந்த பிடிப்புள்ள இளைஞர்கள் தோற்றுவித்துள்ளார்கள். இவர்கள் இருண்மை யின் எதிரிகள்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலும் ஒளி உண்டாகும்

என்ற பாரதியின் நல்வாக்கை நம்புகிறவர்கள். இவர்களிலே கூடச் சிலர் சீரழிந்த சமுதாயத்தின் சாக்கடை நீரை அலசிக் கொண்டிருக்கிறார்கள். மார்க்ஸ் கூறியபடி, இந்த உலகத்தை எத்தனையோ முறை யார் யாரோ விமர்சித்தாகிவிட்டது. உலகை மாற்றுவது எப்படி என்பதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை அணுகுகிற சோசலிஸ்டுக் கவிஞர்களும் தோன்

றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களும் புதுக்கவிதை யின் தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு, புதுக்கவிதை உருவத்தைத் தங்கள் உள்ளடக்கத்திற்கேற்ப வளர்த்து வரு கிறார்கள்.

இவர்களிலே பொதுவாக மனிதனது வருங்காலத்தில் நம்பிக்கையுள்ள மனிதாபிமானிகள் உள்ளனர்.

ஏமாற்றுவோரை இனம் காட்டி மக்களை எச்சரிப்பவர்கள் உள்ளனர்.

சமூகத்தில் உழைக்கும் மக்களைப் பாதிக்கும் சமூக நிலை மைகளைச் சுட்டிக்காட்டி இந்நிலை கண்டு நம்பிக்கை தளராமல் இருக்க நம்பிக்கையூட்டுபவர்களும் இருக்கிறார் கள்.

மக்கள் மீது கொண்டிருக்கும் அன்பினால் அவர்கள் துன்பப்படக் கூடாது நன்மையே விளையவேண்டும் என்று காரண காரியத் தொடர்பு அறியாமல் விரும்புபவர்களும் இருக் கிறார்கள்.

தற்காலச் சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்து போராடிக் கொண்டிருப்பதையும், இதன் தோற்றம், வளர்ச்சி, தற்கால நிலைமை ஆகியவற்றையும் அறிவியல் பூர்வமாக அறிந்து இந் நிலையில் ஏற்பட்டிருக்கும் பண்பாட்டுச் சீரழிவுக்குக் காரணம் கண்டு, இச்சமூகத்தையே மாற்றியமைக்கவேண்டுமென்ற உறுதி யோடு பாடுவோரும் உளர்.

முதலாளித்துவ ஜனநாயகத்தைப் பல புதிய முறைகளில் சாடுகிற கவிதைகள் பூத்து வாடிப் போகின்றன.

குரங்கின்,
குரங்குகளால்,
குரங்குகளுக்காக.

என்ற தலைப்பில் ஒரு கவிதை. இத்தலைப்பே ஆப்ரகாம் லிங்க னது 'ஜனநாயகம்' என்ற வரையறையின் அங்கதம் (parody) ஆகும். குரங்குகள் கட்டுப்பாடில்லாமல் ஓடிக்கொண்டிருக் கின்றன. அவற்றில் ஒரு கடுவன், சூலுற்ற மந்தியின் பின் போகும். வேறொரு கிழட்டுக்கடுவன் (ஆண் குரங்கு) பப்பாளிப் பழம் கடிக்கும். கண்ணாடி, கண் மை டப்பி, சிணுக்குவாரி எல்லாம் ஜன்னலோரச் சந்தெல்லாம் ஒளிந்துகொள்ளுகின்றன.

தங்கரளிப்பூக்கள் மட்டும்
எதிர்பார்க்கும் தேன்குடிக்க.

நமது குழப்பமான 'அவனவன் சுருட்டினது அவனவன் உடைமை' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும் நமது முதலாளித்துவ அமைப்பில் குரங்கு கைப்பட்ட உபயோகப் பொருள்கள் போலச் சமுதாயம் சீரழிய, உபயோகமற்ற தங்கரளிப்பூக்கள் மட்டும் தேன் குடிக்க எதிர்பார்க்கும். பயனெதுவுமற்ற கண்ணை மயக்குகிற தங்கரளிப்பூக்கள் போன்ற பிரிவினர் தேன் குடிக்கக் காத்திருக்கிறார்கள். இதில் satire இருக்கிறது. கோபம்கூட நமக்கு வரவில்லை. சமுதாயமே கேலிக் கூத்தாகக் காட்டப்படுகிறது.

'விமர்சனம்—விமர்சகன்' என்றொரு கவிதை:

வேலைக்காரியைக் குறை
சொல்லி
மாமியார் அவல் இடிக்க
உமி ஊதி ருசி பார்த்து
ருசி பார்க்க உமி ஊதி
எஞ்சியது
உரலும் உலக்கையுமே.

இது படைப்பாளியை எடுத்ததற்கெல்லாம் குறைகூறும் தமிழக இலக்கியத் தலையாரிகளைப் பற்றிய கவிதை. நல்ல அங்கதம். இங்கு satire சரியாகவே விமர்சகனைத் தாக்குகிறது.

உமி ஊதி ருசி பார்த்து
ருசி பார்க்க உமி ஊதி

என்ற வரிகள் தான்தோன்றி விமர்சகர்களின் விமர்சனத் தன்மையை அங்கதப் பான்மையோடு ஒரு வாக்கியத்திலுள்ள சொற்கோப்பைச் சிறிதே மாற்றி, இலக்கியப் படைப்பு முழுவதையுமே ஊதித்தள்ளி விடுவதை எரிச்சலுடன் எழுதுகிறார் கவிஞர்.

'காலம் எல்லாவற்றையும் சரிசெய்து விடும்' என்ற நம்பிக்கையைச் சமூகத்தின் வாட்டி வதைக்கப்படும் உழைக்கும் மக்களுக்கு உபதேசமாய், 'பூக்கள்' என்ற கவிதையில் கூறுகிறார் ஒரு கவிஞர்:

ஆனாலும் எனக்கு நம்பிக்கை இன்னமும் இருக்கிறது
சத்தமே போடாமல் கண்களை மூடிக்கொண்டு
கொஞ்சம் பொறுமையாய் இருந்தோமானால்
காலம் எல்லாவற்றையும் சரிசெய்து விடும்

இலைகள் துளிர்த்துப் பசுமையாகி
பூக்கள் மறுபடியும் பூக்கும் அதே இனிய
வாசனையோடு

பூவைப்பற்றிப் பேசினாலும், வாழ்க்கையைத்தான் பேசுகிறார் என்பது கவிதையில் தெளிவாகிறது. காலம் தானே மாறும்; நாம் பொறுமையாயிருக்கவேண்டும்; எதுவும் நாமாக முயற்சி செய்ய வேண்டியதில்லை; கோபம் கூடாது. நீண்ட நாட்களாகச் சுரண்டல் வர்க்கங்களின் உபதேசியார்கள் துன்பக் கடலில் மிதக்கும் உழைக்கும் மக்களைப் பார்த்துச் சொல்லும் அறிவுரைகள்தாம் இவை!

பண்டைய 'வள்ளல்' மதிப்புகளை மாற்றும் ஒரு புதிய பாரியை நடக்க வைத்து, அவனது வர்க்கத் தன்மையை வெளிப்படுத்தி, புதிர் பாணியிலேயே, மரபுக்கு விரோதமான உள்ளடக்கம் கொடுத்து தலைப்பில்லாமல் ஒரு கவிதை எழுதியிருக்கிறார் ஒரு கவிஞர்:

நடந்தான் பாரி
நடந்தான் பாரி
நடந்த மக்களின்
தோள் மீதேறிய
சிவிகைச் செல்வர்
செலுத்திய வரியால்
உருவான தேரைக்
கொடிக்கு நிறுத்தி
முதல் தடவையாக
நடந்தான் பாரி.

பாரி சங்கப் புலவர்களால் பெரிதும் போற்றப்படுபவன். சமீப காலம்வரை தமிழ் நாட்டின் ஒரு சில அரசியல்வாதிகளும் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றுபவர்களாகத் தம்பட்டம் கொட்டிக் கொண்டவர்களும் பாரியின் வள்ளல் பரம்பரையில் தாங்கள் வந்ததாகவும், அதுவே தமிழர் பரம்பரை என்றும் முழங்கி வந்தார்கள். பண்டைப் பாரியும் தேரைக் கொடி படர்வதற்காக விட்டுவிட்டு நடந்துபோய் புலவர் வாயால் புகழப் பெற்றான். இவன் இதற்கு முன் நடந்திராதவன். அவனைப் பற்றியதோர் புதிய மதிப்பை (value) இரண்டு செயல்களைக் குறிப்பிட்டுக் கவிஞர் ஏற்படுத்துகிறார். சங்க காலப் பாரிபற்றி 'வள்ளல்' என்ற மதிப்பையே புலவர்கள் உருவாக்கியிருந்தனர். அந்தப் பாரியைப் பற்றிச் சமூக மானிடவியல்

கண்ணோட்டத்தில், பண்டைப் புலவர் காணாத சமுதாய உண்மையைப் புதுமைக் கவிஞர் காண்கிறார்:

நடந்த மக்களின்
தோள் மீதேறிய
சிவிகைச் செல்வர்
செலுத்திய வரியால்
உருவான தேரை

சிவிகைச் செல்வர் செலுத்திய வரியால் உருவானது தேர். இச் சிவிகைச் செல்வர் நடக்கிற மக்களின் தோள் மீது சவாரி செய்கிறார்கள்.

இது புதிர் கவிதை அமைப்புத்தான். உள்ளடக்கம் சமூக மானிடவியல், பொருளாதாரவியல், வரலாற்றியல் அறிவுகளையெல்லாம் குவித்து, பாரியின் பழைய சமூக மதிப்பை மாற்றி ஒரு புதிய சமூக மதிப்பை இக்கவிதை விளைவிக்கிறது.

பற

அறைக்குள்ளே வைத்த
கையகலக்கண்ணாடி கொத்தும்
சிறுகுருவி ஆகாமல்
அந்தரத்தில் பறக்கும்
விண்வெளி வீரனாய்
சந்திரனைக் கொத்து.

புதிர் கவிதையமைப்பில் வேறொரு கவிதை இது. புழுதியில் புரளாமல் மனத்தைச் சந்திரனுக்குப் போகச் சொல்லுகிறார் பாரதி. அதே கருத்தைப் பின்பற்றிப் புதிய படிமத்தைப் படைத்து, கையகலக் கண்ணாடியைக் கொத்தாமல், (பாரதி காலத்தில் தோன்றாத) விண்வெளி வீரனாய் சந்திரனைக் கொத்த ஏவுகிறார் கவிஞர். மிகவும் அற்பமான செயல் புரியும் மனிதன் மாபெரும் செயல்கள் செய்யும் மாமனிதனாக வளர வேண்டும் என்ற ஆர்வம் கவிதையில் வெளிப்படுகிறது.

நம்பிக்கை ஒளியைப் பரப்பும் ஒரு கவிதையை 'துலாபாரம்' என்னும் தலைப்பில் ஒரு கவிஞர் எழுதியுள்ளார்:

15 ஜன்னல்வழி புதுக்காற்று
ஓடையிலே புதுவெள்ளம்
இருள் குளித்தெழுந்து
சூர்யப் பொட்டிட்டுக் கொள்ள

எங்கெங்கும் ஒளிப்பூச்சு
செங்கதிர்கள் பரவலாச்சு.

16 எந்தத் துலாபாரத்திலும்
எனது தட்டே தாழ்கிறது.

பலவகைப் படிமங்கள் முதல் 14 கவிதைகளில் சமூகச் சீரழிவைக் காட்டுகின்றன. முடிவில் நம்பிக்கையொளி சுடர்விடுகிறது. கடைசி வரிகள் 'மனிதனைப் போலொரு வல்லமையுள்ள சக்தி யில்லை' என்ற கார்க்கியின் வாசகத்தை ஒத்திருக்கின்றன. இங்கே மனித சக்தி செயல்பட்டு வெள்ளம்போல் பாய்ந்து பழைய சமூகக் குப்பைகளை அடித்துச் செல்லும் என்று கவிஞர் சொல்லவில்லை.

'முடிவுகள்' என்ற இன்னொரு கவிதையில் மனித முயற்சி யின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது:

எதிர்பார்த்த வசந்தத்தின்
வாசலில் நின்று
கதவுகளைத்தட்டு—
திறக்கப்படாவிடில்
உடைத்தெறிந்து
உள்ளே செல்.

இலையுதிர் காலத்தில் மரத்தடியில் அமர்ந்து கீழே விழும் இலைகளை எண்ணிக் கொண்டிருந்தால் வசந்தம் வந்து விடுமோ? பழமையில் மூழ்கி செயலற்றிருக்கும் சமூகப் பிரிவு களை இவ்வரிகள் குறிப்பிடுகின்றன (இது மேற்கோள் காட்டப்பட்ட பகுதிக்கு முந்தியது). வசந்தம், மக்களது நல் வாழ்வைக் காட்டும் குறியீடு. நல்வாழ்வுக்காகத் 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற முதுமொழிக்கு எதிர்ப்பாகத் 'தட்டு, திறக்காவிட்டால் உடைத்தெறிந்து உள்ளே செல்!' என்று கவிஞர் மனித முயற்சித் தேவையைச் சுட்டிக் காட்டுகிறார். தனி ஆர்வங்கள், கூட்டு ஆர்வமாக ஒன்று கூடும்போது சூறா வளிக்குரிய பெருவலிமை பெறுகிறது. திறக்காத கதவும் திறக்கப்படும்.

இதனை வெளிப்படையாகவே சொல்லுகிற கவிதைகள் உள்ளன. இக்கவிதைகள் தொகுப்புகளாகவும் வெளியாகியுள் ளன. பாரதி விழா போன்ற விழா நாட்களில் புரட்சிகரமான ஜனநாயகக் கவிதைப் பாதைக்குப் பலவிதத் தத்துவப் போக் குடையவர்கள் வருகிறார்கள். பாரதி ஒளியில் இவர்களுடைய

கவிதைகள் மெருகு பெறுகின்றன. சிறு பத்திரிகைகளில் முற்போக்காளர் செல்வாக்கு மிக அதிகமாகிறது. முற்போக்கு அணியில், உண்மையான மனிதநேசம், சமூக விமர்சனம், சமூக மாற்ற நுண்ணோக்கு, புரட்சி ஆர்வம் ஆகிய இயல்புகளுள் ஏதாவது ஒன்றுடைய கவிஞர்கள், சமூககதியின் செல்வாக்கினாலும் உழைக்கும் மக்களின் புரட்சிப் பெருவெள்ளத்தின் தாக்கத்தாலும் விரைவான சமூக மாற்றங்களால் தோன்றுகிற சமூக உணர்ச்சியாலும் இவையனைத்தையும் புரிந்து கொள்ளத் தேவையான பொருள்முதல் வரலாற்றுத் தத்துவ ஞானமும் பெற்று சோசலிஸ்டு ரியலிசப் பெருங்கவிகளாக மலர்வார்கள். இந்த நம்பிக்கை எனக்குண்டு.

சோசலிசம் என்ற குன்றின் மீதிட்ட சூரியனை நோக்கி வழி தேடி நடக்கிற கவிஞர்களனைவரும் கடைசியில் உலக மாந்தரனைவருக்கும் பொதுவான இலட்சியத்தில் ஒன்றுபடுகிறார்கள்.

தத்துவ நிலைகளிலும் இலக்கியக் கொள்கை நிலைகளிலும் படைப்பு முறைகளிலும் வேறுபடுகிற கவிஞர்கள், சமுதாய இயக்கத்தின் ஒத்திசைவு லயத்தோடு சேர்ந்து முன்னேறி, சோசலிஸ்டுக் கவிஞர்களாக மாறுவார்கள். இவர்கள் பல்வேறு குழுக்களாகச் சேர்ந்து கவி பாடி, குழு எல்லைகளை உடைத்துப் பெரிதாக்கிக்கொண்டு, தனியுணர்வைத் தாண்டித் தத்துவ ஒளியால் பொது உணர்வு பெற்று மாபெரும் போராட்டப் படையாக உருவாகிக் கவிதைகளை நவீன ராணுவத்தின் விமானக் குண்டுகளாகச் சமைத்துக்கொண்டு முன்னேறுவார்கள். எதிரிகளது தத்துவக் கோட்டைகளை அழித்து, மக்கள் தத்துவமான மார்க்சீயத்தைச் சுவரில்லாக் கோட்டையாக, காந்த மண்டலக் கோட்டையாகக் கட்டுவார்கள்.

இக்கோட்டைக்கு அடித்தளமாக வர்க்கங்கள் இல்லாத, சுரண்டுதல் இல்லாத, பிறப்பினில் வேறுபாடு இல்லாத, உழைப்பைப் பெருமையாகக் கருதும் சோசலிசச் சமுதாயம் விளங்கும்.

அப்போது, மனித நலனுக்குகந்த ஒரே குறிக்கோளின் பல்வேறு கூறுகளை, ஆயிரக்கணக்கான இசைக் கருவிகளை மீட்டி ஆயிரம் விதமாக நமது கவிஞர்கள் பாட்டிசைப்பார்கள். 'செவியராவி'யாகப் போர்ப்பரணி முழக்கம், முதலாளித்துவக் கோட்டைகள் தகர்க்கப்பட்ட பின் மக்கள் எழுப்புகிற நல்வாழ்வு மாளிகைகளுக்கு வரவேற்புக் கூறும். வீணை நாதம் போல இனிமையாகவும் நாதசுவர இசை போலக் கம்பீரமாகவும் ஒலிக்கும்.

கவிதையனைத்தையும் மனிதனது நல்வாழ்வுப் போராட்டத்திற்கும் நல்வாழ்வு நிருமாணத்திற்கும் பயன்படுத்துவோமாக.

அவனது உறுதியைக் குலைக்கும், வேகத்தைத் தடுக்கும், கொள்கைப் பிடியைத் தளர்த்தும் கூக்குரல்களின் உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவோம்.

கவிதையனைத்திற்கும் நாயகன் மனிதன். சமூகத்தில் வாழ்ந்துகொண்டே அதனை மாற்றிக்கொண்டிருக்கும் மனிதன், உலக முழுவதையும் தலைகீழாகப் புரட்டும் வல்லமையுடையவன். உலகின் பல பகுதிகளில் தனது தகுதிக்கேற்றதாக இல்லாத அற்பமான சமுதாய அமைப்புகளை உடைத்தெறிந்து, மனித கௌரவத்திற்கேற்ற நல்லமைப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறான். உலக சோசலிஸ்டு அணி உருவாகி வளர்ந்து வருகிறது. இதுவே உழைக்கும் மக்களுக்கு ஒளிபரப்பும் சூரியன். மக்களின் நல்லார்வங்கள் வளரப் பாடுவோம் நாம்.

மக்களுக்குத் தீமையையே பரப்பும் இச்சமுதாய அமைப்பை வேரோடு சாய்ப்போம். சாய்க்கும்போதே புதிய சமுதாயத்தின் அடிப்படைகளை அமைப்போம்.

உலக முழுவதும் மக்களிடையே நேசம் பரவவும், உலக மகாகவிகளின் கனவான எல்லோரும் எல்லா இன்பமும் பெற்று வாழும் நிலை தோன்றவும், இக்குறிக்கோளுக்காகப் போராடுகிற போர்ப்படைக்கு ஊக்கமளிக்கவும் நாம் நமது கவிதையை இசைப்போம்.

இதனைப் பிரச்சாரம் என்பவர்களைப் பார்த்து, மக்களது இன்ப வாழ்க்கைக்குப் பிரச்சாரம் செய்வது பெருமைப்படத்தக்கதோர் செயல் என்று மனத்துள் நினைத்து ஏளனப் புன்னகை புரிவோம்.

அனைத்து மக்களின் நல்வாழ்க்கை, நற்பண்பாடு, நற்கலைகள் எல்லாம் வளர்க்கக் கவிதையை வளர்ப்போம்.

**நமக்குத் தொழில் கவிதை**
**நாட்டுக் குழைத்தல்**
**இமைப்பொழுதும் சோராதிருத்தல்.**

## பேராசிரியர் நா. வானமாமலை அவர்களின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | மார்க்சிய அழகியல் | 25-00 |
| 2 | உரைநடை வளர்ச்சி | 16-00 |
| 3 | தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டக் கருத்துக்கள் | 15-00 |
| 4 | வஉசி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி | 15-00 |
| 5 | பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும் | (அச்சில்) |
| 6 | இலக்கியக் கொள்கைகள் | (அச்சில்) |

## பிற நூல்கள்

| | |
|---|---|
| திராவிட இயக்கக் கருத்துநிலையின் இன்றைய பொருத்தப்பாடு-ஒரு வரலாற்று நோக்கு<br>கார்த்திகேசு சிவத்தம்பி | 20-00 |
| ஈழத்து இலக்கிய முன்னோடிகள்<br>க. கைலாசபதி | 16-00 |
| மந்திரமும் சடங்குகளும்<br>ஆ. சிவசுப்பிரமணியன் | 50-00 |
| நாஞ்சில் நாட்டு முதலியார் ஓலைச் சுவடிகள்<br>அ. கா. பெருமாள் | 20-00 |
| வஉசியும் பாரதியும்<br>ஆ. இரா. வேங்கடாசலபதி | 30-00 |
| வஉசியும் திருநெல்வேலி எழுச்சியும்<br>ஆ. இரா. வேங்கடாசலபதி | 10-00 |
| தற்காலத் தமிழ் இலக்கியம்<br>ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் | 12-00 |
| கொங்கு நாட்டுப்புறப் பாடல்கள்—2<br>க. கிருட்டினசாமி | 20-00 |

## அச்சில்

ஆஷ் கொலையும் இந்தியப் புரட்சி இயக்கமும்
ஆ. சிவசுப்பிரமணியன்

சோழர் காலம்—கட்டுரைகள்
மே. து. ராசு குமார்